Koviloor Digital Library

4-2 601

பகவான் ஸ்ரீக்ருஷ்ணன்

(கதைகள்)



A-No: 3311
031,3

ஸ், கோரக்பூர்

Koviloor Digital Library

Koviloor Digital Library 4-2

919.

ஸ்ரீஹரி:

பகவான் ஸ்ரீக்ருஷ்ணன்

(கதைகள்)

உடுகாவி லூர்
KOVILOOR
MADALAYAM
மடாலயம்

3311
031,3

கீதாப்ரஸ், கோரக்பூர்

Koviloor Digital Library

ஸ்ரீஹரி:

முதல் பதிப்பு: 1994 பிரதிகள்: 5, 000

விலை: ரூ. 4.00

தமிழாக்கம்: 'நந்தலா'
செங்கல்பட்டு.

கிடைக்குமிடம்:

கோபால் சேவா ட்ரஸ்ட்,
82, கிருஷ்ணா டாக்கீஸ் ரோடு,
ஈரோடு - 638 003.
தொலைபேசி: 212902, 211668.

வெளியிடுபவர்:

கோவிந்தபவன் கார்யாலயம்,
கீதாப்ரஸ்,
கோரக்பூர் (உ.பி.)

பதிப்பாளர்: கீதாப்ரஸ், கோரக்பூர் - 273 005.

Koviloor Digital Library

4-2

பணிவான வேண்டுகோள்

நமது முன்னோர்களான மஹாத்மாக்களைப் பற்றியும், பகவானின் அவதாரங்களைப் பற்றியும், அவர்களின் சரிதத்தின் முக்கியமான நிகழ்ச்சிகளையும் சிறார்களுக்குத் தெரிவிக்கும் நோக்கத்தில் **"பகவான் ஸ்ரீக்ருஷ்ணன்"** என்ற புத்தகம் முதலில் வெளியிடப்படுகிறது. இதிலிருந்து கண்ணனின் உன்னத லீலைகளைத் தெரிந்து கொள்ள முடியும். வாழ்க்கைக்கான அறிவுரைகளைப் பெறுவதோடு, மனமகிழ்ச்சியும் பெறலாம். சிறுவர்-சிறுமியர் இதைக் கற்றுப் பெரும் பயனடைய வேண்டும் என்பதே எமது பேரவா.

- வெளியீட்டாளர்.

Koviloor Digital Library

பொருளடக்கம்

என்		பக்கம்
1.	கம்ஸனின் கொடுமை	5
2.	பகவான் ஸ்ரீக்ருஷ்ணனின் அவதாரமும், கோகுலத்திற்கு செல்லலும்	8
3.	ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனின் பாலலீலை	18
4.	ப்ரம்மதேவனின் குழப்பம்	23
5.	காளியமர்த்தனம்	26
6.	அஸுர ஸம்ஹாரம்	29
7.	கோவர்தனம் தாங்குதல்	33
8.	நந்தபாபாவைக் காப்பாற்றுதல்	36
9.	தீயவர் மூவரின் வதம்	40
10.	வ்ரஜத்திலிருந்து வடமதுரைக்கு வருதல்	43
11.	கம்ஸ வதம்	47
12.	குருதேவரின் ஆசிரமத்தில்	50
13.	மதுராவிலிருந்து த்வாரகா	54
14.	திருக்கல்யாணம்	58
15.	ஸ்ரீக்ருஷ்ண-பலராமரின் பராக்கிரமம்	62
16.	த்ரௌபதிக்கு அருள்புரிதல்	69
17.	பக்தர்களுக்கு அருள்புரிதல்	73
18.	பாண்டவர்களுக்கு உதவிபுரிதல்	77
19.	கிரஹண காலத்தில் நந்தபாபாவையும், ஆயர்களையும் சந்தித்தல்	85
20.	தன்னுடைய சகோதரர்களை அழைத்துக் காட்டுதல்	86
21.	பகவான் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் கோலோகத்திற்கு எழுந்தருளுதல்	88
22.	உங்களைப் பரிசோதித்துக் கொள்ளுங்கள்	91

Koviloor Digital Library

ஸ்ரீஹரி:

பகவான் ஸ்ரீக்ருஷ்ணன்

கம்ஸனின் கொடுமை

இன்றைக்கு சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் கண்ணபிரானின் அவதாரம் நிகழ்ந்தது. அவதாரத்தை முடித்துக் கொண்டு கோலோகம் சென்ற நாளிலிருந்தே கலியுகம் தொடங்கிவிட்டது.

அவ்வமயம் உக்ரஸேனர் வடமதுரையின் மன்னராக இருந்தார். அவரது மூத்த மகனான கம்ஸன் மிகுந்த பலசாலியாகவும், இரக்கமற்ற இயல்புடையவனாகவும் இருந்தான். நாட்டிலிருந்த நியாயமற்ற கொடுமையான மன்னர்கள் அனைவருடனும் அவன் நட்பு பாராட்டிக் கொண்டான். பெரும்பான்மையான அரக்கர்கள் அவனது பணியாட்களாகவும், ஆலோசனையாளர்களுமாயினர். தீயவர்களோடு சேருபவனும் தீயவனாகிவிடுகிறான். தர்மாத்மாவான உக்ரஸேனரின் மகனாக இருந்தபோதிலும் கம்ஸன் அதர்மனாகவும், நியாயமற்றவனாகவும் ஆகிவிட்டான்.

உக்ரஸேனரின் சகோதரருடைய பெயர் 'தேவகர்' என்பதாகும். தேவகரின் கடைசி மகளான தேவகிக்கும், வஸுதேவர் என்பவருக்கும் திருமணம் நிகழ்ந்தது. கம்ஸன் தனது சிற்றப்பா

Koviloor Digital Library

மகளான தங்கை தேவகியை மிகவும் நேசித்து வந்தான். திருமணம் முடிந்ததும் வஸுதேவர் தேவகியுடன் தன் வீட்டிற்குத் தேரில் புறப்பட்ட போது, கம்ஸன் தனது தங்கையின் மீதிருந்த அன்பினால், தானே அந்தத் தேரை ஓட்டத் தொடங்கினான். (போகும்) வழியில் "முட்டாள் கம்ஸனே! நீ யாரைத் தேரில் உட்கார வைத்து அழைத்துச் செல்கிறாயோ, அவளது எட்டாவது கர்ப்பத்தில் பிறக்கும் மகன் உன்னைக் கொல்லப் போகிறான்" என்ற அசரீரி வாக்கு கேட்டது.

கம்ஸன் அசரீரி வாக்கைக் கேட்டதுமே மிகுந்த கோபமடைந்தான். அவன் தேவகியின் தலைமுடியைப் பற்றிக் கொண்டு அவளைக் கொல்வதற்காக வாளை உருவிக் கொண்டான். வஸுதேவர் "சோதரா! மரணம் எப்பொழுது ஏற்பட வேண்டுமோ அப்பொழுது ஏற்படத்தான் போகிறது. மரணம் நிச்சயம் நெருங்கினாலன்றி யாரும் யாரையும் கொல்லமுடியாது. நீ உன் தங்கையைக் கொல்லும் பாவத்தைச் செய்யாதே. பாவம் செய்வோரை மக்கள் நிந்திக்கின்றனர். அவன் நரகம் செல்கிறான்" என்று கம்ஸனுக்கு எடுத்துக் கூறினார்.

கம்ஸன் இரக்கமற்ற பாவி. வஸுதேவரின் உபதேசம் அவனிடம் எந்த நல்லுணர்வையும் ஏற்படுத்தவில்லை. "நான் இவளையே கொன்று விட்டால் அதன்பின் என்னைக் கொல்ல இவளுக்கு மகன் எப்படிப் பிறக்க முடியும்?" என்று கூறினான்.

தான் எப்படி எடுத்துக் கூறினாலும் கம்ஸன் ஒப்புக் கொள்ளாமல் போகவே அவர், "உனது சகோதரி குற்றமேதும்

Koviloor Digital Library

புரியவில்லை, இவளால் உனக்கு பயமுமில்லை. உனது பயம் இவளுக்குப் பிறக்கப்போகும் மகனிடமிருந்துதான் என்றால் இவளுக்குப் பிறக்கப் போகும் குழந்தையை நான் உன்னிடம் சேர்ப்பித்து விடுகிறேன்" என்று கூறினார்.

கம்ஸன் வஸுதேவருடைய பேச்சை ஒப்புக் கொண்டான்; வீட்டிற்குத் திரும்பிவிட்டான். உரிய நேரத்தில் தேவகிக்குப் பிறந்த முதல் மகனைப் பிறந்ததுமே வஸுதேவர் கம்ஸனிடம் கொண்டு சென்றார். தனது புதல்வனை ஓர் இரக்கமற்ற பாவி கொல்வதற்காக, அவனிடம் தானே தன் கையாலேயே சுமந்து கொண்டு செல்வது எத்தனை துயரத்திற்குரிய விஷயம்! ஆனால் தனது வாக்கைக் காப்பதற்காக வஸுதேவர் அத்தகைய துயரத்தையும் ஏற்றார். நல்லோர்கள் சத்தியத்தைக் காக்க மிகப் பெரிய கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்கின்றனர்.

முதலில் கம்ஸன் அந்தக் குழந்தையைத் திருப்பிக் கொடுத்துவிட்டான். ஆனால், பகவானின் அவதாரம் விரைவில் நிகழவேண்டும் என்று நாரதர் விரும்பினார். தீயவர்கள் அதிகமாகப் பாவம் செய்யும்போதும், பகவானின் பக்தர்களுக்குத் துன்பம் விளைவிக்கும்போதும்தான் பகவான் அவதரிக்கிறார். ஆகவே நாரதர் ஒரு வட்டச்சுற்றில் எட்டு கோடுகளைக் கிழித்து அதை எண்ணும்படி கம்ஸனிடம் கூறினார். கம்ஸன் எங்கிருந்து எண்ணினானோ அதற்குப் பக்கத்திலிருந்த கோடு எட்டாவது ஆயிற்று. இதனால் தேவகியின் ஒவ்வொரு மகனையும் எட்டாவதாகச் சொல்ல இயலும் என்ற பிரமை கம்ஸனுக்கு ஏற்பட்டுவிட்டது. அவன் தானே

Koviloor Digital Library

வஸுதேவருடைய வீட்டிற்கு சென்றான். தேவகியின் மகனைப் பிடுங்கி பாறையின்மீது மோதிக் கொன்றுவிட்டான். வஸுதேவரும், தேவகியும் எங்கும் ஓடிவிடக் கூடாதே என்ற பயத்தால் அவன் அவர்களைச் சிறையிலிட்டான்.

கம்ஸன் தனது தந்தை உக்ரஸேனரையும் பலவந்தமாகச் சிறையிலிட்டான். தந்தையைக் கைது செய்த அந்த துஷ்டன் தானே மன்னனானான். தேவகிக்குப் பிறக்கும் குழந்தைகளையெல்லாம் அவன் பாறையில் மோதிக் கொன்று வந்தான். இவ்விதம் அவன் தேவகியின் ஆறு புதல்வர்களை அவர்கள் பிறந்ததுமே கொன்றுவிட்டான்.

****

பகவான் ஸ்ரீக்ருஷ்ணனின் அவதாரமும், கோகுலத்திற்குச் செல்லலும்

ஸ்ரீவஸுதேவருக்கு வேறு பல மனைவியர் இருந்தனர். கம்ஸனின் பயத்தால் அவர்கள் வடமதுரையை விட்டுவிட்டு வேறு இடங்களுக்குச் சென்றிருந்தனர். ஸ்ரீநந்தர் வஸுதேவரின் நண்பர் ஆவார். அவர் ஆயர்களின் மன்னர். வடமதுரைக்கு எதிரில் யமுனை நதியின் மற்றொரு கரையிலிருந்த கோகுலத்தில் வசித்து வந்தார். வஸுதேவரின் மற்றொரு மனைவியான ஸ்ரீரோஹிணிதேவி கர்ப்பவதியானபோது மதுராவிலிருந்து கோகுலத்திற்குச் சென்று நந்தருடைய வீட்டில் வசிக்கலானார்.

தேவகியின் ஏழாவது குழந்தை பிறக்கவிருந்தபோது பகவான் தன்னுடைய யோகமாயை

Koviloor Digital Library

யிடம், "தேவகிமாதாவின் கர்ப்பத்தில் இப்போது ஸ்ரீசங்கர்ஷணர் உள்ளார். நீ அவரை ரோஹிணி யின் கர்ப்பத்தில் சேர்த்துவிடு. அதன் பிறகு நான் தேவகித் தாயிடம் தோன்றுவேன், நீ நந்தருடைய மனைவி யசோதாதேவியின் புதல்வியாகத் தோன்றுவாயாக" என்று கூறினார்.

பகவானின் கட்டளைப்படி யோகமாயை தேவகியின் கர்ப்பத்தை ரோஹிணியின் கர்ப்பத்தில் சேர்த்துவிட்டார். ரோஹிணியின் கர்ப்பமும் அதோடு கலந்துவிட்டது. அதன் மூலம் ஸ்ரீபலராமன் அவதரித்தார். மதுராவில் அனைவருக்கும் தேவகியின் ஏழாவது கர்ப்பம் கலைந்து விட்டது என்று தெரியவந்தது. இதற்குப் பிறகு பகவான் தானே தேவகிமாதாவிடம் தோன்ற விருந்தபோது தேவகியின் முகத்தில் அற்புதமான ஒளி மண்டியது. யாராலும் அவரைக் காணவும் இயலவில்லை. எட்டாவது கர்ப்ப விஷயத்தை அறிந்த கம்ஸன் சிறைச்சாலையை மூடிவிட்டான். பல மல்லர்களைக் காவலராக அங்கே நிறுத்தினான்.

ஆவணி மாதம், க்ருஷ்ணபக்ஷம், அஷ்டமி யன்று நள்ளிரவில் கம்ஸனுடைய சிறைச்சாலையில் வஸுதேவ-தேவகியின் முன்னால் பகவான் அவதரித்தார். பகவானின் திருமேனியின் வண்ணம் நீலத்தாமரையைப் போன்று அழகிய கருநீலமாக இருந்தது. அவர் மின்னலைப் போன்று ஒளிரும் பீதாம்பரம் அணிந்து நான்கு திருக்கரங்களில் சங்கு, சக்கரம், கதை, தாமரை ஆகியவற்றை ஏந்தியவாறு காக்ஷி தந்தார். பகவான் ரத்தினங்கள் பதித்த மகுடம், குண்டலம், தோள்வளை, கங்கணம் ஆகிய விலையுயர்ந்த ஆபரணங்களை

Koviloor Digital Library

அணிந்திருந்தார். அந்த சிறைச்சாலையே ஒளிரும் படி அவரது திருமேனியிலிருந்து ஒளி பெருகிக் கொண்டிருந்தது.

வஸுதேவரும், தேவகியும் பகவானைத் துதித்தனர். தாயார் தேவகி பகவானிடம் "தாங்கள் இந்த சதுர்புஜ ரூபத்தை மறைத்துக் கொள்ளுங்கள். தாங்கள் அவதரித்த விஷயத்தைக் கேட்டு கம்ஸன் இப்போதே இங்கு ஓடிவரப் போகிறான். கம்ஸனிடம் எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது" என்று வேண்டிக் கொண்டார்.

பகவான் தனது சதுர்புஜ ரூபத்தை மறைத்துக் கொண்டு சின்னஞ்சிறு குழந்தையாகி விட்டார். பகவான், வஸுதேவரிடம் "தாங்கள் என்னை கோகுலத்தில் சேர்த்துவிட்டு அங்கிருந்து யசோதையின் பெண் குழந்தையைக் கொண்டு வாருங்கள்" என்று கூறினார். பகவானின் கட்டளையை ஏற்று வஸுதேவர் அவரை ஒரு முறத்தில் வைத்தார். பகவானது விருப்பப்படி வஸுதேவரின் கை விலங்கும், கால் விலங்கும் தாமாக நீங்கின. கதவுகளைப் பிணைத்திருந்த சங்கிலிகள் அறுந்து விழுந்தன. கதவுகளெல்லாம் தாமாகவே திறந்து கொண்டன. காவலர் அனைவருக்கும் ஆழ்ந்த தூக்கம் வந்துவிட்டது.

அந்த சமயம் மின்னல் மின்னிக் கொண்டிருந்தது. பலத்த மழை பெய்துக் கொண்டிருந்தது. சிறைச்சாலையிலிருந்து வஸுதேவர் வெளியேறியதுமே ஆதிசேஷன் பேசாமல் அவரைப் பின் தொடர்ந்தார். தனது ஆயிரம் படங்களையும், ஸ்ரீக்ருஷ்ணனுக்கும், வஸுதேவருக்கும் மேல் குடையாக விரித்து மழையிலிருந்து காக்கத் தொடங்கினார். யமுனை

Koviloor Digital Library

யில் வெள்ளம் பெருகிற்று. ஆனால் வஸுதேவருக்கு, அவரது முழங்காலுக்கும் கீழே நீர் இருக்குமளவு யமுனாதேவி தன்னைக் குறைத்துக் கொண்டாள்.

வஸுதேவர் கோகுலத்தை அடைந்தபோது அங்கும் பகவானின் மாயையால் மக்கள் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தனர். அதே சமயத்தில் யசோதாவிற்கும் பெண் குழந்தை பிறந்திருந்தது. ஆனால் யசோதாதேவியும் பகவானின் விருப்பப் படி தூங்கிவிட்டிருந்தார். பிறந்தது பெண்ணா அல்லது ஆணா என்ற விவரம்கூட அவருக்குத் தெரியாது. வஸுதேவர் நேராக நந்தருடைய வீட்டினுள் சென்று, அவர் யசோதாவிற்கு அப்போது பிறந்திருந்த பெண் குழந்தையை எடுத்துக் கொண்டு அந்த இடத்தில் பகவான் ஸ்ரீக்ருஷ்ணனை வைத்துவிட்டு மதுராவிற்குத் திரும்பி வந்தார். வஸுதேவர் சிறைச்சாலைக்குள் வந்ததுமே கதவுகள் தாமாக மறுபடி மூடிக் கொண்டுவிட்டன. வஸுதேவர் கைகால்களில் விலங்குகளை அணிந்துக் கொண்டார். இதே சமயம் கோகுலத்திலிருந்து அவர் கொண்டு வந்த பெண் குழந்தை அழத்தொடங்கியது. அதன் அழுகுரல் கேட்டு காவலர்களின் தூக்கம் கலைந்தது. அவர்கள் கம்ஸனிடம் ஓடிச்சென்று தேவகிக்குக் குழந்தை பிறந்த செய்தியை தெரிவித்தனர்.

கம்ஸனோ தேவகிக்குப் புதல்வன் பிறக்கப் போவதை பயத்தோடு எதிர்பார்த்துக் காத்திருந் தான். அப்போதிருந்தே அவனுக்குத் தூக்கம் வருவதில்லை. செய்தி கிடைத்ததுமே வாளை எடுத்துக் கொண்டு, கிரீடமின்றி வெறும்

Koviloor Digital Library

தலையோடு கால் நடையாகவே ஓடி வந்தான். தேவகிதேவி கம்ஸன் வருவதைக் கண்டதும் அந்தப் பெண் குழந்தையை மடியில் மறைத்துக் கொண்டார். தேவகி அழுதவாறே கம்ஸனிடம் "சோதரா! இது பெண் குழந்தை, நீ இதன் உயிரைப் பறிக்காதே" என்று வேண்டினாள்.

பாவியான கம்ஸன் தேவகியை அதட்டி னான். பெண் குழந்தையைப் பிடுங்கி, கால்களைப் பிடித்துப் பாறை மீது மோதத் தொடங்கினான். ஆனால் அது சாமானிய சிறுமியல்லவே. அது யோகமாயையாயிற்றே! கம்ஸனின் கைகளிலிருந்து நழுவி அவர் ஆகாயத்திற்குச் சென்றுவிட்டார். அங்கு அவர் எட்டுக் கைகளையுடையவராக ரூபம் தரித்துக் கொண்டு கம்ஸனிடம் "துஷ்ட கம்ஸா! உன்னைக் கொல்லப் போகிறவன் பிறந்துவிட்டான். நீ இனி வீணாகக் குற்றமற்ற மக்களுக்குத் துன்பம் தராதே" என்று கூறினார்.

ஒளிமயமான அஷ்டபுஜாதேவி கம்ஸனிடம் இவ்வாறு கூறி மறைந்துவிட்டாள். அவளுடைய பேச்சைக் கேட்ட கம்ஸனுக்கு மிகுந்த பயம் உண்டாயிற்று, துயரமும் உண்டாயிற்று. தேவகி-வஸுதேவர்களின் புதல்வர்களை வீணாகக் கொன்றோமே என்று அவன் நினைத்தான். அவன் தன் தங்கையின் கணவர் வஸுதேவருடையவும், சகோதரி தேவகியுடையதுமான விலங்குகளை விலக்கினான். அவர்களிடம் தனது குற்றத்திற்காக மன்னிப்பு கேட்ட கம்ஸன் அவர்களை வீட்டிற்கு அனுப்பிவிட்டான்.

சிறைச்சாலையிலிருந்து திரும்பியபின் பொழுது விடிந்ததுமே கம்ஸன் தனது அரக்க அமைச்சர்களை அழைத்து அஷ்டபுஜாதேவியின்

Koviloor Digital Library

விஷயத்தை விளக்கினான். கம்ஸனின் அரக்க அமைச்சர்கள் மிகுந்த பாவ சிந்தனையுடையவர்களும், கொடுமதியாளர்களும் ஆவார்கள். அங்கு பத்து, பதினைந்து நாட்களில் எத்தனை குழந்தைகள் பிறந்துள்ளனவோ அவையனைத்தும் கொல்லப்படவேண்டும் என்று அவர்கள் கம்ஸனுக்கு ஆலோசனை கூறினார்கள். பூதனை, சகடாஸுரன், வ்யோமாஸுரன் முதலிய அரக்கர்களுக்கு எங்கும் சுற்றியலைந்து குழந்தைகளைக் கொல்லுமாறு கம்ஸன் ஆணையிட்டுவிட்டான்.

பாலக்ருஷ்ணன் அரக்கர்களைக் கொன்றார்

வ்ரஜ மன்னர் நந்தருக்குப் பிள்ளைப்பேறு இல்லாமலிருந்தது. முதுமைப்பருவத்தில் ஸ்ரீயசோதாவிற்குக் குழந்தையுண்டாகும் அறிகுறி தோன்றிய போதே வ்ரஜ முழுவதிலும் ஆனந்த விழா கொண்டாடப்படத் தொடங்கின. ஆவணி மாதம், க்ருஷ்ணபக்ஷம், அஷ்டமியன்று இரவில் யசோதாவிற்கும் குழந்தை பிறந்தது. ஆனால், அந்த நேரத்தில் எல்லோரும் - யசோதாவும்கூட - பகவானின் மாயையால் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தனர். வஸுதேவர் யசோதாவின் பெண்ணை எடுத்துக் கொண்டு ஸ்ரீக்ருஷ்ணனை வைத்துவிட்டுச் சென்றபின் அனைவரது தூக்கமும் கலைந்தது. எல்லோரும் யசோதாவிற்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது என்றே எண்ணினார்கள். கோகுலத்தில் வாத்தியங்கள் முழங்கத் தொடங்கின. மிகப் பெரிய விழா கொண்டாடப்பட்டது.

ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனுக்கு ஆறு நாள் ஆனபோது அவரது ஆறாவது நாள் விழாக்

Koviloor Digital Library

கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் அவர் வெளியே முற்றத்திற்குக் கொண்டுவரப்பட்டார். ஸ்ரீநந்தர் கோகுலத்தைப் பாதுகாக்கச் சிலரை விட்டுவிட்டு, முதிய ஆயர்களுடன் கம்ஸனுக்கு ஆண்டுக் கப்பம் செலுத்த அன்றைய தினம் விடியற்காலையில் வண்டிகளில் பால், தயிர் ஆகியவற்றை ஏற்றிக் கொண்டு மதுராவிற்குச் சென்றிருந்தார். இதேசமயம், கம்ஸனின் மூலம் குழந்தைகளைக் கொல்வதற்காக நியமிக்கப்பட்ட பூதனை என்னும் அரக்கி கோகுலத்திற்கு வந்தாள். அந்த அரக்கி மாயையினால் எந்த உருவத்தையும் தான் விரும்பியபடி எடுக்க வல்லவள். அவள் தேவியைப்போல அழகிய உருக்கொண்டாள். விலையுயர்ந்த அணிகலன்களை அணிந்திருந்தாள். ஒரு கையில் தாமரையைச் சுழற்றியபடி சுற்றி வந்தாள். அவளைக் கண்ட மக்கள் சாட்சாத் லக்ஷ்மிதேவி வந்திருக்கிறார் என்றே கருதினர். யாரும் அவளைத் தடுக்கவில்லை. அவள் நேராக நந்தருடைய வீட்டை அடைந்தாள்.

ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனை தாயார் யசோதா ஒரு தொட்டிலில் தூங்க வைத்திருந்தார். ஸ்ரீக்ருஷ்ணன் பூதனையைக் கண்டதும் தூக்கம் வருவதுபோல கண்களை மூடிக் கொண்டார். பூதனை தனது மார்பகத்தில் மிக பயங்கரமான விஷத்தை வைத்திருந்தாள். குழந்தை பாலருந்த வாய் வைத்ததுமே இறந்துவிடும் என்று அவள் நினைத் திருந்தாள். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனைக் கொல்லும் எண்ணத்தோடு அவள் அவரருகே சென்றாள். அவரை மடியில் எடுத்து பாலூட்டும் பாவனையில் அவரது வாயில் தனது மார்பகத்தை வைத்தாள்.

Koviloor Digital Library

பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் பூதனையின் பொல்லாத்தனத்தை அறிந்துவிட்டார். அவர் அவளது பாலோடுகூட அவளது உயிரையும் குடிக்கத் தொடங்கினார். இதனால் பூதனையின் உடல் முழுவதும் வெடித்துவிடுவது போலாயிற்று. வலி பொறுக்காமல் அவள் அழுது கூச்சலிடத் தொடங்கினாள். அவள் ஸ்ரீக்ருஷ்ணனை விலக்க விரும்பினாள். ஆனால் பகவானோ விடுவதாகவே இல்லை என்பதுபோல ஒட்டியபடி பால் குடித்துக் கொண்டிருந்தார். வலியின் காரணமாக பூதனை கூச்சலிட்டபடி அங்கிருந்து ஸ்ரீக்ருஷ்ணனை எடுத்துக் கொண்டே ஓடினாள். ஆயர்களும், ஆய்ச்சியரும் அவளுக்குப் பின்னால் ஓடினர். அவளுடைய மாயை அனைத்தும் மறைந்து போயிற்று. அவளது பயங்கரமான உருவம் வெளிப்பட்டுவிட்டது. சிறிது தூரம் சென்று அவள் இறந்து கீழே விழுந்தாள். பூதனையின் இறந்த உடலின் மீதிருந்து அவர்கள் ஸ்ரீக்ருஷ்ணனை எடுத்துக் கொண்டு சென்றனர்.

இங்கு நந்தர் மதுராவில் கம்ஸனுக்கு கப்பம் கட்டிவிட்டு வஸுதேவரைச் சந்தித்தார். வஸுதேவர் "கோகுலத்தில் விபரீதம் நிகழும் பயம் உள்ளது. தாங்கள் சீக்கிரம் திரும்பிச் செல்லுங்கள்" என்று அவருக்கு எடுத்துரைத்தார். நந்தர் ஆயர் களுடன் திரும்பியபோது வழியில் மைல்கணக்கான நீளமும், அகலமும் உள்ள பயங்கர அரக்கியான பூதனையின் உயிரற்ற உடலைக் கண்டார். இவ்வளவு பெரிய அரக்கியை யார் தூக்குவது? மக்கள் கோடாரியால் அவளது உடலை துண்டு துண்டாக்கிப் பலசிதைகளாக வைத்து எரித்து விட்டனர். பகவான் பூதனையின் பாலை அருந்தி

Koviloor Digital Library

யிருந்தார். ஆகவே கொடிய அரக்கியாயிருந்த போதிலும்கூட பூதனை முக்தியடைந்துவிட்டாள். எரிக்கும்போது அவளது உடலிலிருந்து மிகுந்த நறுமணம் எழுமளவு அவளது உடல் புனித மடைந்துவிட்டது. ஸ்ரீநந்தபாபா கோகுலத்திற்குத் திரும்பி வந்தபின் அவருக்கு பூதனை வந்த செய்தி கிடைத்தது.

ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் முதன்முதலாகத் தானாகவே குப்புறக் கவிழ்ந்து கொண்ட தினத்தன்று ஸ்ரீயசோதாதேவி பெரிய விழாக் கொண்டாடினார். அன்றைய தினம் ஸ்ரீக்ருஷ்ணனின் ஜன்ம நக்ஷத்ரமும்கூட! விழாவில் கோப-கோபியரின் கூட்டம் அதிகமாகிவிட்டது. அன்னை யசோதா ஸ்ரீக்ருஷ்ணனுக்குப் பால்புகட்டி ஒரு வண்டியின் கீழே தொட்டிலைக் கட்டித் தூங்க வைத்தார். ஏனெனில் அங்கு தனிமையில் குழந்தை சுகமாகத் தூங்க முடியும். ஒரு சில சிறுவர்களை ஸ்ரீக்ருஷ்ணனுக்கு அருகிலிருந்து அவரைப் பார்த்துக் கொள்ளும்படி கூறிவிட்டு, தான் கோப-கோபியரின் வரவேற்பு உபசரிப்பில் மூழ்கிவிட்டார்.

கம்ஸனின் ஒரு பணியாள் 'சகடாஸுரன்'. அவன் தனது மாயையால் பிறர் கண்ணுக்குப் புலப்படாமல் இருக்க முடியும். அவன் கோகுலத்திற்கு வந்தான். கண்ணன் எந்த வண்டியினடியில் தூங்கிக் கொண்டிருந்தாரோ, அந்த வண்டியில் நுழைந்து உட்கார்ந்துக் கொண்டான். வண்டியை பலமாக அழுத்தி விழவைத்துவிட்டால் கீழே தூங்கும் ஸ்ரீக்ருஷ்ணன் அழுந்திவிடுவான் என்று விரும்பினான். பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் அரக்கன் மனதிலிருந்த விஷயத்தை

Koviloor Digital Library

கோவிலூர் KOVILOOR MADALAYAM

அறிந்து கொண்டார். பசியின் காரணமாக அழுவதுபோல அழுது கால்களைத் தூக்கிப் போடத் தொடங்கினார். அவரது மென்மையான சின்னஞ்சிறு பாதங்கள் பட்டதனால் மிகுந்த கனமான அந்த வண்டி கவிழ்ந்து தூள்தூளாகி விட்டது. வண்டியில் நுழைந்து மறைந்திருந்த சகடாஸுரன் இறந்துவிட்டான். வண்டியின் மீது பால், தயிர், நெய் ஆகியவை நிறைந்த பல மட்பாண்டங்கள் வைக்கப்பட்டிருந்தன. அவை யனைத்தும் கடகடவென கீழே விழுந்து உடைந்து விட்டன. பாலும், தயிரும் நான்குபுறமும் பெருகத் தொடங்கியது. வண்டி விழும் பேரரவம் கேட்டு கோப-கோபியர் அனைவரும் அங்கு ஓடி வந்தனர். அன்னை யசோதா பாலக்ருஷ்ணனை உடனே மடியில் எடுத்துக் கொண்டார்.

இதேபோல கம்ஸன் அனுப்பிய 'த்ருணாவர்த்தன்' என்ற அரக்கன் ஒருவன் ஒரு நாள் கோகுலத்திற்கு வந்தான். அன்று அன்னை யசோதா ஸ்ரீக்ருஷ்ணனை மடியில் வைத்துக் கொண்டு வீட்டுமுற்றத்தில் உட்கார்ந்திருந்தார். அரக்கன் வரும் விஷயத்தை அறிந்து பகவான் தனது உடலை மிகுந்த கனமாக்கிக் கொண்டார். அன்னை யசோதாவால் ஸ்ரீக்ருஷ்ணனின் பாரத்தைப் பொறுக்க முடியவில்லை. அதனால் அவரை மடியிலிருந்து முற்றத்துத் தரையில் உட்கார வைத்தார். தான் வீட்டு வேலைகளைச் செய்யத் தொடங்கினார். அதே சமயம் த்ருணாவர்த்தன் மிகப்பெரிய சுழற்காற்றை ஏவினான். பகலிலேயே இருள்சூழ்ந்துவிடுமளவு அவன் மண்ணைப் பறக்கச் செய்தான். யாருக்கும் எதுவும் தென்படவில்லை. நான்குபுறமும்

Koviloor Digital Library

இருளாக்கிவிட்டு அரக்கன் ஸ்ரீக்ருஷ்ணனை எடுத்துக் கொண்டான்.

முதலில் பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் சிறிது லேசாக இருந்து பறந்தார். ஆனால் மேலே வானத்தில் சென்று அவர் இருகைகளாலும் அரக்கனின் கழுத்தை நெறித்துவிட்டார், மிகவும் கனமாகிப் போனார். கழுத்தை அழுத்தவே அரக்கனின் கண்கள் வெளியே பிதுங்கி வந்துவிட்டன. அவனால் ஓடவும் இயலவில்லை, பேசவும் முடியவில்லை. கடைசியில் அவன் இறந்து கோகுலத்தில் நந்தரின் வீட்டுவாசலுக்கு முன்னாலேயே ஒரு பாறையின்மீது விழுந்து விட்டான். மேலேயிருந்து விழுந்த காரணத்தால் அவனது உடல் சின்னாபின்னமாகிவிட்டது. பகவான் ஸ்ரீக்ருஷ்ணனோ அப்போதும்கூட அவன்மீது கால்களை உதைத்து, உதைத்து விளையாடிக் கொண்டிருந்தார். கோபியர்கள் அவரை முதலிலிருந்தே தேடிக் கொண்டிருந்தனர். ஏனெனில் சுழற்காற்றின்போது அன்னை யசோதா தேடியும்கூட இவர் முற்றத்தில் காணப்படவில்லை. பின்னர், அந்த கோபியர்கள் அவரை அரக்கனின் உடல் மீதிருந்து எடுத்துக் கொண்டு சென்று அன்னை யசோதாவின் மடியில் விட்டுவிட்டனர்.

****

ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனின் பாலலீலை

வஸுதேவரின் புரோஹிதரான மஹரிஷி கர்காசார்யர் மிகப்பெரிய ஜோதிடராக விளங்கியவர். வஸுதேவர் அனுப்பியதால் அவர் கோகுலத்தில் நந்தருடைய வீட்டிற்கு வந்தார்,

Koviloor Digital Library

அவர் ஸ்ரீபலராமருக்கும், ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனுக்கும் பெயர் சூட்டும் சடங்கைச் செய்வித்தார். பலராமன்-ஸ்ரீக்ருஷ்ணன் இருவருமே மிகுந்த அழகுடனிருந்தனர். பலராமர் வெண்ணிறமானவர்; ஸ்ரீக்ருஷ்ணனோ கார்மேகவண்ணத்தவர். வ்ரஜ மக்களனைவரும் இவர்களிடம் மிகுந்த அன்பு செலுத்தி வந்தனர். கோபியர்களோ சதா இவர்களைப் பார்த்துக் கொண்டேயிருக்க விரும்பினார்கள். இந்த இருவரும் மிகுந்த குறும்புக்காரர்கள். சிலசமயம் சேற்றில் தவழ்ந்து செல்வார்கள்; சிலசமயம் கன்றுகளின் வாலைப்பிடிப்பார்கள்; இன்னும் சிலசமயம் நெருப்பையோ, சந்த்ரனையோ பிடித்துத் தரும்படி பிடிவாதம் செய்யத் தொடங்குவார்கள். அன்னை யசோதாவும், ரோஹிணியும் மிகுந்த கவனத்தோடு இவர்களை வளர்த்து வந்தனர்.

கொஞ்சம் பெரியவனானதும் பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் எல்லோருக்கும் ஆனந்தம் தரும் செயல்களைச் செய்ய ஆரம்பித்தார். அன்னை சொல்லும் சிறுசிறு பொருட்களை அவர் எடுத்து வருவார், நந்தபாபாவிற்குக் காலணியை எடுத்து வந்து தருவார், கோபிகைகள் சொன்னால் தத்திதத்தி நாட்டியமாடத் தொடங்குவார். ஒருநாள் பழம் விற்பவள் ஒருத்தி வந்தாள். அவள் கூவலைக் கேட்ட ஸ்ரீக்ருஷ்ணன் கையில் தானியத்தை எடுத்துக் கொண்டு பழம் வாங்கச் சென்றார். ஆனால் அவரது சிறிய கைகளிலிருந்து தானியம் முழுவதும் வழியிலேயே சிந்திவிட்டது. பழக்காரி அவரது கைநிறைய தன் பழங்களை நிரப்பினாள். அவள் தன் கூடையுடன் வீட்டையடைந்ததும், வைரம், மாணிக்கம் முதலிய விலையுயர்ந்த

Koviloor Digital Library

இரத்தினங்களால் தன் கூடை நிரம்பியுள்ளதைக் கண்டாள்.

சிறுவர்கள் குறும்புக்காரர்களாக இருந்தனர். அவர்களுடைய குறும்புத்தனம் எல்லோருக்கும் பிடிக்கவும் செய்தது. கோகுலத்திலிருந்த கோப-கோபியரனைவரும் ஸ்ரீக்ருஷ்ணன் தங்களது வீட்டிற்கு வரவேண்டும், தங்களோடு சிரித்து மகிழவேண்டும், பேசவேண்டும், அவர்களை ஆனந்தப்படுத்தியும், கோபமூட்டியும் இன்புறச் செய்யவேண்டும் என்றெல்லாம் விரும்பினார்கள். பகவான் ஸ்ரீக்ருஷ்ணனுக்கு அப்போது வயது சுமார் இரண்டு. அவர் தன்னைப்போன்ற சின்னஞ்சிறுவர்களுடன் ஆயர்களின் வீட்டிற்குச் செல்வார். சிலரது வீட்டில் கட்டியுள்ள கன்றுகளை அவிழ்த்து விடுவார், சிலரது வீட்டில் வைத்திருக்கும் வெண்ணெய் அல்லது தயிரைச் சிறுவர்களுடன் சேர்ந்து சாப்பிட்டுவிடுவார். அவரது இந்தக் குறும்புத்தனத்தால் ஆயர் ஆய்ச்சியர்களுக்கு மிகுந்த ஆனந்தம் ஏற்படுவது வழக்கம். கோபியர்கள் யசோதையிடம் புகார் கூறும் சாக்கில் ஸ்ரீக்ருஷ்ணனைப் பார்ப்பதற்காகவே வருவது வழக்கம். எப்போதேனும் யசோதை ஸ்ரீக்ருஷ்ண சந்த்ரனை அதட்ட விரும்பினாலும் கோபியர்கள் அவரிடம் கைகூப்புவார்கள்; ப்ரார்த்தனை செய்வார்கள்; சியாமஸுந்தரனை அதட்டாமலிருக்கும்படி வேண்டிக் கொள்வார்கள்.

ஒருநாள் அன்னை யசோதா விடியற் காலையிலேயே எழுந்தார். வீட்டுப் பணியாட்கள் மற்ற வேலையில் ஈடுபட்டிருந்தனர். ஆகையினால் யசோதா தானே தயிர்கடையத் தொடங்கினார். ஏனெனில் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனுக்கு எழுந்தவுடன்

Koviloor Digital Library

புத்தம்புதிய வெண்ணெய் தரவேண்டும். இதற்குள் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனும் கண்விழித்துவிட்டார். தாயிடம் வந்த அவர் பாலருந்த செல்லமாகச் சிணுங்கத் தொடங்கினார். தாயார் தயிர் கடைவதை விட்டுவிட்டு அவருக்குப் பாலூட்டத் தொடங்கினார். இதற்குள் எதிரே அடுப்பில் வைத்திருந்த பால் பொங்க ஆரம்பித்தது. ஸ்ரீக்ருஷ்ணனைச் சட்டென்று தன் மடியிலிருந்து கீழே இறக்கிவிட்டுப் பாலை எடுக்கச் சென்றார். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனுக்குக் கோபம் வந்துவிட்டது. அவர் கல்லால் அடித்து அந்தத் தயிர்ப் பாண்டத்தை உடைத்தார், தான் அங்கிருந்து ஓடி வெண்ணெய் வைக்கும் அறையில் நுழைந்துக் கொண்டார். அவர் ஒரு உரலின்மீது ஏறி நின்றபடி உறியில் வைத்திருந்த வெண்ணெயை எடுத்தெடுத்து குரங்குகளுக்குக் கொடுத்தார்.

பாலை அடுப்பிலிருந்து இறக்கிவிட்டுத் திரும்பிய யசோதா வெண்ணெய்ப்பானை உடைந்து கிடப்பதையும், தயிர் பூமியில் நான்குபுறமும் வழிந்தோடுவதையும் கண்டார். ஸ்ரீக்ருஷ்ணனுக்கு தண்டனையளிக்காவிடில் அவனது இயல்பு கெட்டு விடுமென்று கருதிய யசோதா ஸ்ரீக்ருஷ்ணனைப் பிடிக்கச் சென்றார். முதலில் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் ஓடினார். ஆனால் தாயார் ஓடி, ஓடிக் களைத்து விட்டதைக் கண்ட அவர் நின்றுவிட்டார். யசோதா அவரைப் பிடித்து ஓர் உரலில் கட்டத் தொடங்கினார். அவர் ஸ்ரீக்ருஷ்ணனைக் கட்டுவதற்காக எந்தக் கயிற்றை எடுத்தாலும் அது இரண்டு அங்குலம் குறைவாகவே இருந்தது. அவர் வீட்டிலிருந்த கயிற்றையெல்லாம் இணைத்துக் கண்ணனைக் கட்ட முயன்றாலும்கூட முடிவில்

Koviloor Digital Library

கயிற்றின் நீளம் இரண்டு அங்குலம் குறைவாகவே இருந்தது. ஆஹா! பகவானை யாரால் கட்டமுடியும்? ஆனால் அன்னை யசோதா மிகவும் களைத்துவிடவே கருணை செய்து ஸ்ரீக்ருஷ்ணன் தானாகவே கட்டுப்பட்டார்.

குபேரனுக்கு நளகூபரன், மணிக்ரீவன் என்ற இரு புதல்வர்கள் இருந்தனர். ஒருமுறை அவர்கள் வெற்றுடம்போடு நீராடிக் கொண்டிருந்தனர். தேவரிஷி நாரதர் அந்தப் பக்கமாக வந்தார். அப்போதும்கூட ஆணவம் காரணமாக அவர்கள் நாரதரை வணங்கவுமில்லை, ஆடை அணிந்து கொள்ளவுமில்லை. நாரதர் அவர்களுடைய ஆணவத்தைப்போக்க, அவர்களை மரமாகும்படி சபித்துவிட்டார். அத்துடன் பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் அவதரிக்கும்போது அவ்விருவருக்கும் இந்த சாபத்திலிருந்து விமோசனம் கிட்டும் என்றும் கூறி விட்டார். தன்னுடைய பக்தனான தேவரிஷி நாரதரின் வாக்கை உண்மையாக்குவதற்காகவே பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் தன்னையே கட்டுவித்துக் கொண்டார். அவரைக் கட்டிவிட்டு அன்னை யசோதா வீட்டுவேலைகளில் ஈடுபட்டார். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் உரலை இழுத்துக்கொண்டே தன் வீட்டு வாசலுக்கு வெளியே ஒருசேர வளர்ந்திருந்த இரு மருதமரங்களின் நடுவே வெளிவந்தார். ஆனால் உரல் அவற்றில் சிக்கிவிட்டது. பகவான் பலத்தோடு உரலை இழுத்தார். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் பலமாக இழுத்ததும் இரு மருதமரங்களும் விழுந்துவிட்டன. அவற்றிலிருந்து நளகூபரனும், மணிக்ரீவனும் தேவர்களின் தெய்விக உருவில் வெளிவந்தனர். அவர்கள் பகவானைத் துதித்தனர். பகவானின்

Koviloor Digital Library

அனுமதியைப் பெற்று அவர்கள் தம் தந்தை குபேரனிடம் சென்றுவிட்டனர்.

மருதமரங்கள் விழுந்த பேரொலி எழுந்தது. அதைக் கேட்ட மக்களனைவரும் பயந்தபடி ஓடி வந்தனர். தந்தை நந்தர் ஸ்ரீக்ருஷ்ணனின் இடுப்பிலிருந்த கயிற்றை அவிழ்த்துவிட்டு அவரை மடியில் எடுத்துக் கொண்டார்.

****

ப்ரம்மதேவனின் குழப்பம்

கோகுலத்தில் ஒன்றன்பின் ஒன்றாகக் கவலையும், அச்சமும் தரும் நிகழ்ச்சிகள் உண்டாவதைக் கண்ட ஆயர்கள் மிகவும் பயந்து விட்டனர். புயலோ அல்லது வேறு எந்தக் காரணமோ இல்லாமல் மிகப்பெரிய மருதமரங்கள் விழுந்ததைக்கண்ட அவர்கள் மேலும் பயந்து விட்டனர். ஆயர்கள் அனைவரும் ஒன்றுகூடி, கோகுலத்தை விட்டுவிட்டு வேறெங்காவது குடியேற வேண்டும் என்று ஆலோசித்தனர். வண்டிகளில் எல்லாப் பொருட்களையும் ஏற்றி, குடும்பத்தினருடன் கோகுலத்திலிருந்த அனைவரும் அங்கிருந்து கோவர்த்தன மலைக்கருகே வந்து, அங்கு ப்ருந்தாவனத்திலேயே குடியேறிவிட்டனர். அவ்வமயம் ப்ருந்தாவனம் இன்று இருப்பதைப் போல சிறியதாக இல்லை. அது இருபது *கோச தூரம் பரவியிருந்த காடாகும்.

---

* ஒரு கோசம் - இரண்டு மைல்

Koviloor Digital Library

ப்ருந்தாவனம் வந்த ஸ்ரீக்ருஷ்ணனுக்கு மூன்று, நான்கு வயதாகிவிட்டதும் கன்றுகளை மேய்ப்பதற்கு அடம்பிடித்தார். மற்ற சிறுவர்களுடனும், பலராமருடனும் கன்று மேய்க்கத் தொடங்கினார். ஒருநாள் கம்ஸன் அனுப்பிய 'வத்ஸாஸுரன்' என்னும் அஸுரன் கன்று வேடம்பூண்டு கன்றுகளோடு சேர்ந்துவிட்டான். அவன் தக்க சமயம் பார்த்து ஸ்ரீக்ருஷ்ணனைக் கொல்ல விரும்பியிருந்தான். பகவான் அவனைக் கண்டு கொண்டார். பலராமருக்குக் குறிப்பினால் உணர்த்திவிட்டார். பிறகு அவர் மெதுவாக அவனிடம் வந்தார். அவனது வாலையும், பின்னங்காலையும் பிடித்துச் சுழற்றி அவனை ஒரு மரத்தின் மீது மோதி அடித்தார். அந்த அரக்கனின் உயிர் பிரிந்தது.

கம்ஸன் பூதனையின் உடன்பிறந்தவனான பகாஸுரனையும், ஸ்ரீக்ருஷ்ணனைக் கொல்வதற்காக அனுப்பினான். அவன் மிகப்பெரிய கொக்காக மாறி ஒரு குளத்தருகே சென்று உட்கார்ந்து கொண்டான். சிறுவர்களுடன் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் கன்றுகளைத் தண்ணீர் குடிக்க வைக்க அங்கு வந்ததும், அவன் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனை விழுங்கி விட்டான். ஆனால் பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் தன் உடலை பகாஸுரனின் வாய் வெந்து போகுமளவு சூடாக்கிக் கொண்டார். அவன் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனை வாயிலிருந்து வெளியே தள்ளிவிட்டு அலகினால் அவரைக் கொல்லப் பாய்ந்தான். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் அவனது அலகைப் பற்றிக் கொண்டார். அவனது முழு உடலும் இருதுண்டுகளாகும்படி கிழித்துப் போட்டார்.

Koviloor Digital Library

பூதனைக்கும், பகாஸுரனுக்கும் இளைய சகோதரன் 'அகாஸுரன்' என்பவன். அவனும் வ்ரஜத்திற்கு வந்தான். மிகப்பெரிய மலைப்பாம்பு வடிவெடுத்து வாயைப் பெரிதாகத் திறந்தபடி காட்டுவழியில் கிடந்தான். ஆயர்சிறுவர்கள் ஒரு மலையின் குகை என்று கருதுமளவு அவனது வாய் பெரியதாக இருந்தது. அவர்கள் அதற்குள் என்ன இருக்கிறது என்பதைப் பார்ப்பதற்காக கன்று களுடன் நுழைந்துவிட்டனர். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் கோபபாலர்கள் அஸுரனின் வயிற்றினுள் போய்க் கொண்டிருப்பதைக் கண்டு, தன் நண்பர்களைக் காப்பாற்றுவதற்காக தானும் அதன் வாயினுள் சென்றுவிட்டார், அங்கு அவர் அஸுரனின் மூச்சுக்காற்றுவிடும் எல்லா வழிகளும் அடைந்து விடுமளவு தன் உடலை மிகப் பெரியதாக்கிக் கொண்டார். சுவாசம் அடைபட்டதால் அவன் தலை வெடித்துவிட்டது. எல்லாக் குழந்தை களுடனும், கன்றுகளுடனும் கார்மேக வண்ணனான ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் வெளியே வந்துவிட்டார்.

ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் அகாஸுரனுடைய சுவாசத்தைத் தடுத்து நிறுத்திக் கொன்றதும் ப்ரம்மதேவனின் மனதில் பகவானின் மஹிமையைக் காணும் ஆவலுண்டாயிற்று. சிறுவர்களோடு சியாமஸுந்தரர் யமுனையின் கரையில் மணலில் அமர்ந்து சிற்றுண்டிகள் அருந்திக்கொண்டிருந்த போது எல்லாக் கன்றுகளையும் திருடிய ப்ரம்மா, ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் காட்டில் கன்றுகளைத் தேடிச் சென்றதும் சிறுவர்களையும் திருடிவிட்டார். அவர் சிறுவர்களையும், கன்றுகளையும் மாயையினால் தூக்கத்திலாழ்த்தி ஒரு குகையில் கொண்டு

3311
031.3

Koviloor Digital Library

வைத்துவிட்டார். பகவான் ப்ரம்மாவின் செயலை அறிந்துவிட்டார். அவர், தானே எல்லாக் கன்று களாகவும், சிறுவர்களாகவும் உருவம் எடுத்துக் கொண்டார். அவ்வுருவங்களில் சிறிதளவுகூட வேறுபாடு காண முடியாமல் இருந்தது.

ஓராண்டிற்குப் பிறகு ப்ரம்மதேவன் மறுபடியும் பார்த்தபோது வ்ரஜத்தில் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் கன்று மேய்த்துக் கொண்டு சிறுவர்களோடுகூட அதேபோல விளையாடிக் கொண்டிருந்தார். அவர் திருடிய கன்றுகளும், சிறுவர்களும் குகையில் இன்னும் உறங்கிக் கொண்டிருந்தனர். ப்ரம்மதேவன் பெரும் குழப்பத் திலாழ்ந்தார். கடைசியில் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் தன் மஹிமையைக் காட்டியபோது - அவர் தாமே எல்லாக் கன்றுகளாகவும், சிறுவர்களாகவும் ஆனதை வெளிக்காட்டியதும் - ப்ரம்மதேவன் அவரது திருவடிகளில் விழுந்து பணிந்தார். அவர் சியாமஸுந்தரனைத் துதித்தார். தனது குற்றத்திற்கு மன்னிப்பும் கேட்டார். திருடிய கன்றுகளையும், சிறுவர்களையும் திருப்பி அளித்தார்.

****

காளியமர்த்தனம்

யமுனை நதியில் ஆழமான மடு ஒன்று இருந்தது அங்கு நூற்றியொன்று தலை கொண்ட காளியன் என்ற நாகம் தன் குடும்பத்தோடு வசித்து வந்தது. அந்த இடத்தில் யமுனையின் நீர் கொதித்துக் கொண்டிருக்குமளவு காளியன் விஷமுள்ள ஒரு நாகம். விஷத்தின் ஆவி

Koviloor Digital Library

காரணமாக அந்தப் பக்கமாக மேலே பறந்து சென்ற பறவைகள்கூட இறந்து விழுந்து வந்தன. கடலிலுள்ள ரமணகத்தீவு நாகர்களின் வாழிடமாகும். முதலில் காளியனும் அங்குதான் வசித்து வந்தான். அவன் தனது விஷத்தின் ஆணவத்தால் முதலில் கருடனுடன் சண்டையிட்டான். பின்னர் கருடன் அவனைத் தன் சிறகால் அடித்ததும், உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக யமுனைக்கு ஓடி வந்துவிட்டான். முதலில் சௌபரி என்னும் முனிவர் யமுனையின் அந்த இடத்தில் தவம் செய்துக் கொண்டிருந்தார். அவர் அந்த இடத்தில் கருடன் யாரையாவது கொன்றால் அவனுக்கு மரணம் நிகழ்ந்து விடும் என்று சாபம் கொடுத்துவிட்டார். அதனால் காளியனுக்கு அங்கு கருடனின் பயமில்லாமலிருந்தது.

ஒரு நாள் காட்டில் பசுக்களை மேய்க்கும் பொழுது, ஆயர் சிறுவர்களுக்குத் தாகமுண்டாயிற்று. மறந்துபோய் தவறுதலாக அந்தச் சிறுவர்களும், பசுக்களும்கூட காளியன் வாழுமிடத்திலேயே யமுனையின் நீரைப் பருகிவிட்டனர். விஷமுள்ள நீரைக் குடித்துவிட்டதால் எல்லா பசுக்களும், கோபபாலகர்களும் அந்த வினாடியே பூமியில் விழுந்தனர் - இறந்தும்விட்டனர். ஆனால் பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் எல்லோரையும் தனது அருட்பார்வை ஒன்றினாலேயே உயிர்பிழைக்கச் செய்துவிட்டார்.

யமுனையின் நீரை எல்லா மக்களும் பயமின்றிக் குடிக்க வேண்டுமானால் காளியனை அங்கிருந்து விரட்ட வேண்டுமென்று பகவான் எண்ணினார். பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் கரையிலிருந்த ஒரு கதம்ப மரத்தின் மீது ஏறிக்

Koviloor Digital Library

கொண்டார். அங்கிருந்து அவர் யமுனையில் குதித்து நீந்தத் தொடங்கினார். ஸ்ரீக்ருஷ்ணன் தன்னுடைய இருப்பிடத்தில் நீந்துவதைக்கண்ட காளியநாகம் நீருக்கு வெளியே வந்தான். அவன் ஸ்ரீக்ருஷ்ணனைத் தீண்டினான், தன் உடலால் சுற்றிக் கொண்டான். சிறிது நேரம்வரை ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் மூர்ச்சையடைந்ததைப்போல அந்த நாகத்தின் உடலில் கட்டுண்டிருந்தார். வ்ரஜத்தில் பெரிய அபசகுனங்கள் உண்டாயின. மக்களனைவருக்கும் அந்த அபசகுனங்களினால் மிகவும் கவலை உண்டாயிற்று. அவர்கள் வீடு, வாசலை விட்டுவிட்டு ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனைத் தேடி காட்டிற்கு வந்தனர். அங்கு நாகத்தின் உடலில் கட்டுண்டிருந்த ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனைக் கண்டு அவர்கள் மிகுந்த துயருற்றனர். வ்ரஜ மக்கள் மிகுந்த துயரமடைவதைக் கண்ட பகவான் தன் உடலை பெரியதாக்கத் தொடங்கினார். அதன் மூலம் காளியநாகனுக்குத் தன் உடல் துண்டு துண்டாகிவிடப் போகிறது என்று தெரிந்தது. அவன் ஸ்ரீக்ருஷ்ணனை விட்டுவிட்டான். சிறிது நேரம்வரை ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் அந்த காளிய நாகத்துடன் நீரில் இங்குமங்கும் போக்குக் காட்டியபடி நீந்திக் கொண்டிருந்தார். பிறகு அவனது ஒரு தலையைக் கையால் பிடித்துக் கொண்டு சட்டென்று குதித்து அந்தத் தலையின்மீது நின்று கொண்டார். அவர் எழும்பிக் குதித்து நாகத்தின் தலைகளின்மீது நடனமாடத் தொடங்கினார். அவரைத் தீண்டுவதற்காக பாம்பு தனது எந்தத் தலையைத் தூக்கியதோ அதன் மீதே கால்களைத் தூக்கிப்போட்டுக் குதித்து வந்தார். காளிய நாகத்தின் படங்கள் கிழிந்த துணி போலாயின. அவற்றிலிருந்து ரத்தம்

Koviloor Digital Library

பெருக்கெடுத்து ஓடத் தொடங்கியது. அந்த பயங்கர நாகம் இறந்துவிடும் போலாயிற்று.

காளிய நாகத்தின் மனைவியர் தம் கணவர் இறந்துவிடுவாரோ என்று பயந்து ஸ்ரீக்ருஷ்ணனைத் துதித்தனர். பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் நாகத்தின் தலை மீதிருந்து நீரில் குதித்தார். அவர் நாகத்திற்கு அது தன் குடும்பத்தோடு யமுனையை விட்டுவிட்டு கடலுக்குச் சென்றுவிட வேண்டுமென்று ஆணையிட்டார். அந்த நாகம் பகவானின் ஆணையை ஏற்றுக் கடலுக்குச் சென்றுவிட்டது. யமுனையின் நீர் விஷமற்றுத் தூய்மையாகிவிட்டது.

பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் யமுனையிலிருந்து வெளி வந்தபோது இருளாகிவிட்டது. ஆகையினால் அன்று வ்ரஜ மக்கள் அனைவரும் அங்கேயே அருகிலிருந்த காட்டில் தூங்கிவிட்டனர். இரவில் காட்டில் நான்குபுறமும் காட்டுத்தீ சூழ்ந்து கொண்டுவிட்டது. தூக்கத்திலிருந்து விழித்த வ்ரஜ மக்கள் பயந்துவிட்டனர். பகவானிடம் உயிரைக் காக்குமாறு ப்ரார்த்தனை செய்யத் தொடங்கினார்கள். ஸ்ரீக்ருஷ்ணன் எல்லோரையும் கண்களை மூடிக் கொள்ளும்படி கூறினார். எல்லோரும் கண்களை மூடிக் கொண்டதும் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் அக்னியைக் குடித்துவிட்டார். மறுநாள் பொழுது விடிந்த பிறகு மக்களனைவரும் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனுடன் வ்ரஜத்திற்குத் திரும்பி வந்தனர்.

******

அஸுர ஸம்ஹாரம்

ப்ருந்தாவனத்திற்கு அருகிலேயே பனங்காடு ஒன்று இருந்தது. அந்தக் காட்டில் 'தேனுகன்' என்னும் அரக்கன் கழுதை உருக்கொண்டு வசித்து

Koviloor Digital Library

வந்தான். அவனது குடும்பத்து அரக்கர்களும் கழுதை உருவில்தான் வாழ்ந்து வந்தனர். மனிதனோ, விலங்கோ அந்தக் காட்டு வழியாகச் செல்பவர் யாராயினும் அவர்களைக் கொன்று தின்றுவிடும் துஷ்டர்கள் இந்த அரக்கர்கள். ஒருநாள் பலராமனும், ஸ்ரீக்ருஷ்ணனும் கோப பாலகர்களோடு பசுக்களை மேய்த்தவாறு அந்தக் காட்டிற்கருகே வந்தனர். நன்கு பழுத்த பனம்பழங்களின் நறுமணம் கோபபாலர்களுக்கு மிகவும் பிடித்தது. அவர்களனைவரும் ஸ்ரீக்ருஷ்ண-பலராமரிடம் தாங்கள் பனம்பழம் சாப்பிட விரும்புவதாகக் கூறினார்கள். தங்களது நண்பர் களின் பேச்சைக் கேட்ட சகோதரரிருவரும் அந்தக் காட்டிற்குச் சென்றனர். பலராமர் ஒரு பனைமரத்தைப் பிடித்து உலுக்கினார். அதனால் அந்த பனைமரத்திலிருந்த பழங்கள் உதிர்ந்தன.

பனம்பழங்கள் விழும் ஒலிகேட்டு தேனுகாஸுரன் ஓடோடி வந்தான். கழுதை உருவிலிருந்த அவன் அதற்கேற்ப பலராமரின் மார்பில் பின்னங்கால்களால் உதைத்தான். பலராமர் அந்த அரக்கனின் இருபின்னங்கால் களையும் பிடித்து அவன் உயிர் போகும்படி சுழற்றினார். பின் அவர் அவனது உடலைச் சுழற்றி ஒரு பனைமரத்தின் மீது மோதினார். இதனால் அந்த மரமும் முறிந்துவிட்டது. தேனுகாஸுரன் இறந்தபிறகு கழுதை உருவிலிருந்த அவனுடைய குடும்பத்தினரான அஸுரர் அனைவரும் ஓடி வந்தனர். ஆனால் ஸ்ரீக்ருஷ்ண னும், பலராமனும் அந்த அரக்கர்களின் கால்களைப் பிடித்து மோதி அறைந்தனர். சகோதரர்கள் இருவரும் அந்த அரக்கர்கள் அனைவரையும் கொன்றுவிட்டனர். அன்றைய

Koviloor Digital Library

தினத்திலிருந்து அந்த வனம் எல்லா உயிரினங்களுக்கும் பயன்படத் தொடங்கியது.

ஒருநாள், கம்ஸன் அனுப்பிய 'ப்ரலம்பன்' என்னும் அரக்கன் ஆயர்சிறுவனைப்போன்ற உருவில் வந்து, கோபபாலர்களோடு சேர்ந்து விளையாடத் தொடங்கினான். [விளையாட்டில்] இருகுழு பிரிந்தபோது ஒரு குழுவிற்கு பலராமனும், மற்றொரு குழுவிற்கு ஸ்ரீக்ருஷ்ணனும் தலைவராயினர். ப்ரலம்பன் ஸ்ரீக்ருஷ்ணனுடைய குழுவில் சேர்ந்தான். விளையாட்டில் ஸ்ரீக்ருஷ்ணனுடைய குழு தோற்றுவிட்டது. தோற்ற குழுவின் சிறுவர்கள் வென்ற குழுவின் சிறுவர்களை முதுகில் சுமந்து "பாண்டீரம்" என்ற பெயருள்ள ஆலமரம் வரையில் எடுத்துச் செல்லவேண்டும் என்ற விஷயம் முதலிலேயே தீர்மானமாகிவிட்டது. ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனின் குழுவைச் சேர்ந்த சிறுவர்கள் பலராமருடைய குழுவிலிருந்த சிறுவர்களை முதுகில் உட்கார வைத்துக் கொண்டனர். ப்ரலம்பாஸுரன் பலராமரை முதுகில் உட்கார வைத்துக் கொண்டான். அந்த அஸுரன் பலராமரைக் கம்ஸனிடத்தில் கொண்டு செல்ல விரும்பினான். புதிதாக வந்த சிறுவன் தன்னை எடுத்துக் கொண்டு மிக வேகமாக ஓடிக் கொண்டிருப்பதைக் கண்ட பலராமர் தன்னுடைய பாரத்தை அதிகமாக்கிக் கொண்டார். ப்ரலம்பாஸுரன் பலராமருடைய பாரத்தால் ஓட முடியாமல் போகவே அவன் தனது அரக்க உருவை வெளிப்படுத்திக் கொண்டு பலராமரைத் தூக்கிக் கொண்டு வானத்தில் பறக்கத் தொடங்கினான். கன்னங்கரிய அரக்கனைப் பார்த்த பலராமர் அவனது தலையின்மீது நன்றாக ஒரு குத்துவிட்டார். அதனால் ப்ரலம்பாஸுரனுடைய

Koviloor Digital Library

தலை பிளந்துவிட்டது. அவன் இறந்து விழுந்து விட்டான். அன்றைய தினமும் பிற்பகலுக்குப் பிறகு ஆயர்சிறுவர்கள் விளையாட்டில் ஈடுபட்டிருந்த போது அவர்களது பசுக்கள் மேய்ந்து கொண்டு வெகுதூரம் சென்றுவிட்டன. முஞ்ச வனத்தில் அலைந்தன. கோபபாலர்கள் அவைகளைத் தேடிக் கொண்டு அங்கு வந்தனர். பசுக்களை அவர்கள் ஓட்டிச் செல்லத் தொடங்கியபோது காட்டில் நான்குபுறமும் காட்டுத்தீ சூழ்ந்தது. பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் அனைவரையும் கண்களை மூடிக் கொள்ளச் செய்து நெருப்பைக் குடித்துவிட்டார். எல்லா ஆயர்சிறுவர்கள் மற்றும் பசுக்களின் உயிரையும் காப்பாற்றிவிட்டார்.

தானவர்களின் அரசனும் மாயையை அறிந்த அனைவரிலும் சிறந்தவருமான 'மயன்' எனும் தானவனுடைய ஒரு மகன் வ்யோமாஸுரன். அவன் கம்ஸனுக்குத் தோழன். தன்னுடைய நண்பன் கம்ஸனுக்கு நன்மை செய்யும் எண்ணத்துடன் ஒரு நாள் அவன் கோபபாலனைப் போல வேடம் தரித்து வ்ரஜத்திற்கு வந்தான். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனுடைய நண்பர்களுடன் சேர்ந்து விளையாடத் தொடங்கினான். அன்றைய தினம் சில சிறுவர்கள் ஆடுகளாகவும், சிலர் காவலர் களாகவும், இன்னும் சிலர் திருடர்களாகவும் ஆகி விளையாடிக் கொண்டிருந்தனர். வ்யோமாஸுரன் திருடனாகிய சிறுவர்களில் ஒருவனாக இருந்தான். அவன் ஆடாகியிருந்த பிள்ளைகளையும், திருடனாகியிருந்த பிள்ளைகளையும்கூட பிடித்து அழைத்துச் சென்று ஒரு குகையில் அடைத்து அந்தக் குகையின் வாயிலில் மிகவும் கனமான பாறையை வைத்துவிட்டு வந்தான். அவன் எல்லாச் சிறுவர்களையும் அடைத்தபின் கொன்று

Koviloor Digital Library

விட விரும்பினான். வ்யோமாஸுரன் ஆடாகி யிருந்த எல்லாச் சிறுவர்களையும் பெரும்பாலான திருடராகியிருந்த பாலர்களையும்கூட குகையில் அடைத்ததும் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனுக்கு அவன்மீது ஐயமுண்டாயிற்று. அவன் ஒரு சிறுவனைக் கொண்டு செல்லும்போது ஸ்ரீக்ருஷ்ணனும் அவனுக்குப் பின்னால் ஓடினார். அவனை அவர் பிடித்துவிட்டார். வ்யோமாஸுரன் தன்னுடைய அரக்க உருவை வெளிப்படுத்திக் கொண்டு உயிரைக் காத்துக் கொள்ள ஓட முயற்சித்தான். ஆனால் பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் அவனைக் கையால் அடித்தும், குத்துக்கள் விட்டும் கொன்று விட்டார். குகையின் வாயிலில் இருந்த பாறையை விலக்கிய ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் தனது நண்பர்களாகிய எல்லா கோபபாலர்களையும் வெளியே அழைத்து வந்தார்.

****

கோவர்தனம் தாங்குதல்

ஸ்ரீக்ருஷ்ணன் பசுக்களை மேய்த்துவிட்டுத் திரும்பியபோது ஒரு நாள் மாலை வ்ரஜ கோபர்கள் ஏதோ யாகத்திற்கான ஏற்பாடுகள் செய்து கொண்டிருப்பதைக் கண்டார். அது பற்றிக் கேட்டதற்கு நந்தபாபா மழைக்குத் தலைவன் இந்த்ரனென்றும், இந்த்ரனை மகிழ்விக்க யாகம் நடக்கப் போகிறதென்றும் கூறினார். பகவான் இந்த்ரனுடைய ஆணவத்தைப்போக்க எண்ணினார். அவர் "வ்ரஜத்திற்கு மலையரசனான இந்த கோவர்தனன்தான் தேவதை. நாம் எல்லோரும் அவரையே பூஜை செய்யலாம்" என்று கூறினார்.

Koviloor Digital Library

பகவான் ஸ்ரீக்ருஷ்ணனின் விருப்பத்திற்கேற்ப ஆயர்கள் இந்த்ர யாகத்தைக் கைவிட்டு விட்டனர். இந்த்ர யாகத்திற்காகச் சேகரிக்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் கொண்டு மறுநாள் காலையே மலையரசன் கோவர்தனனுக்குப் பூஜை செய்தனர். ஆயர்கள் பசுக்களையும், அந்தணர்களையும்கூட பூஜித்தனர். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் வேறொரு பெரிய உருவத்துடன் மலையின் மீது தோன்றினார். அந்த உருவத்தின்மூலம், ஆயர்களால் சமர்ப்பிக்கப்பட்ட நிவேதனப் பொருட்களை நன்றாகச் சாப்பிடத் தொடங்கினார். இவ்வளவு பெரிய தேவதையின் காக்ஷியை நேரடியாகக் கண்ட ஆயர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டாயிற்று. அவர்கள் பூஜை செய்துவிட்டு, கோவர்தனமலையை வலம் வந்து பின் தத்தம் வீடுகளுக்குத் திரும்பி வந்தனர்.

தேவர்களின் அரசனான இந்த்ரன் ஆயர்கள் தனது யாகத்தை நிறுத்திவிட்டதைக் கண்டதும் மிகுந்த கோபமடைந்தார். அவர் பிரளயத்தைப் போல உலகத்தையே மூழ்கடிக்கச் செய்யும் பெருமழை பெய்து வ்ரஜம் முழுவதையும் அடித்துச் செல்லுமாறு மேகங்களுக்கு ஆணையிட்டார். பிரளய மேகங்கள் யானைத்துதிக்கையைப் போன்ற தாரைகளை மழையாகப் பொழிவித்தன. பெரும் புயற்காற்று வீசியது. ஆலங்கட்டிகள் விழத் தொடங்கின. மேகம் கர்ஜிக்கவும், தொடர்ந்து மின்னல் கண்களைப் பறிக்கவும் தொடங்கியது. இந்த்ரன் தானே தனது ஐராவதமெனும் யானையின்மீது அமர்ந்து வஜ்ராயுதத்தை வீசலானார்.

வ்ரஜத்தில் நான்குபுறமும் நீர் நிறைந்து விட்டது. மனிதர்களும், விலங்குகளும் குளிரின் காரணமாக வெடவெடவென்று நடுங்கத்

Koviloor Digital Library

தொடங்கினர். மக்கள் எல்லோரும் பயந்து விட்டனர். அவர்கள் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனிடம் ஓடி வந்தனர். உயிரைக் காப்பாற்றும்படி வேண்டிக் கொண்டனர். இந்த எல்லாத் தொல்லைகளையும் தருவது இந்த்ரன்தான் என்பதை பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் அறிந்துவிட்டார். அவர் மலையரசன் கோவர்தனத்தின் அருகே சென்றார். அந்த ஏழு கோசப்பரப்பு உள்ள மலையை அவர் இடது கையாலேயே குடையைப்போல எளிதாக எடுத்துக் கொண்டார். பகவான் ஆயர்களிடம் "நீங்கள் பயப்படவேண்டாம். தத்தம் பசுக்களையும், வீட்டிலுள்ள எல்லா சாமான்களையும் எடுத்துக் கொண்டு இந்த மலைக்குக் கீழே வந்துவிடுங்கள்" என்றார்.

வ்ரஜவாசிகள், அனைவரும் தம் கால்நடைகளோடும், வீட்டுச் சாமான்களோடும் அந்த மலைக்குக் கீழே வந்துவிட்டனர். ஏழு நாட்கள் இரவும், பகலும் மழை பெய்து கொண்டேயிருந்தது. ஆலங்கட்டியும் விழுந்து கொண்டேயிருந்தது. அந்த ஏழு நாட்கள் இரவும், பகலும் சிறிதும் அசையாமல் பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் தன் இடது கையின் சுண்டுவிரலின் மீது அந்த மலையைத் தூக்கியபடி நின்றிருந்தார். இடிகள் விழுந்தவாறிருந்தன. ஆனால் மலையின் கீழே ஆயர்களுக்கு இந்த உபத்திரவங்களைப் பற்றிய விவரமே தெரியவில்லை. மலைக்கு மேலே பகவானின் சக்கரம் சுழன்று கொண்டேயிருந்தது. அது மழைநீரை வற்ற வைத்துக் கொண்டேயிருந்ததால் யமுனையில் வெள்ளம் ஏற்படவில்லை.

ஏழு நாட்களில் பிரளய மேகங்களின் நீர் தீர்ந்துவிட்டது. வஜ்ராயுதத்தை வீசி வீசி இந்த்ரனின் கைகள் களைத்துவிட்டன. இந்த்ரனின்

Koviloor Digital Library

ஆணவம் அழிந்துவிட்டது. அவர் மேகங்களைத் தடுத்தார். மழை நின்று, வெயில் வந்துவிட்டது. தத்தம் பசுக்களுடனும், பொருட்களுடனும் மலையின் கீழிருந்து கிளம்பி, தம் வீடுகளுக்குச் செல்லுமாறு ஸ்ரீக்ருஷ்ணன் ஆயர்களுக்கு ஆணையிட்டார். எல்லோரும் அங்கிருந்து கிளம்பிச் சென்றபின் பகவான் மலையை முதலில் இருந்ததைப்போல பூமியில் வைத்துவிட்டார்.

தன் ஆணவம் அழிந்தபின் இந்த்ரன், ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் சாட்சாத் பரமாத்மா என்று அறிந்து கொண்டுவிட்டார். அவர் தனிமையில் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனிடம் காமதேனுவுடன் வந்தார், துதித்தார், தனது குற்றங்களை மன்னிக்கும்படி வேண்டினார். காமதேனு தனது பாலினாலும், இந்த்ரன் ஆகாய கங்கையாலும் ஸ்ரீக்ருஷ்ண சந்த்ரனுக்கு அபிஷேகம் செய்தனர். அவரைப் பசுக்களின் இந்த்ரனாக்கினார்கள். இதனாலேயே பகவான் ஸ்ரீக்ருஷ்ணனுக்கு கோவிந்தன் என்னும் ஒரு பெயர் உண்டாயிற்று.

****

நந்தபாபாவைக் காப்பாற்றுதல்

இரவு மூன்றாம் யாமத்தில் நீர்நிலைகளில் இறங்கக்கூடாது. அந்த நேரம் வருணதேவதையின் பணியாட்கள் அவ்வப்போது நீரில் சுற்றுவது வழக்கம். ஒரு முறை நந்தபாபா ஏகாதசி விரதம் முடித்தார். ஆயர்கள் அன்று இரவில் கண்விழித்து பகவானைப் பற்றிய பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தனர். பொழுது விடிகிறது என்றெண்ணிய நந்தபாபா நீராடுவதற்காக யமுனையில் இறங்கினார். அச்சமயம் இரவின்

Koviloor Digital Library

நான்காம் ஜாமம் தொடங்கவில்லை. வருணதேவரின் பணியாளான யக்ஷன் ஒருவன் அங்கு யமுனை நீரில் சுற்றி வந்து கொண்டிருந்தான். அவன் நந்தபாபாவைப் பிடித்துக் கொண்டு வருணதேவரிடம் சென்றான்.

ஆயர்கள் நந்தபாபா யமுனையில் மூழ்கி விட்டார் என்று கருதினார்கள். அவர்கள் கூச்சலிடவும், ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனை அழைக்கவும் தொடங்கினார்கள். அவர்களுடைய அழைப்பைக் கேட்ட பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் ஓடிவந்து யமுனையில் குதித்துவிட்டார். அவர் நேராக வருணலோகத்தை அடைந்தார். லோகபாலனான வருணன் பகவானைப் பூஜை செய்தார், தனது சேவகன் நந்தபாபாவை அறியாமல் பிடித்துக் கொண்டு வந்த குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டினார். பகவான் நந்தபாபாவை வருண லோகத்திலிருந்து அழைத்துக் கொண்டு யமுனை நீரிலிருந்து வெளியே வந்தார். நந்தபாபா வருண லோகத்தையும், வருணதேவன் கூறிய விஷயங்களையும் ஆயர்களிடம் முழுவதுமாகக் கூறினார். இதைக் கேட்ட ஆயர்களுக்கு மிகுந்த வியப்புண்டாயிற்று. ஆயர்களிடம் கருணைகூர்ந்து பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் தெய்விகமானதும், தனது சொந்த இருப்பிடமானதுமான கோலோகத்தை அந்த சமயமே அனைவரையும் காணச் செய்தார்.

ஒரு நாள் ஸ்ரீக்ருஷ்ண-பலராமர்கள் ஆயர் சிறுவர்களுடன் பசுக்களை மேய்த்துக் கொண்டே காட்டில் வெகுதூரம் சென்றுவிட்டனர். பிற்பகல் ஆகிவிட்டதால் சிறுவர்களுக்கு நன்றாகப் பசிக்கத் தொடங்கியது. அங்கிருந்து சிறிது தூரத்தில் மதுராவைச் சேர்ந்த சில அந்தணர்கள் யாகம் செய்து கொண்டிருந்தனர். பகவான் ஆயர்சிறுவர்

Koviloor Digital Library

களை அந்தணர்களிடம் உணவு கேட்குமாறு கூறி அங்கு அனுப்பினார். கோபபாலர்கள் அந்தணர் களிடத்தில் ஸ்ரீக்ருஷ்ணனுடைய பெயரைச் சொல்லி உணவு கேட்டனர். ஆனால் அந்தணர் எதுவுமே கூறவில்லை. அவநம்பிக்கையடைந்த பிள்ளைகள் திரும்பி வந்தனர். பகவான் மறுமுறை பிள்ளைகளை அந்த அந்தணர்களின் மனைவி யரிடம் உணவு கேட்குமாறு கூறி அனுப்பினார். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் அருகிலுள்ள காட்டிற்கு வந்திருப்பதையும், பசியோடிருப்பதையும் கேட்ட வுடனேயே, பிராமண பத்தினிகள் பலவகை உணவு வகைகளைத் தட்டுகளில் நிரப்பிக் கொண்டு பகவானிடம் ஓடி வந்தனர். பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் தன்னுடைய நண்பர்களோடு அவர் களுடைய அந்த உணவை ஏற்றுக் கொண்டார். அந்தண மனைவியர் திரும்பி மறுபடி யாகம் நடைபெறும் இடத்திற்கு வந்ததும், அவர்களை தரிசித்ததால் அந்தணர்களின் பாவம் முழுவதும் நசித்துவிட்டது. அவர்களின் இதயமும் தூய்மை யாகிவிட்டது. கோபகுமாரர்கள் கேட்டபோது அவர்களுக்கு அன்னம் அளிக்காததை எண்ணி அவர்கள் மிகவும் துயருற்றனர். பகவானை அந்தணர்கள் தரிசிக்க விரும்பினாலும் கம்ஸனிடமிருந்த பயத்தால் அவர்களால் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனிடம் வரமுடியவில்லை.

தன்னுடைய பக்தர்களை - தன்னை அண்டினவர்களை - ஆபத்துக் காலத்தில் உண்மையான பக்தியோடு அழைப்பவர் எவரா யினும் அவர்களை - பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் நிச்சயம் காப்பாற்றுகிறார். ஒரு முறை சிவராத்திரி யன்று அம்பிகாவனத்திலுள்ள சிவபெருமானைப் பூஜை செய்வதற்காக ஸ்ரீக்ருஷ்ணனுடனும்,

Koviloor Digital Library

பலராமனுடனும் நந்தபாபா அங்கு போயிருந்தார். அனைவரும் நாள் முழுவதும் விரதமிருந்தனர், இரவு பூஜை செய்வதிலாழ்ந்திருந்தனர். பூஜை முடிந்தபின் காட்டில் அந்த இடத்திலேயே ஆயர் களனைவரும் தூங்கிவிட்டனர். காட்டிலிருந்து ஒரு மிகப் பெரிய மலைப்பாம்பு யாரும் அறியாதபடி ஊர்ந்து வந்துவிட்டது. நந்தபாபாவின் இருகால் களையும் வாயில் கவ்விக் கொண்டு அவரை விழுங்கத் தொடங்கியது. நந்தபாபா கோபர்களைக் கூவி எழுப்பினார். ஆயர்கள் எரியும் கொள்ளிக் கட்டைகளால் அந்த மலைப்பாம்பை அடித்தனர். ஆனால் எவ்வளவு அடித்தபோதும் அந்த மலைப்பாம்பு நந்தபாபாவை விழுங்குவதை நிறுத்தவில்லை.

ஆயர்களின் அழைப்பைக் கேட்டு ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் அங்கு வந்தார். அவர் தனது காலால் மலைப்பாம்பை மிதித்தார். பகவான் ஸ்ரீக்ருஷ்ணனின் திருவடிகள் பட்டவுடனே அந்த மலைப்பாம்பு தனது பாம்புருவைவிட்டு ஒரு கந்தர்வனின் உருவில் வெளிப்பட்டது. அவனது உடல் மிக ஒளிபொருந்தியதாக விளங்கிற்று. விலைமதிப்பற்ற பலவகை மணிகளாலான அணிகலன்களை அவன் அணிந்திருந்தான். அவன் 'ஸுதர்சனன்' என்னும் கந்தர்வன். ஒரு முறை 'தேவலர்' என்னும் ரிஷியின் அழகற்ற உருவத்தைக் கண்டு அவன் சிரித்துவிட்டதால் ரிஷி அவனை மலைப்பாம்பாகும்படி சபித்துவிட்டார். ஸ்ரீக்ருஷ்ண சந்த்ரனின் திருவடிகளின் ஸ்பரிசத்தால் அந்த கந்தர்வன் ரிஷியின் சாபத்திலிருந்து விடுபட்டு மறுபடியும் கந்தர்வனாகிவிட்டான். அவன் சியாமஸுந்தரனைத் துதித்து அவரது அனுமதியைப் பெற்று தேவலோகத்திற்குச் சென்றுவிட்டான்.

Koviloor Digital Library

நந்தபாபா மலைப்பாம்பிடமிருந்து விடுபட்டதும் ஆயர்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர். மறுநாள் அவர்கள் அம்பிகாவனத்திலிருந்து வ்ரஜத்திற்குத் திரும்பி வந்தனர்.

****

தீயவர் மூவரின் வதம்

பங்குனி மாத பௌர்ணமி; ஹோலி பண்டிகையின் முதல் நாள் இரவில் விறகுகளை எரிக்கும் நேரம்; இரவு சிறிதே ஆகியிருந்தது; வெண்மையான நிலவு விரிந்திருந்தது. ஸ்ரீபலராமனும், ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனும் யமுனைக் கரையில் உலவியபடி ப்ருந்தாவனத்தின் அழகைக் கண்டு களித்துக் கொண்டிருந்தனர். கோபியர் சிலரும் அங்கு அவ்விருவரையும் தொடர்ந்து வந்தனர், பூப்பறிப்பதில் ஈடுபட்டனர். அதே நேரத்தில், குபேரனைச் சேர்ந்த 'சங்கசூட'னெனும் யக்ஷன் அங்கு வந்தான். அந்த துஷ்ட யக்ஷன் திடீரென்று அந்த அழகிய கோபியர்களைப் பிடித்துக் கொண்டு ஓடத் தொடங்கினான். பாவம் கோபிகள்! ஸ்ரீக்ருஷ்ண-பலராமரின் பெயர்களைக் கூறி, 'காப்பாற்றுங்கள்', 'காப்பாற்றுங்கள்' என்று அழுது கூக்குரலிட்டனர்.

கோபியர் அழுது, அழைப்பதைக் கேட்ட சகோதரரிருவரும் அவர்களிடம் 'பயப்படாதீர்' என்று கூறி ஆளுக்கு ஒரு சால மரத்தைப் பிடுங்கிக் கையில் எடுத்துக் கொண்டு ஓடினார்கள். அண்ணனும், கண்ணனும் முழு மரத்தையே வேரோடு பிடுங்கி எடுத்துக் கொண்டு ஓடி வருமளவுக்குப் பலசாலிகள் என்பதைக் கண்ட யக்ஷன் கோபியரை விட்டுவிட்டுத் தன் உயிரைக்

Koviloor Digital Library

KOVILOOR ALAGAM

காத்துக் கொள்ள ஓட ஆரம்பித்தான். கோபியரருகில் அவர்களின் பாதுகாப்பிற்காக பலராமர் நின்று கொண்டார். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் யக்ஷனுக்குப் பின்னால் ஓடினார். சிறிது தூரத்திலேயே ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் பின்னாலிருந்து யக்ஷனுடைய தலையின் மீது ஓங்கிக் குத்தினார். அதனால் அந்த யக்ஷனின் தலை தூளாகிவிட்டது. அவன் இறந்து விட்டான். அவனது தலைமுடியில் மிகச் சிறந்ததான ஒரு மணி தொடுக்கப்பட்டிருந்தது. ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் அந்த மணியை எடுத்துக் கொண்டு வந்து தனது அண்ணன் பலராமனுக்குப் பரிசளித்துவிட்டார்.

இதேபோல ஒரு நாள் மாலை பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் ஆயர்சிறுவர்களுடன் மாடு மேய்த்துவிட்டுக் காட்டிலிருந்து திரும்பிக் கொண்டிருக்கும்போது கம்ஸன் அனுப்பிய 'அரிஷ்டாஸுரன்' என்னும் அரக்கன் மிகப்பெரிய காளை மாடாகி வ்ரஜத்திற்கு வந்தான். அந்தத் தீயவன் தனது கொம்புகளால் பெரிய சுவர்களையும், வீடுகளையும் வீழ்த்தவும், ஓயாமல் கர்ஜித்து பசுக்களை பயமுறுத்தவும் தொடங்கினான். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் கையைத் தட்டி அழைத்து அவனை வலுச்சண்டைக்கு அழைத்தார். அவன் தலையைத் தாழ்த்தி, கொம்புகளிரண்டையும் நீட்டியவாறு வைத்து, மிக வேகமாக மூச்சுவிட்டபடி ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் மீது பாய்ந்தான். முதலில் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் கொம்பைப் பிடித்து அவனைப் பின்னால் தள்ளி விழ வைத்தார். ஆனால் அவன் மீண்டும் எழுந்து கொல்ல ஓடிவரவே அவனது கொம்புகளிரண்டையும் பிடித்து, ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் அவனது கழுத்தைத் திருகி பூமியில் வீழ்த்தினார். கொம்பைப் பிடுங்கிவிட்டார்.

Koviloor Digital Library

கழுத்து திருகப்பட்ட காரணத்தினால் அந்த அரக்கன் உயிர்விட்டான். அரிஷ்டாஸுரன் கொல்லப்பட்டதால் தேவரிஷி நாரதர் கம்ஸனிடம் சென்று ஸ்ரீபலராம-க்ருஷ்ணர் வஸுதேவருடைய பிள்ளைகளே என்றும், அவர்களை வஸுதேவர் தான் வ்ரஜத்தில் நந்தரிடம் மறைத்து வைத்துள்ளார் என்றும் கூறிவிட்டார். இதைக் கேட்ட கம்ஸன் வஸுதேவரைக் கொல்ல ஆயத்த மானான். ஆனால் நாரதர் எடுத்துக் கூறியதால் அவன் அவரைக் கொல்லாமல் விட்டான். அவன் வஸுதேவருக்கும், தேவகிக்கும் கை-கால்களில் விலங்குகளைப் பூட்டி அவர்களைச் சிறையில் அடைத்துவிட்டான். ஸ்ரீக்ருஷ்ணனைக் கொல்வதற் காக அவன் தன்னுடையவர்களிலேயே மிகுந்த பலசாலியான 'கேசி' என்னும் அரக்கனை வ்ரஜத்திற்கு அனுப்பினான்.

அரக்கனான கேசி மிகப் பெரிய குதிரை வடிவிலிருந்தான். அவன் விடியற்காலை நேரத்தில் வ்ரஜத்தை அடைந்தான். யானையைவிடப் பெரியதாகவிருந்த மிகப் பயங்கரமான கறுப்புக் குதிரை வாயைப் பெரிதாகத் திறந்து கொண்டு ஓடுவதையும், பயங்கரமாகக் கனைப்பதையும் கண்ட மக்கள் பயத்தினால் வீடுகளின் வாயில்களை மூடிக் கொண்டனர். பசுக்கள் இங்குமங்கும் ஓடத் தொடங்கின. வ்ரஜ மக்கள் பயப்படுவதைக் கண்ட பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் வீட்டிலிருந்து வெளியே வந்தார். அவர் கேசியை வலுவில் அழைத்தார். கேசியோ ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனைத்தான் தேடிக் கொண்டிருந்தான். எனவே அவன் வாயைப் பிளந்துக் கொண்டு அவரை நோக்கி ஓடினான். அவன் அருகில் வந்ததும் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் சிரித்துக் கொண்டே தன்னுடைய வலது கை

Koviloor Digital Library

முழுவதையும் அவனது வாயினுள் நுழைத்தார். தோளளவு வரை பகவானது திருக்கை அரக்கனது வாய்க்குள் நுழைந்த வேகத்தில், அவனது பற்கள் உடைந்து விழுந்தன. ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனின் கை கேசியின் உடலில் சென்று பெரிதாக வளரத் தொடங்கியது. கேசியின் உடல் முழுவதும் வெள்ளரிப்பழம்போல வெடித்து விடுமளவு பெரிதாயிற்று. கேசி இறந்துவிட்டான். ஸ்ரீக்ருஷ்ண சந்த்ரன் அவன் வாயிலிருந்து தனது புஜத்தை வெளியே எடுத்துக் கொண்டார். தேவர்களும் பயந்து நடுங்கும்படி வலிமையுள்ளவனும், கொடியவனுமாக இருந்தவன் இந்த கேசி. எனவே அவன் இறந்ததால் தேவர்கள் மிகவும் மகிழ்ந்தனர். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனின் மீது வானத்திலிருந்து மலர் மழை பொழிந்து அவரை வாழ்க! வாழ்க!! என வாழ்த்தினர்.

****

வ்ரஜத்திலிருந்து வடமதுரைக்கு வருதல்

ஸ்ரீக்ருஷ்ணனே தன்னைக் கொல்லப் போகிறவன் என்பதைக் கேட்ட பொழுதிலிருந்து கம்ஸன், சிறிதும் அமைதியில்லாமல் இருந்தான். வடமதுரையில் மிகப்பெரிய திருவிழா நடைபெறப் போகிறது என்று கூறி ஸ்ரீக்ருஷ்ணனையும், பல ராமனையும் அழைத்து வருவதற்காக அக்ரூரரை வ்ரஜத்திற்கு அனுப்பினான். நந்தரும் மற்ற ஆயர்களும்கூட திருவிழாவைக் காண வரலா மென்றும் கூறி அனுப்பினான். அக்ரூரர் பகவானுடைய பக்தர். அவர் வ்ரஜத்திற்கு வந்து ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனிடம் கம்ஸனுடைய சூழ்ச்சிகள் அனைத்தையும் கூறிவிட்டார். ஆனால் பகவான்

Koviloor Digital Library

ஸ்ரீக்ருஷ்ணனோ துஷ்ட அரக்கர்களைக் கொல்வதற்காகவே அவதரித்திருந்தார். அவர் நந்தபாபாவிடமும், கோபர்களிடமும் மதுராவின் திருவிழாவைக் காணச் செல்ல வேண்டுமென்று கூறினார். பலராமரும், ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனும் அக்ரூரருடன் தேரில் அமர்ந்து மதுராவிற்கு வந்தனர். நந்தபாபா மற்ற ஆயர்களுடன் வண்டிகளில் அமர்ந்து கொண்டு வந்தார். மதுரா நகரத்திற்கு வெளியே ஒரு தோட்டத்தில் வண்டிகளை நிறுத்திய நந்தபாபா அங்கேயே தங்குமிடங்கள் அமைத்தார். ஸ்ரீக்ருஷ்ண-பலராமரும் நந்தபாபாவோடு தங்கிவிட்டனர். அக்ரூரரை அவருடைய தேரில் நகரத்திற்குச் செல்லுமாறு கூறிவிட்டனர்.

அந்த முகாமில் உணவருந்திவிட்டு சிறிதுநேரம் ஓய்வு எடுத்துக் கொண்டு, ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் அண்ணன் பலராமனுடனும், வ்ரஜத்திலிருந்து வந்திருந்த மற்ற கோபபாலர்களுடனும் மதுரா நகரைக் காணப் புறப்பட்டுவிட்டார். நகரத்தினுள் நுழைந்ததுமே அவரை கம்ஸனுடைய வண்ணான் [சாயக்காரன்] சந்தித்தான். அந்த வண்ணான் ராஜா கம்ஸனுடைய துணிகளைத் துவைப்பதும், சாயம் போடுவதுமான பணியைச் செய்து வந்தான். இவனுடன் இன்னும் பல பேர் துணி மூட்டைகளைக் கொண்டு வந்திருந்தனர். ஸ்ரீக்ருஷ்ணன் விளையாட்டாக அந்த சாயக்கார வண்ணானிடம் சில ஆடைகளைத் தருமாறு கேட்டார். அந்த வண்ணான் துஷ்டன்; ஆணவமுள்ளவன். அவன் கடுமையான வார்த்தைகள் பல கூறி ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனை அதட்டி பயமுறுத்தினான். அதனால் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் அவன் தலை அழுந்துவிடுமாறு ஒரு அறை கொடுத்தார்.

Koviloor Digital Library

அவனுடனிருந்த மற்ற வண்ணான்கள் பயத்தின் காரணமாகத் துணி மூட்டைகளை அங்கேயே வீசியெறிந்துவிட்டு இங்குமங்குமாக ஓடிவிட்டனர்.

வண்ணான்கள் ஓடிப்போனபின் ஸ்ரீக்ருஷ்ண னும், பலராமரும், மற்ற ஆயர்சிறுவர்களும் அந்தத் துணிகளில் அவரவருக்குப் பிடித்தவைகளை அணிந்து கொண்டனர். மீதித் துணிகளை அங்கேயே விட்டுவிட்டனர். அந்த ஆடைகள் சில சிறுவர்களின் அளவிற்குப் பொருந்தவில்லை. மிகவும் தளர்த்தியாக இருந்தன. அதைக் கண்ட ஒரு தையற்காரன் கத்தரி, ஊசி முதலியவற்றை எடுத்துக் கொண்டு விரைந்து வந்தான். சிறிது நேரத்திலேயே எல்லா ஆடைகளையும் அவர்களின் உடலளவிற்குத் தகுந்தாற்போல வெட்டியும், தைத்தும் கொடுத்தான். பிறகு ஸுதாமா என்னும் பெயருடைய பூக்காரன் ஒருவனுடைய வீடு வந்தது. ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் எல்லோருடனும் அவனுடைய வீட்டிற்குச் சென்றார். பூக்கார ஸுதாமாவும் தையற்காரனைப் போல பகவானின் சிறந்த பக்தன். அவன் அண்ணனுக்கும், அச்சுதனுக்கும் மற்ற எல்லா பிள்ளைகளுக்கும் மிக நல்ல மாலைகளை அணிவித்தான். சியாமஸுந்தரர் தையற்காரனுக்கும், பூக்காரனுக்கும் தனது பக்தி கிடைக்கும் வரமருளினார்.

அங்கிருந்து மேலே சென்றதும் கம்ஸனின் வேலைக்காரி குப்ஜா என்பவள் அவர்களைச் சந்தித்தாள். அவள் கம்ஸனுக்காக வாசனை மிகுந்த சந்தனம், நறுமணப்பூச்சு முதலியவற்றை எடுத்துச் சென்று கொண்டிருந்தாள். ஸ்ரீக்ருஷ்ணன் கூறிய தால் அவள் அவருக்கும், பலராமனுக்கும், கோப பாலர்களுக்கும் தன் கையால் சந்தனம்

Koviloor Digital Library

பூசிவிட்டாள். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் அதனால் மகிழ்ந்து அதே சமயம் அவளது கூன்முதுகை நேராக்கிவிட்டார். அவளது உடல் நேராகவும், அழகாகவும் ஆகிவிட்டது.

கம்ஸனிடம் சிவபெருமானின் ஒரு பெரிய வில் இருந்தது. அந்த வில் ஒரு அழகிய மாளிகையில் வைக்கப்பட்டிருந்தது. பல அரக்க வீரர்கள் அந்த வில்லைப் பாதுகாத்து வந்தனர். கம்ஸன் தினந்தோறும் அங்கு சென்று வில்லை பூஜை செய்து வந்தான். நகர மக்களிடம் இது பற்றிக் கேட்டறிந்த ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் தனது நண்பர்களுடன் வில் இருந்த அந்த மாளிகைக்குச் சென்றார். அவர் அந்த கனமான வில்லையெடுத்து ஓர் அதிர்ச்சி தந்து உடைத்துவிட்டார். வில்லின் பாதுகாவலர்களான அரக்கர்கள் அவரைக் கொல்ல வரவே பலராமரும், ஸ்ரீக்ருஷ்ணனும் உடைந்த வில்லின் ஒவ்வொரு துண்டைக் கையில் எடுத்துக் கொண்டு அதனாலேயே அந்த அரக்கர்களை அடித்து, உதைத்துத் துரத்திவிட்டனர். அந்த அரக்கர்கள் கம்ஸனிடம் சென்று முறையிட்டனர். ஸ்ரீக்ருஷ்ண-பலராமரைப் பிடிக்க கம்ஸன் ஒரு சேனையையே அனுப்பினான். ஆனால் அந்த சகோதரர்களிருவரும் அந்த சேனையின் அரக்கர்கள் அனைவரையும் கொன்றுவிட்டனர். பிறகு அங்கிருந்து கிளம்பி, நகரத்தில் சுற்றித் திரிந்துவிட்டு, மாலைப் பொழுதானதும் தங்களது முகாமிலிருந்த நந்தபாபாவிடம் அவர்கள் திரும்பி வந்தனர்.

****

Koviloor Digital Library

கம்ஸ வதம்

கம்ஸன் மிகப்பெரிய விளையாட்டுக்களம் ஒன்றை அழகுற அமைத்திருந்தான். ஸ்ரீக்ருஷ்ணனும், பலராமனும் தன்னுடைய சைனியம் முழுவதையும் கொன்றுவிட்டார்கள் என்ற செய்தியைக் கேட்டதும் அவன் மிகவும் கவலையடைந்தான். அவனுக்கு இரவு முழுவதும் தூக்கமே வரவில்லை. பொழுது விடிந்ததுமே அவன் விளையாட்டுக்களத்தில் அரசனின் அரியணையில் சென்று அமர்ந்தான். மற்ற ஜனங்களும் ஆயர்களுடன் நந்தபாபாவும்கூட வந்தனர். கம்ஸனுக்கு அவரவர் கொண்டு வந்திருந்த பரிசுகளை அளித்துவிட்டு தகுந்த இருக்கைகளில் உட்கார்ந்து கொண்டார்கள்.

துந்துபி, டோலக் ஆகிய இசைக்கருவிகள் முழங்கின. பலராமனும், ஸ்ரீக்ருஷ்ணனும் நீராடிவிட்டு ஆயர்சிறுவர்களோடு சிறிது தாமதமாக வந்தனர். கம்ஸனிடம் 'குவலயாபீடம்' என்னும் பெயருடைய யானை ஒன்று இருந்தது. அதற்கு அறுபதினாயிரம் யானை பலம் உண்டு. பாகன், கம்ஸன் சொல்லிக் கொடுத்திருந்தபடி, கள்ளைக் குடிக்க வைத்து அந்த யானையை மதங்கொள்ளும்படி செய்து, விளையாட்டுக்கள வாயிலில் கொண்டு வந்து நிறுத்திவிட்டான். ஸ்ரீக்ருஷ்ண சந்த்ரன் அங்கு வந்தபோது யானைப்பாகன் அந்த யானையை அங்குசத்தினால் அடித்து, ஸ்ரீக்ருஷ்ணனைக் கொல்வதற்காக அதை விரட்டினான். ஸ்ரீக்ருஷ்ணனும், பலராமனும் முதலில் அடித்தும், உதைத்தும் அந்த யானையைக் களைப்படையச் செய்தனர். பிறகு

Koviloor Digital Library

துதிக்கையைப் பிடித்துக் கொண்டு ஸ்ரீக்ருஷ்ணன் அதைத் தரையில் அடித்தார். யானையின் மிகப் பெரிய தந்தங்களைப் பெயர்த்து அவை களினாலேயே அவர்கள் யானையையும், பாகனையும், பாகனின் மற்ற உதவியாளர்களையும் அடித்துக் கொன்றுவிட்டனர்.

யானையின் தந்தத்தைத் தோளின்மீது கம்பைப்போல சுமந்தபடி ஸ்ரீக்ருஷ்ண-பலராமர் கள் கோபபாலர்களுடன் விளையாட்டுக்களத்தைச் சென்றடைந்தனர். அங்கு கம்ஸனின் குத்துச் சண்டை வீரர்கள் முதலிலிருந்தே கச்சம் அணிந்து குத்துச் சண்டை செய்து அவர்களைக் கொன்று விடுவதற்காகத் தயாராகக் காத்திருந்தனர். மல்லர் கள் வலுச்சண்டைக்கு அழைக்கவே ஸ்ரீக்ருஷ்ண னும், பலராமனும் களத்தில் இறங்கினர். 'சாணூரன்' என்னும் மல்லனோடு ஸ்ரீக்ருஷ்ண சந்த்ரனுக்கும், 'முஷ்டிகன்' என்பவனுடன் பலராமனுக்கும் மற்போர் தொடங்கியது. சாணூரனும், முஷ்டிகனும் மிகுந்த பலசாலிகள், மலையைப் போன்று பெருத்திருந்தனர். ஆனால் ஸ்ரீக்ருஷ்ண-பலராமரிடம் சண்டை இட்டதில் அவர்கள் சிறிது நேரத்திலேயே களைப்படைந்து விட்டனர். நியாயத்திற்குப் புறம்பாக ஸ்ரீக்ருஷ்ண-பலராமருடைய மார்பில் குத்தத் தொடங்கினர். அதனால் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் சாணூரனுடைய இருகைகளையும் பிடித்து அவனை ஆகாயத்தில் சுழற்றி பூமியின்மீது அறைந்தார். அதனால் சாணூரன் இறந்துவிட்டான். பலராமன் முஷ்டிகனின் கன்னத்தில் கையால் அறைந்தார். அவனது தலை பிளந்துவிட்டது. முஷ்டிகனும், சாணூரனும் இறந்த பிறகு 'கூடன், ஸலன், தோஸலன்' என்னும் மல்லர்கள் சகோதரர்

Koviloor Digital Library

களிருவரின் மேல் பாய்ந்தனர். ஆனால் பலராமர் ஒரு குத்துவிட்டு கூடனுடைய தலையை உடைத்துவிட்டார். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் காலால் எட்டி உதைத்து ஸலனையும், தோஸலனையும் கொன்றுவிட்டார். இவர்கள் இறந்ததும் மற்ற மல்லர்கள் ஓடிவிட்டனர்.

தனது குத்துச்சண்டை வீரர்கள் இறக்கவே கம்ஸனுக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று. அவன் பித்தனைப்போல உளறத் தொடங்கினான். அவன் வஸுதேவரையும், நந்தபாபாவையும், தனது தந்தை உக்ரஸேனனையும்கூட கொன்றுவிடும்படி ஆணையிட்டான். ஆனால் அவனது ஆணையை அங்கு கேட்பவர் யார்? பகவான் ஸ்ரீக்ருஷ்ண சந்த்ரன் உயரக் குதித்து கம்ஸனுடைய உயரமான அரியணையின் மீது ஏறினார். அவர் அவனது தலைமுடியைப் பற்றிக் கீழே தள்ளினார். பின் அவன் மீது தானும் குதித்தார். அதனால் கம்ஸனின் உயிர் பிரிந்துவிட்டது. கம்ஸனின் எட்டு சகோதரர்கள் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனைக் கொல்ல வந்தார்கள். ஆனால் பலராமன் ஒரு தடியை எடுத்துக் கொண்டார். அந்தத் தடியாலேயே அந்த எட்டுப் பேரையும் அடித்து வீழ்த்தினார்.

கம்ஸன் இறந்தபிறகு பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் தாய்-தந்தையரான ஸ்ரீதேவகி-வஸுதேவரைச் சிறையிலிருந்து விடுவித்தார். அவர்களது கைகால் விலங்குகளை நீக்கினார். அவர்களது காலில் விழுந்து வணங்கினார். நீண்ட காலத்திற்குப் பிறகு தனது புதல்வர்களைக் கண்ட தாய்-தந்தையர் வஸுதேவ-தேவகியின் ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் உக்ரஸேனரையும் சிறையிலிருந்து விடுவித்தார். அவரை மீண்டும் அரியணையில் அமர்த்தினார்.

Koviloor Digital Library

பாவி கம்ஸன் இறந்ததாலும், உக்ரஸேனர் மன்னரானதாலும் யாதவர்களுடைய துன்பம் முழுவதும் விலகிவிட்டன.

நந்தபாபாவிற்கும், கோபர்களுக்கும் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் வஸுதேவருடைய மகன் என்னும் விவரம் இப்பொழுது தெரிந்துவிட்டது. பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் மிகுந்த அன்போடு ஏராளமான பொருட்களைப் பரிசாக அளித்து நந்தபாபாவிற்கு மதுராவிலிருந்து விடை கொடுத் தனுப்பினார். ஸ்ரீக்ருஷ்ண-பலராமர் வெகுதூரம் வரை நந்தபாபாவை அனுப்ப உடன் வந்தனர். நந்தபாபா வ்ரஜத்திற்குத் திரும்பி வந்தார். வ்ரஜ மக்களுக்கு ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் திரும்பி வராததால் எல்லையற்ற துயரம் உண்டாயிற்று. அவர்கள் எப்போதும் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனைப் பற்றியே நினைத்து வந்தனர். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் எந்தக் காரியங்களைக் கேட்டால் மகிழ்ச்சி அடைவாரோ அவற்றிலேயே ஈடுபட்டிருந்தனர். வ்ரஜ மக்களின் மனம் எப்பொழுதும் ஸ்ரீக்ருஷ்ணனிடத்திலேயே ஆழ்ந்திருந்தது. அதனாலேயே பகவானின் பக்தர்களில் வ்ரஜ மக்கள் மிகச் சிறந்தவர்களாகக் கருதப்படுகின்றனர்.

****

குருதேவரின் ஆசிரமத்தில்

தற்காலத்தில் கல்வி பயிலப் பள்ளிக்கூடமும், கல்லூரியும் இருக்கின்றன. முன்னாளில் கல்வி அவ்வாறு கற்பிக்கப்படவில்லை. அந்தண, அரச, வணிக இனச் சிறுவர்கள் ஐந்து வயது முதல் பனிரெண்டு வயது வரை உபநயனம் [முப்புரி அணிதல்] ஆன பிறகு குருதேவருடைய

Koviloor Digital Library

ஆசிரமத்திற்குச் சென்று கல்வி கற்று வந்தனர். ரிஷிகளுடைய ஆசிரமங்கள் நகரத்திலிருந்து தள்ளி காட்டில் இருந்து வந்தன. மன்னனுடைய மகனானாலும், ஏழையினுடைய மகனானாலும் அங்கு எல்லோரும் சமமாக இருக்க வேண்டியிருந்தது. குருதேவருக்குப் பணிவிடை செய்யவேண்டும். குரு யாரை, எதற்குத் தகுதியுடையவனாகக் கருதுவாரோ அவனுக்கு அத்தகைய கல்வியை அளித்து வந்தார்.

ஸ்ரீபலராமனுக்கும், ஸ்ரீக்ருஷ்ணனுக்கும் உபநயனம் ஆயிற்று. அந்த சகோதரர்களிருவரும் பிரம்மசாரி வேஷத்தில் இடுப்பில் முஞ்சிக் கயிற்றினால் ஆன கௌபீனம் கட்டிக் கொண்டு, பக்கத்தில் மான்தோலையும், கையில் பலாச தண்டத்தையும் எடுத்துக் கொண்டு தற்போது உஜ்ஜயினி என்றழைக்கப்படும் அவந்திகாபுரிக்கு அருகே 'சாந்தீபனி' முனிவரின் ஆசிரமத்திற்குப் படிப்பதற்காகச் சென்றனர். சாந்தீபனி முனிவரின் பிறந்த பூமி காசியாயினும் அவர் அவந்திகாபுரத்தினருகே ஆசிரமம் அமைத்துக் கொண்டு வசித்து வந்தார். வெகுதூரத்திலிருந்தும் மாணவர்கள் அங்கு கல்வி பயில வருவது வழக்கம்.

பிரம்மசாரி மாணவன் விடியற்காலை நான்கு மணி சுமாருக்கு ப்ரம்ம முகூர்த்தத்திலேயே எழுந்துவிட வேண்டும். காலைக்கடன்களை முடித்துக் கொண்டு நீராடி, சந்தியா, தர்ப்பணம், ஹோமம் ஆகியவற்றைச் செய்ய வேண்டும். பிறகு ஆசிரமத்தைத் தூய்மை செய்தல், மெழுகுதல், ஹோமம் செய்வதற்கு தயார் செய்தல், குருவிற்காக தர்ப்பை, பழம், பூ கொண்டு வருதல் ஆகிய குருசேவை செய்ய வேண்டும். அவன் அருகிலுள்ள கிராமங்களுக்குச் சென்று பிக்ஷை

Koviloor Digital Library

வாங்கிக் கொண்டு வரவேண்டும். அந்த பிக்ஷையை அவன் குருதேவருக்கு முன்னால் வைத்துவிட வேண்டும். அதிலிருந்து குரு எவ்வளவு தருகிறாரோ, அதையே உணவாக உண்டு நிறைவடைய வேண்டும். பிரம்மசாரி ஒரு வேளையே உணவருந்த வேண்டுமென்ற நியமம் உண்டு. பிற்பகலிலும் நீராடி சந்தியாவந்தனம் செய்த பிறகே பிரம்மசாரி உணவருந்த வேண்டும். உண்ட பிறகு, குருதேவர் ஓய்வெடுக்கும்போது பிரம்மசாரிகள் அவருக்குப் பணிவிடை செய்வது வழக்கம். அச்சமயம் குருதேவர் அவர்களுக்கு உபதேசம் செய்வார். பகலில் நான்காவது யாமத்தில் பிரம்மசாரி காட்டிற்குச் சென்று ஹோமத்திற்காக உலர்ந்த விறகும், பழங்களும் கொண்டு வரவேண்டும். மாலையில் மறுபடியும் நீராடி, சந்தியும், ஹோமமும் செய்ய வேண்டும். நள்ளிரவு வரை குருதேவருக்கு அருகிலமர்ந்து அவருக்குச் சேவை செய்து கொண்டு அவரது உபதேசத்தைக் கேட்பது வழக்கம். இரவு மூன்றாம் யாமம் மட்டுமே பிரம்மசாரி தூங்குவது வழக்கம்.

பிரம்மசாரிகளுக்குக் காலணி அணிவது, எண்ணெய் தடவிக் கொள்வது, தலைவாரிக் கொள்வது ஆகியவை மறுக்கப்பட்டவையாகும். அவர்கள் பூமியின்மீது தர்ப்பைப் புல்லை விரித்து அதன் மீதுதான் தூங்கலாம். ஸ்ரீக்ருஷ்ணனும், பலராமனும் பிரம்மசாரிகளுக்குரிய இத்தகைய கடுமையான நியமங்களனைத்தையும் முழுமையாகக் கடைப்பிடித்தனர். குருதேவரும் உடன் பயின்ற மாணவர்களும் அவர்களை மிகவும் நேசித்தனர். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனுடன் 'ஸுதாமா' என்னும் பெயருடைய அந்தணச் சிறுவர் ஒருவர் படித்து வந்தார். ஒரு நாள் ஸ்ரீக்ருஷ்ணனும், ஸுதாமாவும்

Koviloor Digital Library

தங்கள் குருதேவருடைய மனைவியின் கட்டளைப் படி காய்ந்த விறகுகள் கொண்டுவர, காட்டிற்குச் சென்றனர். மாலை புயல் வீசியது, பலத்த மழை பெய்யத் தொடங்கிவிட்டது. இருளாகியபின் இருவரும் பாதையை மறந்துவிட்டனர். ஒரு மரத்தின் கீழே இரவு முழுவதும் உட்கார்ந்திருந்த னர். பொழுது விடிந்ததும் குருதேவர் அவர்களைத் தேடிக் கொண்டு காட்டிற்கு வந்தார். தனது சிஷ்யர்களின் குரு பக்தியினால் மகிழ்ச்சியடைந்த குருதேவர் "அவர்களது கல்வி பரலோகம் சென்றாலும் மறக்காது" என்று ஆசீர்வதித்தார்.

ஸ்ரீக்ருஷ்ணனும், பலராமனும் ஞான வடிவமானவர்கள் . [அவர்கள் கற்று அறிய வேண்டியது ஏதுமில்லை.] உலகிலுள்ள மக்களுக்குப் பாடம் கற்பிப்பதற்காகவே அவர்கள் குருசேவை செய்யச் சென்றனர். அறுபத்து நான்கு நாட்களிலேயே சகோதரரிருவரும் எல்லா வேதங்கள், உபநிஷதங்கள், உபவேதங்கள், வேதாங்கம், சாஸ்த்ரங்கள், புராணங்கள் ஆகிய எல்லா வித்தைகளையும், அறுபத்து நான்கு கலைகளையும் கற்றுக் கொண்டுவிட்டனர். பிறகு அவர்கள் குருதேவரிடம் குருதக்ஷிணை பெற்றுக் கொள்ளும்படி வேண்டினார்கள். ஸ்ரீக்ருஷ்ணனும், பலராமனும் சாட்சாத் பரமாத்மா என்பதை சாந்தீபனி முனிவர் அறிந்து கொண்டுவிட்டார். வெகுநாட்களுக்கு முன்பு சாந்தீபனி முனிவர் தனது மனைவியுடன் ப்ரபாஸக்ஷேத்ரத்திற்குச் சென்றபோது, அவருடைய மகன் நீராடும்போது கடலில் மூழ்கிவிட்டான். முனிவர் தன்னுடைய அந்த மகனையே குருதக்ஷிணையாகக் கேட்டார்.

Koviloor Digital Library

ஸ்ரீக்ருஷ்ணனும், பலராமனும் தேரிலமர்ந்து ப்ரபாஸக்ஷேத்ரத்திற்குச் சென்றனர். அவரைக் கண்டதுமே சமுத்திரராஜன் ரத்தினங்களைப் பரிசாக எடுத்துக் கொண்டு அந்தண வடிவில் அவரை வரவேற்பதற்காக வந்தான். சமுத்திரராஜா கூறியபடி ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் கடல் நீரில் வாழ்ந்த 'பஞ்சஜனன்' என்னும் பெயருடைய சங்கு வடிவிலிருந்த அரக்கனைக் கொன்றார். அவனது உடலிலிருந்த 'பாஞ்சஜன்யம்' என்ற சங்கை எடுத்துக் கொண்டார். அந்த அஸுரனின் வயிற்றிலும் குருவின் புதல்வன் கிடைக்காததால் ஸ்ரீக்ருஷ்ண-பலராமர்கள் யமலோகத்திற்குச் சென்றனர். யமராஜனிடமிருந்து குருதேவரின் புதல்வனை அழைத்து வந்தனர். சாந்தீபனி முனிவரிடம் அவரது மகனை அளித்துவிட்டு, அவரது அனுமதியோடு சகோதரர்கள் இருவரும் மதுராவிற்குத் திரும்பி வந்தனர்.

****

மதுராவிலிருந்து த்வாரகா

மகத நாட்டு மன்னன் ஜராஸந்தனின் புதல்விகளை கம்ஸன் திருமணம் செய்திருந்தான். அச்சமயம் ஜராஸந்தன் மிகுந்த பலசாலியாகவும், பிரபலமாகவும் இருந்தான். ஸ்ரீக்ருஷ்ணன், தனது மருமகனைக் கொன்றுவிட்டார் என்பதைக் கேட்டதும் அவன் இருபத்துமூன்று அக்ஷௌஹிணி சேனையைக் கொண்டு மதுராவை முற்றுகை யிட்டான்; நான்குபுறமும் நகரை வளைத்துக் கொண்டான். தனது நகரத்தைப் பகைவனின் சேனை சூழ்ந்து கொண்டதைக் கண்ட ஸ்ரீக்ருஷ்ண-பலராமர் தேரில் அமர்ந்து கொண்டு சிறிதளவு

Koviloor Digital Library

படையுடன் வெளியே வந்தனர். மிகவும் பயங்கரப் போர் நடைபெற்றது. ஸ்ரீக்ருஷ்ணனின் படைவீரன் ஒருவன்கூட காயமடையவில்லை. ஆனால் ஜராஸந்தனின் சேனை முழுவதையும் ஸ்ரீக்ருஷ்ண-பலராமர் கொன்றுவிட்டனர். பலராமன் ஜராஸந்தனைப் பிடித்துக் கட்டிவிட்டார். ஆனால் பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் ஜராஸந்தனை விடுவித்தார். அவன் தன்னுடைய நாட்டிற்கு திரும்பிவிட்டான். மகதம் சென்ற ஜராஸந்தன் மறுபடியும் படை திரட்டினான். மறுபடி மதுராவின் மீது படையெடுத்து வந்தான். ஜராஸந்தன் இவ்விதம் பதினேழு முறை, ஒவ்வொரு முறையும் இருபத்துமூன்று அக்ஷௌஹிணி படையுடன் மதுராவின் மீது போர் தொடுத்தான். ஒவ்வொரு முறையும் ஸ்ரீக்ருஷ்ண-பலராமர் அவனது படையை அழித்து அவனை விட்டுவிட்டனர்.

ஜராஸந்தன் பதினெட்டாவது முறை மதுராவின் மீது போர் தொடுக்க இருந்த அதே சமயம் 'காலயவனன்' என்பவனும் மூன்று கோடி மிலேச்சப் படையுடன் மதுராவைச் சூழ்ந்து கொண்டான். காலயவனன் பெரிய வீரன். அவனைத் தோற்கச் செய்யும் வீரன் உலகிலேயே கிடையாது. தேவரிஷி நாரதர் அவனிடம் 'ஸ்ரீக்ருஷ்ணனே உன்னோடு போர் புரியமுடியும்' என்று கூறியிருந்தார். பகவான் ஸ்ரீக்ருஷ்ணன், 'நாம் காலயவனனோடு போர் புரிந்து கொண்டிருக்கும்போதே ஜராஸந்தன் வந்து விடுவானாகில் அவன் மதுரா மக்களுக்குத் தொல்லை தருவான்' என்று நினைத்தார். ஆகவே பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் விஸ்வகர்மாவை அழைத்து கடலின் நடுவே ஒரு நகரத்தை அமைக்குமாறு ஆணையிட்டார். தேவர்களின் கட்டிடக்

Koviloor Digital Library

கலைஞரான விஸ்வகர்மா கடற்தீவில் இரவோடி ரவாக ஓர் அழகிய நகரத்தை நிர்மாணித்து விட்டார். அந்த நகரத்தின் பெயரே த்வாரகா வாகும். அந்த நகரத்தில் மதுராவின் மக்கள் அனைவருக்கும் சிறந்த மாளிகைகள், தோட்டங் கள், தெருக்கள் முதலியன அமைந்திருந்தன. இரவில் தூங்கிக் கொண்டிருந்த மதுராவாசிகளை, பகவான் தன்னுடைய மாயையினால் அவர் களுடைய வீட்டுப்பொருட்கள், கால்நடைகள் ஆகியவற்றோடு த்வாரகாவில் சேர்த்துவிட்டார்.

மதுராவின் மக்கள் அனைவரும் த்வாரகா போய்ச் சேர்ந்தபின் காலையில் பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் தனியாகக் கால்நடையாகவே நகரத் திலிருந்து கிளம்பினார். ஸ்ரீக்ருஷ்ணன் ஆயுதங்கள் இல்லாமல் கால்நடையாகச் செல்வதைக் கண்ட காலயவனன் தானும் ஆயுதத்தை வைத்துவிட்டு தேரிலிருந்து இறங்கிவிட்டான். ஏனென்றால் ஆயுதமில்லாத மனிதனோடு ஆயுதம் ஏந்திப் போர் புரிவது நியாயமல்ல. ஆனால் ஸ்ரீக்ருஷ்ண சந்த்ரனோ ஒரு விளையாட்டுப்பிள்ளை. அவர் காலயவனனைப் பார்த்து பயந்ததுபோல ஓடினார். காலயவனனும் அவர் பின்னால் ஓடினான். வெகு தூரம் சென்ற ஸ்ரீக்ருஷ்ணன் மலையின் ஒரு குகையினுள் நுழைந்துவிட்டார். காலயவனனும் அந்த குகையினுள் நுழைந்தபோது யாரோ பீதாம்பரம் போர்த்தியபடி தூங்குவதை அவன் கண்டான். இந்த ஸ்ரீக்ருஷ்ணன்தான் இங்கு வந்து என்னை ஏமாற்றுவதற்காகத் தூங்குவதுபோல பாசாங்கு செய்து படுத்திருக்கிறார் என்று அவன் நினைத்தான். காலயவனன் காலால் எட்டி உதைத்து தூங்கும் அந்த மனிதனை எழுப்பினான். அந்த மனிதன் எழுந்தான். கோபத்தோடு அவன்

Koviloor Digital Library

காலயவனனைப் பார்த்தான். அவன் பார்த்ததுமே காலயவனின் உடலிலிருந்து தீக்கொழுந்துகள் கிளம்பின. அவன் எரிந்து சாம்பலாகிவிட்டான். குகையில் தூங்கிக் கொண்டிருந்தவர் ராஜா 'முசுகுந்தன்' என்பவர். அவர் ஸத்யயுகத்தில் தேவர்களின் பக்கத்திலிருந்து அஸுரர்களுடன் வெகுகாலம் போர் செய்து கொண்டேயிருந்தார். அஸுரர்கள் தோல்வியடைந்ததும், பல காலம் போரினால் களைத்திருந்த அரசர் முசுகுந்தன் தேவர்களிடம் "நான் நிம்மதியாக - சந்தோஷமாகத் தூங்க வேண்டும், என்னுடைய தூக்கத்தில் தடையிடுபவன் எரிந்து சாம்பலாகிவிட வேண்டும்" என்ற வரத்தையே கேட்டார். காலயவனன் அவருடைய தூக்கத்தைக் கலைத்தான். அதனால் அவன் எரிந்துவிட்டான். அவன் எரிந்தபின் பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் ராஜா முசுகுந்தனுக்கு தரிசனம் அளித்தார். மன்னன் ஸ்ரீக்ருஷ்ண சந்த்ரனைத் துதித்தார். அவரது அனுமதியைப் பெற்று அவர் இமயமலைக்குத் தவம் செய்யச் சென்றுவிட்டார்.

ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் அங்கிருந்து திரும்பி மதுராவிற்கு வந்தார். அவர் காலயவனனுடைய சேனை முழுவதையும் அழித்துவிட்டார்; பலராமனுடன் த்வாரகாவிற்குப் புறப்பட்டார். அதே சமயம் ஜராஸந்தனும் பெரிய படையை சேர்த்துக் கொண்டு வந்தான். இம்முறை ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் பலராமனையும் உடனழைத்துக் கொண்டு ஜராஸந்தனுக்கு முன்னாலிருந்து ஓடிவிட்டார். ஜராஸந்தன் படையுடன் அவரைப் பின் தொடர்ந்தான். வெகுதூரம் ஓடிய பின்பு ஸ்ரீக்ருஷ்ண-பலராமர் ஒரு உயரமான மலையின்மீது ஏறிவிட்டார்கள். சகோதரர்களிருவரும் மலைமீது

Koviloor Digital Library

எங்கே சென்றார்கள் என்ற விவரம் தெரியவில்லையென்பதால் ஜராஸந்தன் மலையின் நான்குபுறத்திலும் குவியலாக விறகுகளை அடுக்கி தீ வைத்துவிட்டான். அவர்களிருவரும் நெருப்பில் எரிந்துவிடுவார்கள் என்று தீர்மானித்துப் படையுடன் மகத நாட்டுக்குத் திரும்பிச் சென்றான். ஆனால் ஸ்ரீக்ருஷ்ணனும், பலராமனும் அந்த மலையின் உச்சியிலிருந்து கீழே குதித்துவிட்டனர். ஜராஸந்தனால் அவர்களைப் பார்க்க இயலவில்லை. தாருகன் முதலிலேயே தேரைக் கொண்டு வந்து தயாராக இருந்தான். சகோதரர் கள் இருவரும் தேரில் அமர்ந்து த்வாரகாபுரிக்கு வந்துவிட்டனர். அதனாலேயே ஸ்ரீக்ருஷ்ணனுக்கு 'ரண்சோட்' என்ற பெயர் உண்டாயிற்று.

****

திருக்கல்யாணம்

ஸ்ரீபலராமருக்கு ரைவத ராஜாவின் மகள் ஸ்ரீரேவதியுடன் திருமணம் நடைபெற்றது. விதர்ப நாட்டு மன்னன் பீஷ்மகன் தன் மகள் ருக்மிணியை ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனுக்குத் திருமணம் செய்து கொடுக்க விரும்பினார். ஆனால் அவரது மூத்த மகன் 'ருக்மி' தனது தங்கையை சிசுபாலனுக்குத் திருமணம் செய்விக்க விரும்பினான். ருக்மியின் பிடிவாதம் காரணமாக மன்னர் பீஷ்மகரும் சிசுபாலனுக்குத் தன் மகளைத் திருமணம் செய்ய விரும்புவதாக செய்தி அனுப்பினார். ருக்மிணிதேவி முதலிலிருந்தே ஸ்ரீக்ருஷ்ணனை நேசித்து வந்தாள். சிசுபாலனோடு தனக்குத் திருமணம் செய்விப்பதற் கான ஏற்பாடுகள் நடைபெறுவதைக் கண்ட ருக்மிணி எல்லா ரகசியச் செய்தியையும் ஓர்

Koviloor Digital Library

அந்தணர் மூலம் த்வாரகாவில் உள்ள ஸ்ரீக்ருஷ்ணனிடம் அனுப்பினாள். ருக்மிணிதேவியின் செய்தி பெற்ற ஸ்ரீக்ருஷ்ணன் விதர்ப நாட்டிற்கு புறப்பட்டுவிட்டார். அவருக்குப் பின்னாலேயே பலராமரும் படையோடு விதர்பத்திற்கு வந்து சேர்ந்தார்.

விதர்ப நாட்டில் சிசுபாலனின் திருமண விழாவில் கலந்து கொள்ள அவனது நண்பர்களான ஜராஸந்தன், சால்வன் ஆகியோரும் வந்திருந்தனர். திருமணத்திற்கு ஒரு நாள் முன்பாக ருக்மிணிதேவி அரண்மனையிலிருந்து வெளியே பகவதி பார்வதி தேவிக்கு பூஜை செய்யச் சென்றார். அவர் பூஜையை முடித்துவிட்டுத் திரும்பும்பொழுது ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் தனது தேரை அங்கு கொண்டு சென்றார். ருக்மிணிதேவியைத் தேரில் ஏற்றி உட்கார வைத்துக் கொண்டார். த்வாரகாவிற்குப் புறப்பட்டுவிட்டார். சிசுபாலன், ஜராஸந்தன், அவனது ஆதரவாளர்களான சால்வன் ஆகியோர் படையுடன் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனைத் தடுக்கப் போனபோது பலராமருடனும், யாதவப் படையுடனும் போர்புரிய வேண்டியிருந்தது. கடைசியில் அவர்களனைவரும் தோற்றுத் தத்தம் நாட்டிற்குத் திரும்பிச் சென்றனர். பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் ருக்மிணியுடன் த்வாரகாவிற்கு வந்தார். அங்கு அவருக்கும், ருக்மிணிதேவிக்கும் முறைப்படி திருமணம் நடைபெற்றது. ஸ்ரீருக்மிணிதேவியைத் தவிர ஸத்யபாமா, ஜாம்பவதி, ஸத்யா, பத்ரா, மித்ரவிந்தா, காலிந்தி மற்றும் லக்ஷ்மணா என்னும் இந்த ஏழு பட்டத்து அரசிகளை ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் மணந்து கொண்டார்.

பூமிதேவியின் ஒரு மகன் 'நரகாஸுரன்'. பூமியின் புதல்வனாதலால் அவனை

Koviloor Digital Library

பௌமாஸுரன் என்றும் கூறுவார்கள். அவன் மிகவும் தீய அரக்கன். அவன் ஏராளமான மன்னர்களைத் தோற்கடித்து அவர்களுடைய பெண்களைக் கவர்ந்து சென்று, தனது நாட்டில் அவர்களைச் சிறை வைத்திருந்தான். இப்படி ஒரு லக்ஷம் பெண்கள் சேர்ந்ததும் அவர்களை ஒன்றாகத் திருமணம் செய்து கொள்ள விரும்பினான். தேவர்களின் தாயான அதிதியின் குண்டலங்களையும், வருணனின் குடையையும்கூட அவன் பிடுங்கிக் கொண்டான். தேவராஜன் இந்த்ரன், பகவான் ஸ்ரீக்ருஷ்ணனிடம் அக்கொடிய அஸுரனை மாய்க்கும்படி வேண்டிக் கொண்டார். ஏனென்றால் அந்த நரகாஸுரனின் தலைநகரம் மிகவும் பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருந்தது; அவனும் யாராலும் வெல்ல முடியாத பலசாலியாக இருந்ததால் அவனிடம் போர் புரிவது தேவர்களுக்கும்கூடக் கடினமானதாக இருந்தது. அந்நகரம் மலைகளுக்கு நடுவில் இருந்தது. அதில் தானாகவே செயல்படவல்ல ஆயுத வளையங்கள் இருந்தன. சுவற்றைப்போல சுற்றிவரக் கூடிய அக்னி வளையங்களும், அதே போன்ற நீர் வளையங்களுமிருந்தன. முர-பாசமெனும் பெயருள்ள இரும்பு முள்ளாலான பயங்கர வளையமுமிருந்தது. இந்த வளையங்களுக்கு அப்பால் நீர் நிரம்பிய மிகப்பெரிய அகழி இருந்தது. தேவர்களின் வேண்டுதலின்படி பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் ஸத்யபாமாவுடன் கருடன் மீதேறி நரகாஸுரனின் தலைநகருக்கு வந்தார். அவர் கதையினால் மலைகளை உடைத்து வழி அமைத்துக் கொண்டார். தனது ஸுதர்சன சக்கரத்தின் மூலம், ஆயுத வளையங்களையும், அக்னிப் படைகளையும், நீர்ச்சுழல்களையும், முர-பாசத்தையும்

Koviloor Digital Library

அழித்தார். நரகாஸுரனையும் அவனது படைவீரர்களையும் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் போரில் கொன்றார். அவனது சிறையிலிருந்து அரசகுமாரிகளை விடுவித்தார். அவர்கள் பதினாறாயிரத்து நூறு பெண்களாவர். அந்த நாட்களில் ஓர் அஸுரனின் சிறையில் இருந்த பெண்களை அவர்களது தாய்-தந்தையர் தங்களிடம் மீண்டும் சேர்ப்பதுமில்லை; அவர்களை யாரும் திருமணம் செய்யவும் முன் வருவதில்லை. பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் அருள் வடிவினன். அவர் அனாதைகளின் நாதன். அவர் கருணைகூர்ந்து அந்தப் புனிதமான அரசகுமாரிகளைத் தன்னுடைய அரசியராக்கிக் கொண்டார்.

நரகாஸுரனைக் கொன்றபின் பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் ஸத்யபாமாவுடன் தேவமாதா அதிதியின் குண்டலங்களை அளிக்க ஸ்வர்கம் சென்றார். ஸத்யபாமா கூறியதால் ஸ்வர்கத்திலிருந்து திரும்பும் போது ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் பாரிஜாத மரத்தைப் பெயர்த்து கருடனின் முதுகின் மீது வைத்துக் கொண்டார். பாரிஜாதம் ஸ்வர்கத்துத் தோட்டத்தின் மிகச் சிறந்த மரம். அதன் மலர்கள் இந்த்ராணிக்கு மிகவும் விருப்பமானவையாயிருந்தன. ஆகவே இந்த்ரன் தேவர்களுடன் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனிடம் போரிட வந்தார். ஆனால் சிறிது நேரத்திலேயே ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் அவர்களைத் தோற்கடித்தார். த்வாரகா திரும்பியதும் ஸ்ரீக்ருஷ்ணன் பாரிஜாத மரத்தை ஸத்யபாமாவின் வீட்டு முற்றத்தில் வைத்துவிட்டார்.

****

Koviloor Digital Library

ஸ்ரீக்ருஷ்ண-பலராமரின் பராக்கிரமம்

ப்ரஹலாதனுடைய கொள்ளுப்பேரனும், அஸுர மன்னன் பலியினுடைய மகனுமான 'பாணாஸுரன்' மிகுந்த வலிமையுள்ளவன். அவனுக்கு ஆயிரம் கைகள் உண்டு. அவன் சிவபிரானைத் தனது பூஜையால் மகிழ்வித்தவன். சிவபிரானே அவனுடைய தலைநகரைப் பாதுகாத்து வந்தார். பாணாஸுரனின் மகளான உஷா, ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனின் பேரனான அநிருத்தனைக் கனவில் கண்டாள். அவள் மனதிற்குள் அவரையே தனது கணவனாக வரித்துக் கொண்டுவிட்டாள். உஷா கூறியதால் அவளுடைய தோழி ஒருத்தி தன்னுடைய யோகக்கலையின் ஆற்றலால் இரவு தூங்கிக் கொண்டிருந்த அநிருத்தனை த்வாரகாவிலிருந்து தூக்கிக் கொண்டு வந்துவிட்டாள். தனது மகளின் அந்தப்புரத்தில் அநிருத்தன் இருக்கிறான் என்ற விவரத்தை அறிந்த பாணாஸுரன், அவரைப் பிடித்துச் சிறைச்சாலையில் அடைத்துவிட்டான். தேவரிஷி நாரதரின் மூலம் அநிருத்தன் சிறைப்பட்ட செய்தியை அறிந்த ஸ்ரீக்ருஷ்ண-பலராமர் யாதவப் படையுடன் வந்தனர். பாணாஸுரனுக்கும், ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனுக்கும் போர் நடைபெறத் தொடங்கியது. சிவபிரானும் தன் பக்தன் பாணாஸுரனின் பக்கம் போர்புரியத் தன்னுடைய பூத-ப்ரேதங்களுடன் வந்துவிட்டார். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் பூத-ப்ரேதங்களை பாணங்களால் அடித்து விரட்டிவிட்டார். பின்பு அவர் விட்ட ஒரு அம்பின் சக்தியினால் சிவபிரானுக்குத் தூக்கம் வந்துவிட்டது. விழித்ததும் சிவபிரான் தன் பக்தன் பாணாஸுரனின் உயிரைப் பறிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க

Koviloor Digital Library

ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் பாணாஸுரனின் ஆயிரம் கைகளில் நான்கு மட்டுமே மீதி இருக்கும்படி செய்தார். பாணாஸுரன், ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனிடம் தன்னுடைய குற்றத்திற்காக மன்னிப்புக் கேட்டதுடன் தன் மகள் உஷாவை அநிருத்தனுக்குத் திருமணம் செய்தும் கொடுத்தான்.

ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனின் மகன் 'ஸாம்பன்' துர்யோதனனுடைய மகள் லக்ஷ்மணாவை அவளது சுயம்வரத்தின்போது தூக்கி வந்து தன்னுடைய தேரில் அமர்த்திக் கொண்டார். அக்காலத்தில் பலசாலியான அரசகுமாரன் இவ்விதம் ஒரு அரசகுமாரியைத் திருமணம் செய்து கொள்வது தவறாகக் கருதப்பட்டதில்லை. ஆனால் துர்யோதனன், கர்ணன் ஆகியோருக்கு ஸாம்பன் செய்த இந்தச் செயல் பிடிக்கவில்லை. அவர்கள் எல்லோரும் சேர்ந்து தனியாக இருந்த ஸாம்பனைத் தோற்கடித்துப் பிடித்துவிட்டனர். இந்தச் செய்தி த்வாரகாவையடைந்தபோது, ஸ்ரீபலராமர், துர்யோதனனுக்கு அறிவுரை கூற ஹஸ்தினாபுரத்திற்கு வந்தார். துஷ்டனான துர்யோதனன் பலராமரின் பேச்சைக் கேட்காதது மட்டுமின்றி அவரிடம் கடுமையான வார்த்தைகளைக் கூறினான். அதனால் பலராமருக்குக் கோபம் வந்துவிட்டது. அவர் தன்னுடைய ஆயுதமான கலப்பையின் நுனியால் ஹஸ்தினாபுர நகரம் முழுவதையும் இழுத்து யமுனையில் தள்ள முயன்றார். நகர மாளிகைகள் ஆடவும், விழவும் தொடங்கவே, பயம் காரணமாக துர்யோதனன், கர்ணன் ஆகியோர் பலராமரைச் சரணடைந்து மன்னிப்புக் கேட்டனர். துர்யோதனன், தன்னுடைய மகளை ஸாம்பனுக்கே விவாஹம் செய்து வைத்தான்.

Koviloor Digital Library

ஒரு முறை பலராமர் நந்தபாபா, அன்னை யசோதா மற்றும் தனது அன்பான கோபர்கள் ஆகியோரைச் சந்திப்பதற்காக வ்ரஜத்திற்குச் சென்றிருந்தார். அங்கு ஒரு நாள் ப்ருந்தாவனத்தைச் சுற்றியபோது நீராடுவதற்காக அவர் யமுனையை அழைத்தார். அழைத்ததும் யமுனை வராததால் சர்வ சக்திமானான பலராமர் தனது கலப்பையினால் யமுனையின் பிரவாஹத்தையே தன்னிடம் இழுத்துவிட்டார்.

காசிக்கு அருகே ஒரு சிறிய அரசு இருந்தது. அதனுடைய அரசனின் பெயர் 'பௌண்ட்ரகன்' என்பதாகும். அவன் காசி மன்னனோடு தோழமையுடையவன். அவன் தன் இரு கைகளைத் தவிர மேலும் மரத்தாலான கைகளையும் இணைத்துக் கொண்டு 'தானே வாஸுதேவன்' என்று கூறி வந்தான். பலராமர் த்வாரகாவிலிருந்து வ்ரஜத்திற்குச் சென்றிருந்த போது, அவன் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனிடம் தூதன் மூலம் "நான்தான் பகவானின் அவதாரம். ஆகையினால் நீ, உன்னை வாஸுதேவன் என்று கூறிக் கொள்ளாதே. அல்லது என்னோடு போருக்கு வா" என்று கூறி அனுப்பினான். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் தேரில் அமர்ந்து தனியாகவே சென்றார். போரில் அவர் பௌண்ட்ரகனையும், அவனது நண்பன் காசிராஜனையும் படைகளோடு கொன்றுவிட்டார். காசி மன்னனின் தலை ஸ்ரீக்ருஷ்ணனின் பாணத்தால் அறுபட்டுக் காசியில் சென்று விழுந்தது. அந்தத் தலையைக் கண்ட காசி ராஜகுமாரன் 'ஸுதக்ஷிணனு'க்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று. அவன் ஸ்ரீக்ருஷ்ணனைப் பழி வாங்குவதற்காக ஒரு யாகம் செய்து 'க்ருத்யை' எனும் அரக்கியைத் தோற்றுவித்தான். அந்த

Koviloor Digital Library

க்ருத்யா தீயின் உருவெடுத்து த்வாரகையை எரிக்கப் புறப்பட்டுப் போய் சேர்ந்தது. ஆனால் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனின் சக்கரம் அதை அடித்து விரட்டவே அது பயந்து ஓடி காசிக்குத் திரும்பியது. அது காசி ராஜகுமாரன் ஸுதக்ஷிணனையே கொன்றுவிட்டது.

த்ரேதாயுகத்தில் பகவான் ஸ்ரீராமரின் வானரப் படையில் 'த்விவிதன்' என்னும் பெயருடைய ஒரு வானரம் இருந்தது. ஆனால் பின்னால் ராக்ஷஸர்களின் உறவினால், அது ராக்ஷஸ ஸ்வபாவத்தையடைந்தது. யார் எத்தகைய மக்களின் சேர்க்கையில் வசிக்கிறார்களோ அப்படியே ஆகிவிடுகிறார்கள். த்விவித வானரம் ராக்ஷஸர்களுடன் இருந்ததால் துஷ்டனாகிவிட்டது. மக்களுக்குத் துயரம் தரத் தொடங்கியது. அது தோட்டங்களைப் பாழாக்குவதும், கிராமங்களுக்குத் தீயிடுவதும், கடல் நீரைப் பொழிந்து கரையிலுள்ள கிராமங்களை அடித்துச் செல்லவிடுவதுமாக இருந்தது. வ்ரஜத்திலிருந்து திரும்பிய ஸ்ரீபலராமர் த்வாரகாவில் 'ரைவதகம்' என்னும் மலையில் ஒரு நாள் நீராடிக் கொண்டிருந்தார். அந்த துஷ்ட வானரம் அங்கு வந்தது. அது பலராமர் கரையில் வைத்திருந்த ஆடைகளைக் கிழித்துவிட்டது. பலராமர் முதலில் கல்லெறிந்து அதை பயமுறுத்த விரும்பினார். ஆனால் துஷ்ட த்விவிதன் ஒரு மரத்தையே பறித்து பலராமரைக் கொல்லப் பாய்ந்தது. அதனால் த்விவிதனுக்கும், பலராமருக்கும் போர் மூண்டது. எல்லோருக்கும் துன்பம் விளைவித்த அந்த துஷ்ட த்விவிதனை பலராமர் கொன்றொழித்தார்.

ஒரு முறை தேவரிஷி நாரதர் த்வாரகாவிற்கு வந்தார். அவர் தர்மராஜர் யுதிஷ்டிரர்

Koviloor Digital Library

ராஜஸூய யாகம் செய்ய விரும்புவதாகத் தெரிவித்தார். பூமியிலுள்ள எல்லா மன்னர்களையும் வென்று யார் ராஜஸூய யாகம் செய்கிறார்களோ, அவரே சக்ரவர்த்தி என்று அழைக்கப் படுகிறார். பாண்டவர்கள், பகவானான ஸ்ரீக்ருஷ்ணனின் சிறந்த பக்தர்கள், பாண்டவர்களின் தாய் குந்திதேவி ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனின் அத்தை ஆவார். ஆகையினால் யுதிஷ்டிரருடைய யாகச் செய்தி கிடைத்ததும் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் தனது அரசியர்களுடனும், புதல்வர்களுடனும், மிகப்பெரிய சேனையுடனும் பாண்டவர்களின் தலைநகரமான இந்த்ரப்ரஸ்தம் சென்றார். யுதிஷ்டிரர் மிகுந்த மரியாதையோடு ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனை வரவேற்றார்.

ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனின் கட்டளைப்படி அர்ஜுனனும், பீமனும், நகுலனும், ஸஹதேவனும் நான்கு திசைகளுக்கும் சென்றனர். அவர்கள் எல்லா மன்னர்களையும் வென்றனஃர். ஆனால் மகத மன்னன் ஜராஸந்தன் வெல்லப்படவில்லை. ஜராஸந்தன் வலிமை மிக்கவன். அவன் பல மன்னர்களை வென்று தன் நகரில் சிறைப்படுத்தியிருந்தான். அவர்களைக் கொன்றுவிட விரும்பினான். அந்த கதியில்லாத மன்னர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்காக ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன், பீமஸேனனுடனும், அர்ஜுனனுடனும் மகதத்திற்குச் சென்றார். அங்கு பீமஸேனன் ஜராஸந்தனைத் தனியாக கதா யுத்தம் புரிய வலுவில் அழைத்தார். ஜராஸந்தனும், பீமஸேனனும் போரிட்டனர். கடைசியில் பீமஸேனன் ஜராஸந்தனை பூமியிலறைந்து, அவனது இரண்டு கால்களைப் பற்றி உடலைப் பாதியாகக் கிழித்து எறிந்தார். ஜராஸந்தன் இறந்த பிறகு அவனுடைய மகன்

Koviloor Digital Library

ஸஹதேவனை, ஸ்ரீக்ருஷ்ணன் மகத மன்னனாக்கினார். ஜராஸந்தனின் சிறையிலிருந்த மன்னர்களை விடுவித்தார். அவர் அங்கிருந்து பீமார்ஜுனர்களுடன் இந்த்ரப்ரஸ்தத்திற்குத் திரும்பி வந்தார்.

தர்மராஜர் யுதிஷ்டிரரின் ராஜஸூய யாகம் தொடங்கியபோது அதில் மன்னர்களனைவருக்கும் தனித்தனியான பணி ஒதுக்கப்பட்டது. யார் மிகப் பெரியவர்களோ - மகானோ - அவர் மிகச்சிறிய பணியையும் சேவையாகச் செய்யத் தயங்குவதில்லை. பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் அந்த யாகத்திற்கு வந்த விருந்தினரின் கால்களைக் கழுவும் பணியை ஏற்றுக் கொண்டார். யாகத்திற்கு வந்தவர்களை பூஜை-மரியாதை செய்வது வழக்கம். யார் எல்லோரிலும் உயர்ந்தவரோ அவருக்கு முதன்முதலில் பூஜை செய்ய வேண்டும். அந்த யாகத்திற்கு மிக உயர்ந்த தேவர்களும், முனிவர்களும், மன்னர்களும் வந்திருந்தனர். எல்லோரிலும் பெரியவர் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன்தான் என்று ஸஹதேவன் கூறிய பேச்சை அனைவரும் ஒப்புக் கொண்டனர். யுதிஷ்டிரர் எல்லோருக்கும் முன்பு ஸ்ரீக்ருஷ்ணனுக்கு பூஜை செய்தார். அங்கு சிசுபாலனும் இருந்தான். சிசுபாலன் பிறந்ததிலிருந்தே ஸ்ரீக்ருஷ்ணனிடம் பகைமை பாராட்டி வந்தான். ஸ்ரீக்ருஷ்ணனுக்கு அளிக்கப்பட்ட முதல் மரியாதையை அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவன் எழுந்து எல்லோரின் முன்னிலையிலும் வசை பாடத் தொடங்கினான். முதலில் ஸ்ரீக்ருஷ்ணன் அவனது வசைகளைப் பொறுத்துக் கொண்டேயிருந்தார். ஆனால் மேலும் அதிகமாக உளறிக் கொண்டே வாளை உருவிக் கொண்டு கொல்வதற்காக மேலே பாயவே

Koviloor Digital Library

ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் தன்னுடைய சக்கரத்தால் அவனது தலையை வெட்டித் தள்ளினார்.

சால்வன், சிசுபாலனின் தோழர்களில் ஒருவன். அவன் தவம்புரிந்து சிவனை மகிழ்வித்தவன். சிவபிரான் கூறியபடி மயனென்னும் தானவன் அவனுக்கு ஆகாயத்திலும், நீரிலும், பூமியிலும் செல்லத்தக்கதான ஒரு விமானத்தைச் செய்து கொடுத்தான். சிசுபாலன் கொல்லப்பட்ட பிறகு சால்வன் பெரும்படையுடன் அந்த விமானத்தில் ஏறி த்வாரகாவின் மீது படையெடுத்தான். அச் சமயம் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் இந்த்ரப்ரஸ்தத்திலிருந்து திரும்பவில்லை. ஸ்ரீக்ருஷ்ணனின் மூத்த புதல்வன் 'ப்ரத்யும்னனு'டன் சால்வன் போரிட்டான். போர் நடந்து கொண்டிருக்கும்போதே ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனும் இந்த்ரப்ரஸ்தத்திலிருந்து வந்துவிட்டார். பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் தன்னுடைய கதையினால் சால்வனுடைய விமானத்தைத் தூள்தூளாக்கி விட்டார். சக்கரத்தால் சால்வனுடைய தலையை அறுத்துவிட்டார்.

சால்வனுடைய நண்பன் 'தந்தவக்த்ரன்' மலை போன்ற பெரும் உடலும், மிகுந்த பலமும் பொருந்தியவன். சால்வன் இறந்ததுமே அவனும் கதையை எடுத்துக் கொண்டு ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனிடம் போர்புரிய வந்தான். வந்ததுமே தந்தவக்த்ரன் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனின் மார்பில் கதையால் அடித்தான். அவனது கதை தாக்கியும்கூட ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் சிறிதும் அசையவில்லை. ஆனால் ஸ்ரீக்ருஷ்ணன் தந்தவக்த்ரனின் மார்பில் கதையால் அடித்ததும் அவனது மார்பு பிளந்து விட்டது. அவன் வாயில் குருதி கொப்பளிக்க விழுந்து இறந்துவிட்டான். தந்தவக்த்ரனின் சகோதரன் 'விதூரதன்' போர்புரிய வந்தான்.

Koviloor Digital Library

அவனும் ஸ்ரீக்ருஷ்ணனால் கொல்லப்பட்டான். இவ்விதம் உலகிலுள்ள தர்மாத்மாக்களுக்குத் துன்பம் விளைவித்து வந்த துஷ்ட ஜனங்களைக் கொன்று ஸ்ரீக்ருஷ்ணன் பூமிபாரத்தைப் போக்கினார்.

****

த்ரௌபதிக்கு அருள்புரிதல்

பகவான் ஸ்ரீக்ருஷ்ணனே 'காண்டவம்' என்னும் பெயருள்ள காட்டை அர்ஜுனனுக்கு உதவியாக இருந்து எரிக்கச் செய்தார். அந்தக் காட்டில் அச்சமயம் மயன் எனும் தானவன் வாழ்ந்து வந்தான். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் தானவன் மயனுடைய உயிரைக் காப்பாற்றினார். அதனால் அவன் ஸ்ரீக்ருஷ்ணனுடைய ஆணையின்படி பாண்டவர்களுக்கு ஒரு விசித்திரமான சபா மண்டபத்தை நிர்மாணித்துக் கொடுத்தான். இந்த சபா மண்டபம் மிகவும் அழகாக இருந்ததுடன் அதில் நீர் இருக்குமிடம் காய்ந்த பூமியாகவும், காய்ந்த இடம் நீருள்ளது போலவும் தென்பட்டன. ராஜஸூய யாகத்தின் போது துர்யோதனனும், தன் தம்பிகளுடன் தர்மராஜர் யுதிஷ்டிரரிடம் வந்திருந்தான். யாகம் முடிந்த பிறகு ஒரு நாள் அவன் மயன் அமைத்த சபா மண்டபத்திற்கு வந்தான். காய்ந்த பூமி என்று நினைத்து நடக்க முயன்ற போது நீர் நிறைந்த குண்டத்தில் விழுந்துவிட்டான். துர்யோதனன் நீரில் விழுந்ததைக் கண்ட பீமஸேனனும், ராணி த்ரௌபதியும் சிரித்தனர். ஒருவருடைய தவற்றுக்குச் சிரிப்பது நல்லதல்ல. இதனால் சிலசமயம் பெருத்த பகை உண்டாகிவிடுகிறது. துர்யோதனன், பீமன் சிரித்ததால் கோபம்

Koviloor Digital Library

நிறைந்தவனாய் அங்கிருந்து சென்றுவிட்டான். இந்த சிறிய சிரிப்பு எதிர்காலத்தில் மஹாபாரதப் போருக்கே காரணமாக அமைந்துவிட்டது.

துர்யோதனன், தன்னைக் கேலி செய்ததற்காகப் பாண்டவர்களைப் பழிவாங்க வேண்டுமென்று கபடமாக சூதாடுவதற்காக யுதிஷ்டிரருக்கு அழைப்பு விடுத்தான். சூதாடுதல் மிகவும் கெட்ட குணமாகும். சூதாட்ட சுழற்சியில் மனிதன் சர்வநாசமாகிவிடுகிறான். யுதிஷ்டிரர் சூதாட்டத்தில் தனது அரசு முழுவதையும், செல்வத்தையும், தன்னையும், தன் சகோதரர் களையும்கூட பணயம் வைத்துத் தோற்றுவிட்டார். சூதாட்ட போதையினால் அவர் தன் ராணி த்ரௌபதியையும் பணயம் வைத்துத் தோற்று விட்டார். கொடியவனான துர்யோதனன் அவையோர் நிறைந்த சபைக்கு த்ரௌபதியை அழைக்கச் செய்தான். துர்யோதனனின் தம்பி துச்சாஸனன் த்ரௌபதியின் தலைமுடியைப் பற்றி சபைக்கு இழுத்து வந்தான். துர்யோதனன் கூறியதால் அந்தப் பாண்டவ பட்டமகிஷியை எல்லோருக்கும் முன்னால் நிர்வாணமாக்க அவரது புடவையை இழுக்கத் தொடங்கினான்.

பாண்டவர்கள் சூதில் தோற்றிருந்தனர். அவர்களால் பேச முடியவில்லை. துச்சாஸனனுக்கு அறுபதினாயிரம் யானைபலமிருந்தது. பாவம் த்ரௌபதி! அவனிடமிருந்து த்ருபத புத்ரி தன் மானத்தை எவ்வாறு காத்துக் கொள்ள முடியும்? துர்யோதனனிடமிருந்த பயத்தால் மற்ற யாரும் பேசவேயில்லை. துச்சாஸனனை யாரும் தடுக்காததைக் கண்ட த்ரௌபதி கவலையடைந்து பகவான் ஸ்ரீக்ருஷ்ணனை அழைத்தார். துன்பத்தால் பிடிக்கப்பட்டு பகவானை யார் அழைத்தாலும்

Koviloor Digital Library

பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் நிச்சயம் அவரைக் காப்பாற்றுகிறார். யாரும் அங்கு ஸ்ரீக்ருஷ்ணன் வந்ததைப் பார்க்கவில்லை. ஆனால் பகவானின் விருப்பப்படி த்ரௌபதியின் புடவை வளர்ந்து கொண்டே சென்றது. துச்சாஸனன் புடவையை இழுக்க இழுக்க அது பல வண்ணப் புடவை களாகத் தோன்றிக் கொண்டே வந்தது. அங்கு மலைபோல புடவை குவிந்துவிட்டது. துச்சாஸனன் வியர்வையால் நனைந்துவிட்டான். அவனது கைகள் களைத்துவிட்டன. ஆனால் த்ரௌபதியின் புடவை அப்படியே இருந்து வந்தது. துச்சாஸனன் மிகவும் களைத்துச் சேலையை இழுப்பதை விட்டுவிட நேர்ந்தது. துர்யோதனனின் தந்தை ராஜா த்ருதராஷ்டிரர் பாண்டவர்களுக்கு அவர்கள் சூதில் இழந்த அரசைத் திரும்ப அளித்தார். ஆனால் துர்யோதனன் மறுபடியும் சூதாடும்படி கூறினான். இம்முறை தோற்றவர்கள் பன்னிரெண்டு ஆண்டுகள் வனவாஸமும், மேலும் ஓராண்டு மறைந்து வாழவும் வேண்டும் என்று நிபந்தனை வைக்கப்பட்டது. யுதிஷ்டிரர் மறுபடியும் சூதில் தோற்றார். எனவே அவர் தன் தம்பிகளுடனும், த்ரௌபதியுடனும் காட்டிற்குச் செல்ல வேண்டியதாயிற்று.

கொடிய குணங்கொண்ட துர்யோதனன், காட்டிலும் பாண்டவர்களுக்கு ஓயாமல் துன்பம் தரும் உபாயங்களையே செய்து வந்தான். ஒரு முறை 'துர்வாஸ' முனிவர் துர்யோதனனின் இடத்திற்கு வந்தார். துர்யோதனன் முனிவருக்கு நன்கு சேவை செய்து அவரை மகிழ்வித்தான். மகிழ்ச்சியடைந்த துர்வாஸ முனி வரம் கேட்குமாறு கூறியதும், அவன் "தாங்கள் தங்களுடைய சிஷ்யர் களுடன் ஒரு நாள் காட்டில் யுதிஷ்டிரரின்

Koviloor Digital Library

விட்டிற்குச் சென்று உணவருந்த வேண்டும். ஆனால் தாங்கள் பிற்பகல் மஹாராணி த்ரௌபதி உண்டு முடித்த பின்னரே செல்ல வேண்டும்" என்று கேட்டான். துர்வாஸர் இந்தப் பேச்சை ஒப்புக் கொண்டார்.

தர்மராஜரான யுதிஷ்டிரர் தவம் செய்து சூர்யநாராயணனை மகிழ்வித்திருந்தார். சூர்யநாராயணன் அவருக்கு ஒரு பாத்திரம் அளித்திருந்தார். அந்தப் பாத்திரத்தில் காலை த்ரௌபதி சிறிது கீரை செய்தால்போதும். அவர் அதிலிருந்து எவ்வளவு அன்னம் எடுத்தாலும் அது குறையாது பாத்திரம் நிறைந்தே இருக்கும். அதிலிருந்து த்ரௌபதி உணவு உண்டு முடித்தபின் பாத்திரத்தில் எதுவும் இருக்காது. துர்யோதனன் இந்த விஷயத்தை அறிவான். அதனாலேயே அவன் துர்வாஸ முனிவரை த்ரௌபதி உணவு உண்டு முடித்த பிறகு யுதிஷ்டிரரிடம் செல்லுமாறு கூறியிருந்தான். துர்வாஸர் மிகுந்த கோபக்காரரர். அவருடன் பத்தாயிரம் சீடர்கள் கூடவே இருந்தனர். பாண்டவர்கள் துர்வாஸருக்கும், அவருடைய சீடர்களுக்கும் உணவு அளிக்க முடியாது; அதனால் கோபம் மிகுந்த முனிவர் துர்வாஸர் சாபமளித்துப் பாண்டவர்களைச் சாம்பலாக்கிவிடுவார் என்று துர்யோதனன் நினைத்தான்.

ஒருநாள் துர்வாஸர் தன்னுடைய சீடர்களுடன் பிற்பகலுக்குப்பின் காட்டில் யுதிஷ்டிரரிடம் சென்றார். அவரிடம் உணவு தயாராக வைக்குமாறு கூறி நீராடுவதற்காகக் குளத்திற்குச் சென்று விட்டார். த்ரௌபதி உணவு உண்டு முடித்து விட்டார். சூர்யநாராயணன் அளித்த பாத்திரத்தில் ஏதுமில்லை. துர்வாஸருக்கு உணவு கிடைக்கா

Koviloor Digital Library

விடில் அவர் நிச்சயம் சபித்துவிடுவார். த்ரௌபதி ராணி மிகவும் கவலையுற்றார். அவர் கவலையடைந்து தன்னைக் காப்பாற்றுமாறு பகவான் ஸ்ரீக்ருஷ்ணனைக் கூவியழைத்தார். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன், த்ரௌபதி அழைத்த உடனே அங்கு போய் சேர்ந்துவிட்டார். த்ரௌபதியிடம் உணவளிக்குமாறு கேட்டார். த்ரௌபதியிடம் ஏதுமில்லை. ஸ்ரீக்ருஷ்ணர் அவரிடம் பாத்திரத்தைக் கேட்டு வாங்கி அதில் ஒட்டியிருந்த ஒரு கீரைப் பருக்கையைத் தேடி "இந்த இலையால் உலகம் முழுவதும் திருப்தியடையட்டும்" என்று கூறித் தன் வாயில் போட்டுக் கொண்டார். ஸ்ரீக்ருஷ்ணர் தன் வாயில் கீரையைப் போட்டுக் கொண்ட உடனேயே குளத்தில் நீராடிக் கொண்டிருந்த துர்வாஸருக்கும், அவருடைய சிஷ்யர்களுக்கும் வயிறு பெருத்து விட்டன. துர்வாஸர் சிஷ்யர்களிடம் "பாண்டவர்கள் பகவானுடைய பக்தர்கள். அவர்கள் செய்த உணவு வீணாகிப் போனால் நம்மை சாபம் கொடுத்து சாம்பலாக்கிவிடுவார்கள். நம்முடைய வயிறு நிரம்பிவிட்டது. இப்போது இங்கிருந்து ஓடிவிடுவதுதான் நல்லது" என்று கூறித் தன் சிஷ்யர்களுடன் அங்கிருந்து ஓடிவிட்டார்.

****

பக்தர்களுக்கு அருள்புரிதல்

த்ரேதாயுகத்தில் 'ந்ருகன்' என்ற பெயருடைய ஒரு பெரிய வள்ளல் அரசனாக இருந்தார். அவர் தினந்தோறும் லக்ஷக்கணக்கான பசுக்களை அந்தணர்களுக்கு தானமாக அளித்து வந்தார். ஒரு நாள் ஓர் அந்தணருடைய பசு ஓடி வந்து மன்னர் ந்ருகருடைய பசுக்களோடு கலந்து

Koviloor Digital Library

விட்டது. மன்னன் தவறுதலாக அந்தப் பசுவை மற்றொரு அந்தணருக்கு தானமளித்துவிட்டார். அந்தணருடைய பசுவை எடுத்துக் கொண்ட பாவத்தால், மன்னன் ந்ருகன் இறந்த பிறகு பச்சோந்தி ஆகவேண்டியதாயிற்று. த்வாரகாவிற்கு அருகில் ஒரு வறண்ட - நீரற்ற - கிணற்றில் அவர் மிகப்பெரிய பச்சோந்தியாகக் கிடந்தார். ஒரு நாள் த்வாரகாவைச் சேர்ந்த சிறுவர்கள் சிலர் விளையாடியவாறு அந்தக் கிணற்றுக்கு அருகில் வந்தார்கள். வறண்ட கிணற்றில் மிகப் பெரியதான பச்சோந்தி ஒன்று விழுந்திருப்பதைக் கண்ட அந்தச் சிறுவர்கள் கருணைகூர்ந்து அதை வெளியேற்ற முயன்றனர். பச்சோந்தியை சிறுவர்களால் வெளியேற்ற இயலாமல் போகவே அவர்கள் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனிடம் ஓடி வந்தனர். பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் அங்கு வந்தார். அவர் ஒரு கையாலேயே அப்பச்சோந்தியை வெளியேற்றி விட்டார். பகவானின் கைபட்டதால் ந்ருகரின் பாவமனைத்தும் நசித்துப் போயின. அவர் பச்சோந்தி உடலிலிருந்து விடுதலை பெற்று தேவனாகிவிட்டார். பகவானைத் துதித்தபடி மேலுலகத்திற்குச் சென்றுவிட்டார்.

ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் அவந்திகாபுரியிலுள்ள சாந்தீபனி முனிவரிடம் படித்தபோது அவருடன் ஸுதாமா என்னும் பெயருடைய ஓர் அந்தணரும் படித்து வந்தார். கல்வி பயின்று முடிந்தபின் ஸுதாமா தன் வீட்டிற்குச் சென்றார், திருமணம் செய்து கொண்டார். ஸுதாமா இரவும், பகலும் பகவானை பூஜித்து வந்தார். அவர் மிகவும் ஏழை. இருப்பினும் யாரிடமும் எதையும் கேட்க மாட்டார். கேட்காமல் யாராவது, ஏதேனும் அளித்தார்களே யானால் அதன் மூலமாக குடும்பத்தின் நிர்வாகம்

Koviloor Digital Library

நடந்து வந்தது. அவரது வீட்டில் கந்தல் துணிகளும், உடைந்த பாத்திரங்களும், கிழிந்த பாய்களுமே இருந்தன. அவருடைய மனைவி சுசீலா மிகவும் பதிவிரதை. அவள் ஸுதாமாவிற்கு உணவளித்து விட்டு, தான் பட்டினியாக இருந்து விடுவாள். ஆனால் ஸுதாமாவிற்குக்கூட உணவளிக்க ஏதும் கிடைக்காமல் போனால் அன்று அவள் மிகுந்த துயரமடைவாள். அதனாலேயே அவள் அடிக்கடி ஸுதாமாவை த்வாரகாவிற்கு ஸ்ரீக்ருஷ்ணனிடம் செல்லுமாறு கூறி வந்தாள். மனைவி அடிக்கடி கூறியதால் ஒரு நாள் கிழிந்த பழைய துணியில், மற்ற வீடுகளில் கேட்டுப் பெற்ற நான்குபிடி அவலை முடிந்து கொண்டு ஸுதாமா த்வாரகாவிற்குச் சென்றார்.

ஸுதாமா ஸ்ரீக்ருஷ்ணனுடைய மாளிகையை அடைந்தார். ஸ்ரீக்ருஷ்ணன் அவரைக் கண்டதுமே ஓடிவந்து மார்போடு அணைத்துக் கொண்டார். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் அவரைத் தன்னுடைய சொந்தக் கட்டிலில் உட்கார வைத்தார். தன் கைகளால் ஸுதாமாவின் கால்களைக் கழுவினார். த்வாரகாவின் செல்வ வளத்தைக் கண்ட ஸுதாமாவிற்குத் தான் கொண்டு வந்த அவலை ஸ்ரீக்ருஷ்ணனுக்குக் கொடுக்க விருப்பமுண்டாக வில்லை. ஆனால் பகவான் மிகவும் விலையுயர்ந்த பொருட்களையா விரும்புகிறார்? அவர் அன்பை யல்லவா பார்க்கிறார். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் தானாகவே ஸுதாமாவின் அவல் முடிச்சை எடுத்துக் கொண்டார். அதிலிருந்து ஒரு பிடி அவலைச் சாப்பிட்டுவிட்டார். பகவான் ஒரு பிடி அவலை உண்டதுமே ஸுதாமாவிற்கு இகலோக-பரலோக செல்வமனைத்தும் கிடைத்து விட்டது. 'விச்வகர்மா' எனும் தேவர்

Koviloor Digital Library

பகவானுடைய விருப்பத்தையறிந்து ஸுதாமாவின் குடிசையை அரண்மனையாக்கிவிட்டார். அவருடைய கிராமத்தை த்வாரகாவைப் போன்ற நகரமாக்கிவிட்டார். அங்கு செல்வம், இரத்தினங்கள், யானை, குதிரை அனைத்தையும் வைத்துவிட்டார். ஆனால் ஸுதாமாவிற்கு இந்த விவரம் ஏதும் தெரியாது. த்வாரகாவில் ஶ்ரீக்ருஷ்ணசந்த்ரன் அவரை சிறப்பாக வரவேற்று நன்கு மரியாதை-உபசரணை செய்தார். ஆனால் அவர் வீடு செல்லக் கிளம்பியபோது பொருள் ஏதும் தரவில்லை. ஸுதாமா பகவானிடம் யாதொன்றையும் யாசிக்கவில்லை. பகவானும் எதுவும் கூறாமல் நிறைய செல்வத்தை அருளிவிட்டது, வீடு திரும்பிய பின்தான் ஸுதாமாவிற்குத் தெரிந்தது. அதனால் ஸுதாமாவின் பக்தி மேலும் அதிகரித்துவிட்டது. அவர் முதலிலிருந்ததைவிட பகவானை அதிகம் பூஜிக்கலானார்.

அக்காலத்தில் 'பஹுலாச்வன்' என்பவர் மிதிலையின் மன்னனாக இருந்தார். மன்னன் பஹுலாச்வன் பகவான் ஶ்ரீக்ருஷ்ணனிடம் மிகுந்த பக்தி கொண்டிருந்தார். அவரது நகரத்தில் 'ச்ருததேவன்' என்னும் பெயருடைய பகவானின் பக்தரான ஓர் ஏழை அந்தணரும் இருந்தார். அந்த இருவரின் பக்தியால் மகிழ்ச்சியுற்ற ஶ்ரீக்ருஷ்ணசந்த்ரன் மிதிலைக்குச் சென்றார். 'பகவான் என் மீது அருள்கூர்ந்து வந்திருக்கிறார்' என்று மன்னனும் நினைத்தான். அந்தணரும் 'என் மீது கருணை வைத்து பகவான் வந்துள்ளார்' என்று நினைத்தார். இருவரும் ஒரே சமயம் பகவானிடம் தத்தம் வீட்டிற்கு வருமாறு வேண்டிக்கொண்டனர். பகவானுக்கோ பணக்காரன்-ஏழை என்ற வேறுபாடு கிடையாதே. அவருக்குத் தன்

Koviloor Digital Library

பக்தர்கள்தான் ப்ரியமானவர்கள். மன்னர், அந்தணர் இருவருமே பகவானின் உண்மையான பக்தர்கள். ஆகையினால் பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் இரு உருவம் எடுத்துக் கொண்டார். ஓர் உருவத்தோடு அவர் அரசனின் வீட்டிற்கும், மற்றொரு உருவத்தில் அந்தணரின் வீட்டிற்கும் சென்றார். இவ்விதம் பகவான் இருவரையும் மகிழ்வித்தார். இருவரின் வீட்டிலும் சில நாட்கள் இருந்துவிட்டு த்வாரகாவிற்குத் திரும்பி வந்தார்.

****

பாண்டவர்களுக்கு உதவிபுரிதல்

பாண்டவர்கள் வனவாஸ காலத்தைக் கழித்துவிட்டார்கள். ஆனால் துர்யோதனன் போர் புரியாமல் பாண்டவர்களுக்கு அவர்களுடைய ராஜ்யத்தைத் திருப்பித் தரத் தயாராக இல்லை. பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் பாண்டவர்களுடைய தூதனாக ஹஸ்தினாபுரத்திற்குச் சென்றார். துர்யோதனன் அவரை வரவேற்க மிகுந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தான். ஆனால் பகவான் அவனுடைய வீட்டில் உணவருந்த ஒப்புக் கொள்ளவில்லை. அவர் விதுரரின் வீட்டிற்குச் சென்று தங்கினார். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் விதுரருடைய வீட்டிற்கு வந்தபோது விதுரர் வீட்டில் இல்லை. விதுரரின் மனைவி, பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் தன் வீட்டிற்கு வந்ததைக் கண்டு பக்தியில் மூழ்கி பித்தம் பிடித்தவர் போலாகி விட்டார். அவர் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனுக்கு வாழைப் பழத்தை அளிக்க உட்கார்ந்தவர் வாழைப்பழத் தோலை ஸ்ரீக்ருஷ்ணனுக்கு அளித்துவிட்டு பழத்தை வீசியெறியத் தொடங்கினார். தான் என்ன செய்து

Koviloor Digital Library

கொண்டிருக்கிறோமென்றே அவருக்குத் தெரியவில்லை. ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனும் வாழைப்பழத்தின் தோல்களையே மிகவும் இனிப்பதாகக் கூறி சாப்பிட்டுக் கொண்டேயிருந்தார். விதுரர் வீட்டுக்கு வந்தவுடன் தன் மனைவியைத் தடுத்தார்.

கௌரவர்களின் அவையில் ஸ்ரீக்ருஷ்ணன் துர்யோதனனிடம் போரிடுவதால் அவனுக்குத்தான் அழிவு நேரும் என்பதை எடுத்துக் கூறினார். பாண்டவர்கள் ஐந்து கிராமங்களைப் பெற்றுக் கொண்டு சமாதானமாகியிருப்பார்கள். ஆனால் துர்யோதனனோ போரிடுவதிலேயே குறியாக இருந்தான். மாறாக அவன் ஸ்ரீக்ருஷ்ணனையே பிடித்து சிறையிலிடுவது பற்றி யோசிக்கத் தொடங்கினான். பகவான் ஸ்ரீக்ருஷ்ணனை யாரால் பிடிக்க முடியும்? ஸ்ரீக்ருஷ்ணன் தன்னுடைய மிகப்பெரிய [விராட் ரூபத்தை) உருவத்தைக் காட்டியதும் துர்யோதனனுடைய சூழ்ச்சிச் செயல்கள் எல்லாம் மறைந்துவிட்டன. துர்யோதனன் எந்த அறிவுரையையும் ஏற்றுக் கொள்பவனல்ல என்பதைக் கண்ட பகவான் பாண்டவர்களிடம் திரும்பி வந்தார்.

போர் நடைபெறுவது உறுதியானதும் கௌரவர்களும், பாண்டவர்களும் தங்களைச் சார்ந்த மன்னர்களைப் போரில் உதவிபுரிய அழைக்கலாயினர். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனிடம் உதவி கேட்பதற்காக துர்யோதனன், அர்ஜுனன் இருவரும் ஒன்றாகவே த்வாரகாவை அடைந்தனர். ஸ்ரீக்ருஷ்ணர் அந்த சமயம் தூங்கிக் கொண்டிருந் தார். துர்யோதனன் சிறிது முன்னால் போய்ச் சேர்ந்தான். அவரது தலைப்பக்கம் ஒரு மேடையில் உட்கார்ந்துக் கொண்டான். அர்ஜுனன் பின்னால் சென்றார். பகவானுடைய காலருகே கைகூப்பிய

Koviloor Digital Library

வாறு நின்று கொண்டிருந்தார். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் எழுந்தவுடன் முதலில் அர்ஜுனனைப் பார்த்தார். துர்யோதனன் முதலில் வந்தான். அர்ஜுனனே முதலில் கண்ணுக்குத் தென்பட்டார். ஆகையினால் பகவான் "ஒருபுறம் என்னுடைய பதினான்கு கோடி போர் வீரர்கள் இருப்பார்கள்; போர் புரிவார்கள். மற்றொருபுறம் நான் மட்டுமே இருப்பேன்; ஆனால் நான் ஆயுதம் ஏந்த மாட்டேன்" என்று கூறினார். அர்ஜுனன், பகவான் ஸ்ரீக்ருஷ்ணனின் ப்ரபாவத்தை அறிந்தவர். அவர் "தாங்கள் ஆயுதம் தாங்கினாலும், தாங்காவிட்டாலும் பரவாயில்லை. நான் தங்களையே என் பக்கம் விரும்புகிறேன்" என்று கூறினார். துர்யோதனன் பதினான்கு கோடி சேனையைப் பெற்று மகிழ்ச்சியடைந்துவிட்டான். அவன் "ஸ்ரீக்ருஷ்ணன் ஆயுதத்தையே எடுக்காதபோது போரில் என்ன உதவி செய்யப் போகிறார்?" என்று நினைத்தான்.

ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் பாண்டவர் பக்கத்தைச் சார்ந்தவராகிவிட்டார். அவர் போரில் அர்ஜுனனுடைய தேரை ஓட்ட ஒப்புக் கொண்டார். மஹாபாரதப் போரில் முதல் நாள் அர்ஜுனனுடைய தேர் இருபடைகளுக்கும் இடையில் வந்ததும் அர்ஜுனன் "கௌரவர்களின் பக்கமும் நம்முடைய சம்பந்திகளே [நம்மைச் சார்ந்த - தொடர்புடையவர்களே] உள்ளனர். நான் போர் புரிந்து நம்முடைய உறவினர்களையே கொல்ல மாட்டேன்" என்று கூறத் தொடங்கினார். போர்களத்திற்கு வந்தபின் ஒரு வீரன் இவ்வாறு கூறுவது சரியல்ல. பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் அர்ஜுனனுக்கு ஸ்ரீமத்பகவத்கீதையை உபதேசித்து 'ஆத்மா இறப்பதில்லை, அது அழியாதது. தர்மத்திற்காகப் போரிடுவது க்ஷத்ரியனுக்கு

Koviloor Digital Library

பாவமாகாது' என்பதை விளக்கினார். கீதை பகவானுடைய மிக அழகான உபதேசமாகும். கீதையில் ஞானத்தைப் பற்றிய ஏராளமான விஷயங்கள் உள்ளன. யார் தினந்தோறும் கீதையைப் படிக்கிறார்களோ, அவர்களுடைய பாவங்கள் எல்லாம் விலகிவிடும். பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் அவர்களிடம் மகிழ்ச்சியடைந்து விடுகிறார். கீதை உபதேசத்தைக் கேட்டபின் சரியான விஷயம் எது என்பது அர்ஜுனனுக்குப் புரிந்தது. அவர் போர் புரியத் தயாராகிவிட்டார்.

பகவான் எப்போதும் தன்னுடைய பக்தர்களுக்கு கௌரவமளிக்கிறார். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் மஹாபாரதப் போரில் ஆயுதம் எடுக்க மாட்டேன் என்று சபதம் செய்திருந்தார். ஆனால் போர் தொடங்கியதும் கௌரவர் தரப்பில் படைத் தலைவராக இருந்த பீஷ்ம பிதாமகர் "நான் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனை ஆயுதம் எடுக்க வைப்பேன்" என்று சபதம் செய்தார். பீஷ்ம பிதாமகர் பகவான் ஸ்ரீக்ருஷ்ணனுடைய தலையாய பக்தர். ஆகையினால் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் அவருடைய சபதத்தை சத்தியமாக்கி அவருடைய கௌரவத்தை நிலைநிறுத்துவதற்காகத் தன்னுடைய சபதத்தை மீறி ஒரு நாள் சக்கரத்தை எடுத்துவிட்டார். ஆனால் அர்ஜுனன் ஓடிவந்து பகவானைப் பிடித்துக் கொண்டார். "தாங்கள் தங்களுடைய சபதத்தை மீற வேண்டாம்" என்று அவரிடம் வேண்டிக் கொண்டார்.

மஹாபாரதப் போரில் பகவான் ஸ்ரீக்ருஷ்ணனின் உதவியாலேயே பாண்டவர்களுக்கு வெற்றி கிடைத்தது. பலமுறை கௌரவத்தரப்பு வீரர்களான த்ரோணாசார்யர், கர்ணன் முதலானோர் அர்ஜுனனாலேயே தடுக்க முடியாத

Koviloor Digital Library

பல அஸ்த்ரங்களை அவர் மீது செலுத்தினர். ஆனால் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் ஒவ்வொரு முறையும் ஏதாவது உபாயத்தால் அர்ஜுனனையும், பாண்டவர்களையும் காப்பாற்றினார். பகவான் ஸ்ரீக்ருஷ்ணனின் உதவியால் அர்ஜுனன் கௌரவர் தரப்பிலிருந்த மிகப்பெரிய வீரர்களை தோல்வியடையச் செய்து வந்தார்.

ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் பாண்டவர்களுடைய பக்தியின் காரணமாக அர்ஜுனனுக்குத் தேரோட்டியாகியிருந்தார். அவர் தேர்க்குதிரைகளைக் குளிப்பாட்டினார். அவற்றின் உடலில் பட்டிருந்த அம்புகளை எடுத்தார். இரவில் கண் விழித்து அவர் பாண்டவர்களைக் காத்து வந்தார். எல்லா வகையிலும் பாண்டவர்களுக்கு நன்மையையே செய்து வருமளவு ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனுக்குப் பாண்டவர்கள் மீது அன்பிருந்தது. பாண்டவர்கள் தர்மத்தைக் கடைப்பிடித்ததும், பகவான்மீது கொண்ட பக்தியின் சிறப்புமுமே இதற்குக் காரணமாகும்.

மஹாபாரதப் போர் முடிந்துவிட்டதும், கடைசி நாள் மாலை பாண்டவர்களுடைய கூடாரத்திற்குத் தேருடன் வந்த ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் அர்ஜுனனைத் தேரிலிருந்து இறங்குமாறு கூறினார். [அதற்கு முன்] தினமும் முதலில் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் தேரிலிருந்து இறங்கிவிடுவார். பிறகு அர்ஜுனன் இறங்குவது வழக்கம். அன்றைய தினம் அர்ஜுனன் தேரிலிருந்து இறங்கியபின் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் இறங்கினார். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் இறங்கிய உடனே தேர் தானாகவே தீப்பிடித்தது. தேரும், குதிரைகளும் எரிந்துவிட்டன. ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் "இந்தத் தேர் த்ரோணாசார்யர், கர்ணன் ஆகியோரின் திவ்ய

Koviloor Digital Library

அஸ்த்ரங்களால் முன்பே எரிந்து போய்விட்டது. இதுவரை நான் என்னுடைய ப்ரபாவத்தால் இதைத் [எரிவதிலிருந்து] தடுத்து வைத்திருந்தேன்" என்று விளங்கும்படி கூறினார்.

கதைப் போரில் பீமஸேனன், துர்யோதனனுடைய துடையை பிளந்துவிட்டார். போர் முடிந்து போய்விட்டது. ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் பாண்டவர்களையும், த்ரௌபதியையும் உடன் அழைத்துக் கொண்டு அன்றிரவு பாண்டவர்களுடைய கூடாரத்திலிருந்து வெகுதூரம் சென்று விட்டார். ஏனென்றால் அன்றிரவு கூடாரத்தில் தங்கினால் பாண்டவர்களுடைய உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும் என்பதை அவர் அறிந்திருந்தார். அன்றிரவு த்ரோணாசார்யாருடைய புதல்வன் அச்வத்தாமா பாண்டவர்களுடைய கூடாரத்திற்கு வந்தான். அவன் கூடாரத்திற்குத் தீயிட்டுவிட்டு தூங்கிக் கொண்டிருந்தவர்களனை வரையும் கொன்றுவிட்டான். ஆனால் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனின் அருளால் பாண்டவர்கள் அன்றைய தினமும் உயிர் தப்பிவிட்டனர்.

மஹாபாரதப் போரில் கௌரவர் அனைவருமே கொல்லப்பட்டனர். அவர்களுடைய சேனை முழுவதும்கூட கொல்லப்பட்டது. அவர்கள் தரப்பில் ஸ்ரீக்ருஷ்ணன் அளித்த த்வாரகாவின் படை, அதன் படைத்தலைவன் க்ருதவர்மா, அச்வத்தாமா, க்ருபாசார்யர் இவர்கள் மட்டுமே உயிர் பிழைத்தனர். பாண்டவர் பக்கம் பாண்டவ சகோதரர்கள் ஐவருடன், ஸ்ரீக்ருஷ்ணனைத் தவிர அர்ஜுனனுடைய சீடரான 'ஸாத்யகி' மட்டுமே உயிருடனிருந்தனர்.

பாண்டவரின் கூடாரத்தில் இரவு அச்வத்தாமா தீ வைத்து மற்றவர்களுடன்

Koviloor Digital Library

த்ரௌபதியின் ஐந்து புதல்வர்களையும் கொன்று விட்டான். அதனால் மறுநாள் அர்ஜுனன் அச்வத்தாமாவைப் பிடித்தார். ஆனால் த்ரௌபதி இரக்கப்பட்டு அவனை விடுவித்துவிட்டார். அர்ஜுனன் அச்வத்தாமாவைக் கொல்லவில்லை. ஆனால் அவன் தலையை மொட்டையடித்து விட்டார். அவன் தலையிலிருந்து விலைமதிப்பற்ற மணியைப் பிடுங்கிக் கொண்டார்.

அச்வத்தாமா மிகவும் துஷ்டன். அர்ஜுனன் அவன் தலையை மொட்டையடித்துவிடவே அவன் பாண்டவ வம்சத்தையே அழித்துவிடுவதற்காக ப்ரம்மாஸ்த்ரத்தை ஏவினான். ப்ரம்மாஸ்த்ரம் என்பதை எந்த முறையாலும் அழிக்க முடியாது. அர்ஜுனனின் மகன் அபிமன்யு மஹாபாரதப் போரில் கொல்லப்பட்டுவிட்டார். ஆனால் அவரது மனைவி உத்தரை கர்ப்பவதியாக இருந்தார். உத்தரையின் கர்ப்பத்திலிருந்த அந்தக் குழந்தையைத் தவிர பாண்டவர்களுடைய எந்தப் பிள்ளையும் உயிரோடு தப்பவில்லை. அச்வத்தாமா விடுத்த ப்ரம்மாஸ்த்ரம் உத்தரையை நோக்கிச் சென்றது. அதனுடைய ஒளியினால் நான்குபுறமும் தீ வைக்கப்பட்டாற்போல் தோன்றியது. கதியற்ற நிலையில் உத்தரை பயத்தின் காரணமாக ஸ்ரீக்ருஷ்ணனைச் சரணடைந்தாள். பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் தனது ஒரு ஸூக்ஷ்ம உருவத்தை ஏற்றார். அந்த உருவத்தால் அவர் உத்தரையின் கர்ப்பத்தினுள் சென்று கர்ப்பத்தைக் காப்பாற்றலானார். ஒன்பது மாதம் வரை அந்த ப்ரம்மாஸ்த்ரத்தின் அழிவுச் சக்தியிலிருந்து கர்ப்பத்திலிருந்தவாறே குழந்தையை பகவான் காப்பாற்றிக் கொண்டேயிருந்தார். இவ்வளவு முயன்றும் குழந்தை பிறந்ததுமே ப்ரம்மாஸ்த்ரம் அதைக்

Koviloor Digital Library

கொன்றுவிட்டது. அது இறந்தே பிறந்தது. ஆனால் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் மறுபடி அந்தக் குழந்தையை உயிர் பிழைக்கச் செய்துவிட்டார். உத்தரையின் இந்த மகனுக்குத்தான் 'பரீக்ஷித்' என்று பெயர் சூட்டப்பட்டது. இவருக்கே எதிர்காலத்தில் சுகதேவர் ஸ்ரீமத்பாகவதக் கதையைக் கூறினார்.

ஒரு முறை அர்ஜுனன், பகவான் ஸ்ரீக்ருஷ்ணனைக் காண த்வாரகாவிற்குச் சென்றிருந்தார். த்வாரகாவில் ஓர் அந்தணப் பெண்ணிற்கு குழந்தைகள் பிறந்ததுமே இறந்து வந்தன. அந்த அந்தணன் ஒவ்வொரு முறையும் இறந்த மகனை உக்ரஸேனரின் மாளிகை வாசலில் கொண்டு வந்து வைத்து மன்னரை பலவாறு நிந்தித்து வந்தான். அவ்வாறு ஒரு முறை அவன் தன்னுடைய இறந்த மகனை எடுத்துக் கொண்டு மன்னரின் மாளிகை வாசலில் வைக்க வந்தபோது அர்ஜுனன், அவருக்கு ஆறுதலாக அடுத்து பிறக்கவிருக்கும் குழந்தையைத் தான் காப்பாற்று வதாகவும், காப்பாற்ற இயலாவிடில் உயிரோடு நெருப்பில் விழுந்து எரிந்து விடுவதாகவும் உறுதி கூறினார். மறுமுறை அந்தணரின் மனைவிக்கு மகன் பிறக்கவிருந்த நேரம் அர்ஜுனன் அங்கு சென்றார். அவர் அந்தணரின் வீட்டை காற்றுகூட புகமுடியாதபடி நான்குபுறங்களிலும் அம்புகளால் மூடிவிட்டார். ஆனால் இம்முறையோ பிறந்த குழந்தையின் உடலும்கூட மறைந்து போய்விட்டது.

அர்ஜுனன் மிகவும் வெட்கிப் போனார். அவர் யோகபலத்தால் யமராஜனிடத்தும், மற்ற லோகங்களுக்கும்கூட சென்றார். ஆனால் அவருக்கு அந்தணரின் குழந்தை எங்குமே கிடைக்கவில்லை. அவநம்பிக்கையுற்ற அர்ஜுனன் எரியும் நெருப்பில் விழத் தயாரானார். ஆனால்

Koviloor Digital Library

ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் அவரைத் தடுத்தார். அர்ஜுனனை அழைத்துக் கொண்டு ஸ்ரீக்ருஷ்ண சந்த்ரன் பாற்கடலில் பகவான் நாராயணனின் லோகத்திற்குச் சென்றார். அங்கிருந்து அந்தணரின் பிள்ளைகளனைத்தையும் கொண்டு வந்தார். இவ்விதம் எப்பொழுதெல்லாம் அர்ஜுனன் அல்லது பாண்டவர்களுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்ததோ அப்பொழுதெல்லாம் ஸ்ரீக்ருஷ்ணன் அவர்களைக் காப்பாற்றினார்.

****

கிரஹண காலத்தில் நந்தபாபாவையும், ஆயர்களையும் சந்தித்தல்

ஒரு முறை சூரியகிரஹணம் பிடிக்க விருந்தது. முழுமையாக இருட்டிவிடுமளவு சூரிய கிரஹணம் பிடித்திருந்தது. முழு சூரியகிரஹணம் ஏற்படும்போது பகலிலும் இரவைப்போல இருள் பரவிவிடும். நட்சத்திரங்கள் கண்ணுக்கு புலப்படும். பழைய காலத்தில் சூரியகிரஹணத்தில் நீராடுவதற்காக, குருக்ஷேத்ரத்தில் மிகப்பெரிய திருவிழா நடைபெறுவது வழக்கம். சூரியகிரஹண சமயம் நெருங்கியபோது ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனும், ஸ்ரீபலராமனும் மற்ற யாதவர்களும் குருக்ஷேத்ரத் திற்குச் சென்றனர். உக்ரஸேன மஹாராஜா, ஸ்ரீவஸுதேவர் ஆகியோரும், அவர்களுடைய மனைவியரும் உடன் சென்றிருந்தனர்.

கிரஹண ஸ்நானம் செய்வதற்காக அச்சமயம் குருக்ஷேத்ரத்திற்கு இன்னும் பல மன்னர்களும், ரிஷி-மகரிஷிகளும்கூட வந்திருந்த னர். எல்லோரும் கிரஹண ஸ்நானம் செய்து

Koviloor Digital Library

அந்தணர்களுக்கு நிறைய தானம் செய்தனர். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் அந்தணர்களுக்கு ஏராளமான செல்வமும், தானியமும், ஆடைகளும் ஆயிரக் கணக்கான பசுக்களும் தானம் செய்தார். வ்ரஜத்தி லிருந்து நந்தபாபாவும், அன்னை யசோதாவும் எல்லா கோப-கோபியரும்கூட வந்திருந்தனர். கிரஹண சமயம் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனை தரிசிக்க முடியும் என்பதே வ்ரஜ மக்களின் பேராவலாக இருந்தது. ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் அண்ணன் பலராமனுடன் நந்தபாபா தங்கியிருந்த இடத்திற்குச் சென்றார். அவர்கள் நந்தபாபாவையும், அன்னை யசோதாவையும் வணங்கினார்கள். எல்லா கோப-கோபியருக்கும் மரியாதை செய்தார்கள்.

குருக்ஷேத்ரத்தில் வஸுதேவர் மிகப்பெரிய யாகம் ஒன்றைச் செய்தார். நந்தபாபாவையும், வ்ரஜ மக்களையும் அங்கு சந்தித்ததால் த்வாரகா மக்களும் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர். அவர்கள் எல்லோரும் அங்கு வெகுநாட்கள் தங்கியிருந்தனர். மழைக்காலம் நெருங்கியதும் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் நந்தபாபாவையும், ஆயர்களையும் மிகுந்த மரியாதையோடு வ்ரஜத்திற்கு அனுப்பி வைத்தார். த்வாரகா மக்களை உடன் அழைத்துக் கொண்டு அவர் த்வாரகாவிற்குத் திரும்பி வந்தார்.

****

தன்னுடைய சகோதரர்களை அழைத்துக் காட்டுதல்

ஸ்ரீக்ருஷ்ண-பலராமர் தனது குரு சாந்தீபனி முனிவருடைய இறந்துபோன மகனை யமராஜா விடமிருந்து இங்கு பூவுலகிற்கு அழைத்து வந்தனர்

Koviloor Digital Library

என்பதை தேவகியன்னை கேள்விப்பட்டிருந்தார். ஒரு நாள் தேவகியன்னை ஸ்ரீக்ருஷ்ண-பலராமரிடம் "கம்ஸன் என்னுடைய ஆறு பிள்ளைகளைக் கொன்றுவிட்டான். நான் என்னுடைய அந்தப் புதல்வர்களைப் பார்க்க விரும்புகிறேன்" என்று கூறினார்.

தாயை மகிழ்விப்பதற்காக ஸ்ரீபலராமனும், ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனும் தேரில் அமர்ந்து 'ஸுதல' லோகத்தில் பலியிடம் சென்றனர். அரசன் பலி, சகோதரர்கள் இருவரையும் பூஜித்தார். பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் பலியிடமிருந்து கம்ஸன் கொன்ற தேவகி மாதாவின் ஆறு புதல்வர்களையும் அழைத்துக் கொண்டு த்வாரகாவிற்கு வந்து விட்டார். தேவகியன்னை தன் இறந்த புதல்வர்கள் மீண்டும் வந்ததைக் கண்டு மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்.

ஸ்ருஷ்டியின் தொடக்கத்தில் 'மரீசி' முனிவருக்கு ஆறு பிள்ளைகள் தோன்றினர். அவர்கள் ஒரு முறை ப்ரம்மதேவனைக் கேலி செய்தனர். அதனால் ப்ரம்மா அவர்களை தைத்யர் களாகும்படி சாபமளித்துவிட்டார். அவர்கள் தைத்ய வம்சத்தில் பிறந்து ஸுதல லோகத்தில் ராஜா பலியிடம் இருந்தனர். பகவானின் யோகமாயை அவர்களையே தேவகி மாதாவின் புதல்வர்களாக் கினார். கம்ஸன் அவர்களைக் கொன்றுவிட்டதும் மீண்டும் அவர்கள் ஸுதலத்திற்குப் போய் சேர்ந்து விட்டனர். பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் அவர்களை ஸுதலத்திலிருந்து அழைத்து வந்தார். பகவானை தரிசனம் செய்ததால் அவர்களுடைய எல்லாப் பாவங்களும் விலகிவிட்டன. ப்ரம்மனின் சாபம் நீங்கிவிட்டது. ஆகையினால் அவர்கள் தேவர்களா கிவிட்டனர். அன்னை தேவகி, ஸ்ரீவஸுதேவர்,

Koviloor Digital Library

ஸ்ரீபலராமர், ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் ஆகியோரை வணங்கிவிட்டு அந்த ஆறு பாலகர்களும் ப்ரம்மலோகத்திற்குச் சென்றுவிட்டனர்.

****

பகவான் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் கோலோகத்திற்கு எழுந்தருளுதல்

பகவான் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் துஷ்டர்களை அழித்து பூமி பாரத்தைக் குறைப்பதற்காகவே தனது தெய்விகக் கோலோகத்திலிருந்து பூவுலகத்தில் அவதரித்திருந்தார். மஹாபாரதப் போரில் துஷ்ட மன்னர்கள் அனைவரும் கொல்லப்பட்டு விட்டனர். ப்ரம்மதேவன், பகவானிடம் இனி அவர் தன்னுடைய புனிதமான இடத்திற்கு வந்துவிட வேண்டும் என்று ப்ரார்த்தனை செய்து விண்ணப் பித்துக் கொண்டார். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் "யாதவர் கள் மிகுந்த வலிமையுடையவராகி விட்டனர். நான் சென்ற பிறகு இவர்கள் மக்களுக்குத் துன்பம் தரத் தொடங்குவார்கள். ஏனெனில் இவர்களுக்குத் தங்களுடைய வலிமையினால் ஆணவம் தோன்றி விட்டது. ஆகவே இவர்கள் தங்களுக்குள் போரிட்டு இறந்து விடுவார்களேயானால் பூமியின் பாரம் முழுவதும் தீர்ந்துவிடும்" என்று கருதினார். பகவான் அவதரித்த சமயம் தேவர்கள் தத்தம் அம்சத்தின் மூலம் யதுவம்சத்தில் பிறந்திருந்தனர். பகவான் தேவர்களையும் இப்பொழுது ஸ்வர்கத் திற்கு அனுப்பிவிட விரும்பினார். அதனால் ஒரு நாள் சில ரிஷிகள் த்வாரகாவிற்கு வந்தனர். யது குலத்தைச் சார்ந்த சில சிறுவர்கள் ரிஷிகளைக்

Koviloor Digital Library

கேலி செய்யவே பகவானின் விருப்பப்படி ரிஷிகள் யதுகுலம் அழிந்து போகுமாறு சாபமிட்டுவிட்டனர்.

ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் குழந்தைகளையும், பெண்களையும், முதியவர்களையும் வேறு இடத்திற்கு அனுப்பிவிட்டார். த்வாரகாவின் பலசாலியான மக்களுடன் அவர் ப்ரபாஸ தீர்த்தத்திற்கு வந்தார். ப்ரபாஸத்தில் மிகச்சிறிய விஷயத்திற்காக யதுகுல மக்களிடையே சண்டை-சச்சரவு உண்டாகிவிட்டது. அந்த சச்சரவு தங்களுக்குள்ளேயே அவர்கள் போரிடுமளவு பெரிதாக வளர்ந்துவிட்டது. யது வம்சத்தினர் அனைவரும் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் போரிட்டுக் கொண்டு வெட்டி மடிந்தனர்.

யதுகுல வீரர்கள் தங்களுக்குள் போரிட்டு இறந்தபின் பலராமர் கடலின் கரையில் உட்கார்ந்து யோகத்தின் மூலம் தன் உடலைத் துறந்துவிட்டார். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் ஓர் அரச மரத்தின் கீழ் சென்று அமர்ந்தார். அங்கு அவர் உத்தவருக்கும், மைத்ரேய முனிவருக்கும் ஞானத்தை உபதேசித்தார். இதன் பிறகு ப்ரம்மதேவன், சிவபிரான் மற்றும் தேவரனைவரும் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் தன்னுடைய கோலோகதாமத்திற்கு எப்படிச் செல்கிறார் என்பதைப் பார்ப்பதற்காக வந்தனர். ஆனால் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் கோலோகத்திற்குச் செல்லும் போது தன்னுடைய ஸ்வரூபத்தை மின்னல் போல் மறைத்துக் கொண்டுவிட்டார். அவர் தன் இருப்பிடத்திற்குச் சென்றபோது தேவர் எவராலுமே அவரைக் காண இயலவில்லை.

ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனின் தேரோட்டியின் பெயர் தாருகன். அவன் பெண்களிடமும், முதியவர்களிடமும் சென்று யதுகுல வீரர்கள் கொல்லப்பட்ட செய்தியைத் தெரிவித்தான். பெரும்பாலான

Koviloor Digital Library

முதியவர்கள் இந்த துன்பம் தரும் செய்தியைக் கேட்டவுடனேயே மூர்ச்சையாகி விழுந்து இறந்து விட்டனர். பெரும்பாலான பெண்கள் தங்களுடைய கணவரின் உடலோடு சிதையில் எரிந்து சதியாகி விட்டனர். அச்சமயம் அர்ஜுனன் த்வாரகாவில் தான் இருந்தார். இறந்த அனைவருக்கும் அவரே இறுதிச் சடங்குகளைச் செய்தார். ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனும் என்றைய தினம் தன் சொந்த இருப்பிடத்திற்குச் சென்றாரோ, அதற்கு ஏழாம் நாள் கடல் த்வாரகாபுரியை மூழ்கடித்தது. அங்கு ஸ்ரீக்ருஷ்ண சந்த்ரனுடைய மாளிகை மட்டுமே மீதமிருந்தது. உயிர் பிழைத்த குழந்தைகளையும், பெண்களையும் அழைத்துக் கொண்டு அர்ஜுனன் ஹஸ்தினாபுரம் வந்தார். பின்னால் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனுடைய கொள்ளுப்பேரனும், அநிருத்தனின் புதல்வனுமான 'வஜ்ரநாபனை' அவர் மதுராவிற்கு அரசனாக்கினார்.

ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனே சாட்சாத் பரமபுருஷனான பரமாத்மா. அவர் எங்கும் எப்போதும் இருக்கிறார். யார் அவரை அன்போடு பூஜிக்கிறாரோ, அவருக்கு அவர் இப்போதும்கூட தரிசனம் தருகிறார். ஸ்ரீக்ருஷ்ணனின் பெயரைக் கூறுவதாலும், அவருடைய கதையைப் படிப்பதாலும், கேட்பதாலும் மனிதர்களின் பாவங்கள் அனைத்தும் அழிந்து விடுகின்றன. அவனுக்கு இவ்வுலகத்திலும், பரலோகத்திலும்கூட மங்களமே உண்டாகிறது.

பகவான் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனுக்கு ஜெய்

****

Koviloor Digital Library

[உங்களைப் பரிசோதித்துக் கொள்ளுங்கள்]

கீழே சில கேள்விகள் உள்ளன. அவை சரியா, தவறா என்று மட்டும் பதில் கூறினால் போதும். ஒவ்வொரு வினாவிற்கும் பத்து மதிப்பெண். உங்களுக்கு இருநூறு மதிப்பெண் கிடைக்குமானால் நீங்கள் புத்தகத்தை கவனத்தோடு படித்திருக்கிறீர்கள் என்று தீர்மானித்துக் கொள்ளலாம். இதைவிடக் குறைவான மதிப்பெண் கிடைக்குமானால் புத்தகத்தில் மறுபடியும் மனதை ஈடுபடுத்தி படிக்க வேண்டும். விடைகள் கடைசியில் கொடுக்கப்பட்டிருக் கின்றன. அத்துடன் உங்களுடைய விடையை ஒப்பிட்டுப் பாருங்கள்.

1. ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் சிறைச்சாலையில் அவதரித்தார். அவருடைய தந்தை வஸுதேவர் அவரை இரவில் கோகுலத்தில் வைத்துவிட்டு வந்தார்.

2. நந்தர் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனைத் தன்னுடைய மகனாகவே எண்ணி வந்தார்.

3. ஸ்ரீக்ருஷ்ணன் பூதனையை கழுத்தை அழுத்திக் கொன்றுவிட்டார்.

4. பலராமர் ஒரு வண்டியைக் கவிழ்த்துவிட்டார். அதனால் சகடாஸுரன் இறந்துவிட்டான்.

5. அன்னை யசோதா ஸ்ரீக்ருஷ்ணனை உரலில் கட்டிவிட்டார். அந்த உரலை இழுத்தபடி ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் இரட்டை மருத மரங்களின் இடையில் சென்று அவற்றை வேரோடு விழச் செய்தார்.

Koviloor Digital Library

6. ஒரு முறை பகாஸுரன் கொக்கு உருவில் ஸ்ரீக்ருஷ்ணனை விழுங்கிவிட்டான். ஆனால் பின்னால் ஸ்ரீக்ருஷ்ணன் அவனுடைய அலகைப் பிடித்து அவனைக் கிழித்துப் போட்டார்.

7. ப்ரலம்பாஸுரனை பலராமர் ஒரு குத்துவிட்டு கொன்றார். தேனுகாஸுரனையும் அவர்தான் கொன்றார்.

8. அகாஸுரன் தனது வாயை ஒரு குகையென்று தோன்றுமளவு விரித்துக் கொண்டான். ஸ்ரீக்ருஷ்ணன் அந்தக் குகையைக் காண எல்லோருக்கும் முன்னால் அவனுடைய வாயினுள் நுழைந்துவிட்டார்.

9. காளியனின் மடுவில் ஸ்ரீக்ருஷ்ணன் தானாக குதித்தார். அவர் அந்த பாம்பின் படத்தில் நடனமாடிக் கொண்டேயிருந்தார். அவருடைய கட்டளைப்படிதான் காளிய நாகம் யமுனையைவிட்டுக் கடலுக்குச் சென்றது.

10. ஸ்ரீக்ருஷ்ணன் கோவர்தன மலையை பலராமனின் உதவியோடு எடுத்துக் கொண்டார். வ்ரஜத்திலிருந்த ஏராளமான மாளிகைகளை இந்த்ரன் மழை பெய்து அடித்துச் செல்ல வைத்தான்.

11. மதுராவிற்குச் சென்ற முதல்நாளே ஸ்ரீக்ருஷ்ணன் கம்ஸனுடைய வில்லை உடைத்துவிட்டார். அவர் ஆயுதம் ஏதுமின்றி கம்ஸனின் மிகப்பெரிய யானையைக் கொன்றுவிட்டார்.

12. ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் கம்ஸனை தலைமுடியைப் பற்றி பூமியில் ஓங்கி அடித்தார். கம்ஸனுடைய சகோதரர்களை பலராமர் கொன்றுவிட்டார்.

Koviloor Digital Library

13. ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் தன்னுடைய அண்ணன் பலராமனுடன் கல்வி பயில உஜ்ஜயினிக்குச் [அவந்திகாபுரி] சென்றார்.

14. கடலில் மூழ்கிக் கொண்டிருந்த தனது குரு புதல்வனை ஸ்ரீக்ருஷ்ணன் மூழ்குவதிலிருந்து காப்பாற்றி குருதேவரிடம் கொண்டு வந்து கொடுத்தார்.

15. காலயவனனிடம் பயந்து ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் ஓடிவிட்டார்.

16. த்வாரகா ஒரு மலையின் மீது அமைந்துள்ள நகரம், அதன் நான்குபுறத்திலும் சேறும், அடர்ந்த காடும் உள்ளன.

17. ஸ்ரீருக்மிணிதேவி ஸ்ரீக்ருஷ்ணனையே தன்னுடைய கணவனாக்கிக் கொள்ள விரும்பியதால்தான் அவர் ருக்மிணிதேவியை அபஹரித்தார்.

18. ராஜஸூய யாகத்தில் சிசுபாலன் வசை கூறிக் கொண்டே இருந்தபோதும் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் வெகுநேரம் வரை அமைதியாக அமர்ந்திருந்தார்.

19. சிசுபாலனின் பக்ஷத்தில் சால்வன் விமானத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டு, போர் புரிய த்வாரகாவிற்கு வந்தான். ஆனால் ஸ்ரீக்ருஷ்ணன் கீழே இருந்தே கதையால் அடித்து அவனுடைய விமானத்தை உடைத்துவிட்டார்.

20. ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன், துச்சாஸனன் இழுத்து இழுத்துக் களைத்து விழுமளவு, த்ரௌபதியின் புடவையை அதிகமாக்கிவிட்டார். ஆனால் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் அங்கு யாருக்கும் தென்படவில்லை.

Koviloor Digital Library

21. காட்டிலிருந்த பாண்டவர்களுக்கு அருள்புரிவதற்காக துர்வாஸ முனிவர் அங்கு சென்றார். யுதிஷ்டிரர் அவரை உணவருந்தச் செய்து விடையளித்தார்.

22. மஹாபாரதப் போரில் ஸ்ரீக்ருஷ்ணன், பாண்டவர்கள் பக்கம் இருந்ததால்தான், அவர்கள் வெற்றி பெற்றனர்.

23. ரிஷிகள் மிகுந்த கோபமடைந்து யது வம்சத்தை சபித்தனர். இந்த விஷயம் ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரனுக்குப் பிடிக்கவில்லை.

24. ஸ்ரீக்ருஷ்ணசந்த்ரன் விமானத்தில் அமர்ந்து கொண்டு தன்னுடைய கோலோகதாமத்திற்குச் சென்றுவிட்டார்.

விடைகள் - சரியும், தவறும்

1. சரி, 2. சரி, 3. தவறு, 4. தவறு, 5. சரி, 6. சரி, 7. சரி, 8. தவறு, 9. சரி, 10. தவறு, 11. சரி, 12. சரி, 13. சரி, 14. தவறு, 15. தவறு, 16. தவறு, 17. சரி, 18. சரி, 19. சரி, 20. சரி, 21. தவறு, 22. சரி, 23. தவறு, 24. தவறு.

Koviloor Digital Library

ஸ்ரீஹரி:

கோரக்பூர் கீதாப்ரஸ்ஸின் வெளியீடுகள்

	பக்கங்கள்	விலை
1. கீதா மாதுர்யம்	235	8.00
2. கர்ம ரஹஸ்யம்	72	3.00
3. சரணாகதி	84	3.00
4. உருவ வழிபாடு	64	1.00
5. தூய்மையான உணவுப்பழக்கம்	64	1.00
6. திருநாமஜபத்தின் மஹிமை	64	1.00
7. மஹாபாபத்திலிருந்து உன்னைக் காத்துக் கொள் & பிள்ளைகளின் கடமைகள்	125	2.00
8. கீதை கற்பதன் பயன்கள் & ஸத்யத்தைச் சரணடைந்தால் முக்தி	72	1.50
9. ஸத்ஸங்கத்தின் ஸாரமான தத்வங்கள்	64	0.75
10. குடும்பத்தில் எப்படி இருக்கவேண்டும்?	192	6.00
11. நாரத-பக்திஸூத்ரம்	32	1.00

Koviloor Digital Library
உ.கோவிலூர் KOVILOOR MADALAYAM மடாலயம்
3311
031,3

ஸ்ரீஹரி:

கோரக்பூர் கீதாப்ரஸ்ஸின் வெளியீடுகள்
[விரைவில் வெளிவர இருப்பவை]

1. ஸ்ரீஹநுமாந் சாலீஸா
2. பயனுள்ள கதைகள்
3. நள-தமயந்தி
4. ஸாவித்ரி-ஸத்யவான்
5. பக்தராஜ ஹனுமான்
6. மிக உயர்ந்த நிலையை அடைவதற்கான வழி
7. ஒன்றே செய்மின்! நன்றே செய்வீர்!!
8. எல்லோருக்கும் மேன்மை எப்படி ஏற்படும்?
9. நல்வாழ்க்கைக்கான நல்லுரைகள்

கிடைக்குமிடம்:

கோபால் சேவா டிரஸ்ட்,
82, கிருஷ்ணா டாக்கீஸ் ரோடு,
ஈரோடு - 638 003.
தொலைபேசி: 211668, 212702.

புத்தகங்கள் V.P.Pயில் அனுப்பி வைக்கப்படும்.